சமயமும் சமுதாயமும்

பதிப்பாசிரியர்
சூ. இன்னாசி

சென்னைப் பல்கலைக் கழகம்
1993

சமயமும் சமுதாயமும்

டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர்—தலைவர்

கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

சென்னைப் பல்கலைக்கழகம்
1993

முதற்பதிப்பு : 1993

உரிமை : சென்னைப் பல்கலைக்கழகம்

இவ்வெளியீடு குறித்து வாசகர்களின் கருத்துரைகள்
வரவேற்கப்படுகின்றன :
இயக்குநர் :
பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005.

விலை ரூ. 30/-

அச்சிட்டோர் : அழகு அச்சகம்,
10, தெற்கு மாடவீதி,
மைலாப்பூர்,
சென்னை–600 004.

முன்னுரை

தமிழகப் பல்கலைக்கழகங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. தமிழகப் பல்கலைக்கழகங்களின் தாய்ப் பல்கலைக்கழகம் என்ற பெருமைக்கு ஏற்ற வகையில் பல்வகைப் புதிய துறைகளைத் தொடங்கிய பெருமை அதற்கு உண்டு. இப் பல்கலைக்கழகத் தத்துவத்துறை ஓர் உயராய்வுத் துறையாகும். அஃதோடு அமையாது பல்வேறு சமயத்தத்துவங்களை ஆய்வதற்காகத் தனித்தனிச் சமயத்துறைகளையும் கொண்டுள்ளது.

இவ்வாறே பல்வேறு மொழித்துறைகளைக் கொண்டு இருக்கிற பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு மட்டும் மூன்று துறைகள் இருக்கின்றன. அவற்றுள் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை, தமிழில் வெளிவந்துள்ள கிறித்தவ இலக்கியங்களைப்பற்றி ஆய்வதே நோக்கமாகக் கொண்டது. சமயத்தத்துவங்களைப் பற்றி ஆய்வது இத்துறையின் நோக்கம் அன்று; எனினும் அவை வெளிப்படுகின்ற இலக்கியங்களை ஆய்வதைப் பணியாகக் கொண்டுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் கிறித்தவத் தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதையும் பல்வேறு நூல்கள் வழியாக வெளிக்கொணர முயற்சி மேற்கொண்டது. அவ்வப்பொழுது அறிஞர்களை அழைத்து ஆய்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்துள்ளது. அப்பணிகளுக்கிடையே ஒரு கருத்தரங்கு நடத்தத் திட்டமிட்டது. அக்கருத்தரங்கின் கருப்பொருள் சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியதாக அமையவேண்டும் என்று எண்ணியது. சமுதாயத்திற்காகத்தான் சமயமே தவிரச் சமயத்திற்காகச் சமுதாயம் அன்று என்று கருதியது. பல்கலைக்கழக நிதி உதவியுடன் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் எட்டாம் நாள் முதல் பத்தாம் நாள் முடிய அக்கருத்தரங்கு நடைபெற்றது.

''சமய இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்'' என்னும் தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல்வேறு சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள் பற்றி அவ் வத்துறையில் ஆய்வு மேற்கொண்ட அறிஞர்கள் கட்டுரைகளை வழங்கினர். கருத்தரங்கில் பங்கு பெற்றோர் மட்டும் பெற்ற அப் பயனை அக்கருத்தரங்கில் பங்கு பெறாதாரும் பெற வேண்டும் என்ற நோக்கில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சியின் பயனே இந்நூல்.

கருத்தரங்கு நடைபெற்று ஏறத்தாழ இரண்டாண்டுகள் ஆயினும் பல்கலைக்கழக நெறிமுறைகளுக்கேற்ப எதிர்ப்படுகின்ற நடைமுறைச் சிக்கல்களினால் தாமதமாக வெளிவருகிறது.

கருத்தரங்கில் கட்டுரை படித்ததோடு, கருத்தரங்கில் பங்கு பெற்றோர் விடுத்த வினாக்கள், கூறிய திருத்தங்கள் முதலிய வற்றை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு ஏற்றவாறு தத்தம் கட்டு ரைகளைச் செப்பம் செய்து தந்த கட்டுரையாளர் அனைவருக்கும் பணிவார்ந்த நன்றி.

டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர் & தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005

சென்னை
4—1—93

உள்ளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	
1.	சைவ சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள்	1
2.	பெரியபுராணம் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்	9
3.	தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சமுதாயப் பார்வை	20
4.	கன்னட வீர சைவ இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்	26
5.	சமய இலக்கியங்களில் சமுதாய உணர்வுகள் (வைணவ இலக்கியம்)	36
6.	வைணவ சமய இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாயப் பழக்கங்கள்	47
7.	பௌத்த சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள்	59
8.	அரிச்சந்திர புராணமும் யோபுடைய சரித்திரமும் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்	68
9.	கிறித்தவ நாடகங்கள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்	81
10.	மலையாள சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள்	92
11.	வடமொழி இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாயம்	98
12.	இந்தி சமய இலக்கியங்களில் சமுதாய மேம்பாடு	104
13.	உருது இலக்கியங்கள் காட்டும் சமுதாயச் சிந்தனைகள்	114

1. சைவ சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள்

டாக்டர் வை. இரத்தினசபாபதி
பேராசிரியர் & தலைவர்
சைவசித்தாந்தத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

திருநின்ற செம்மை என்று திருநாவுக்கரசரால் குறிப்பிடப் பெறும் விளக்கத்தைத் தன்னகத்துக் கொண்டு விளங்கும் பரம் பொருளே சிவம். சிவபரம்பொருளோடு சம்பந்தம் உடையதே சைவம்.

சிவபரம்பொருளோடு தொடர்புடைய சைவப் பிரிவுகள் பல. அவைகளுக்குரிய இலக்கியங்களும் மிகப்பல. சைவசித்தாந்தம், வீர சைவம், காசுமீர சைவம், சிவாத்வைதசைவம், கேவலாத்வைத சைவம் போன்ற பிரிவுகளும் அவை பற்றிய நூல்களும் மிகப் பலவாக உள்ளன. அவைகளையெல்லாம் முறைப்படுத்தி எடுத்து ஆய்வு செய்ய விரும்பினால் கட்டுரை விரியும்.

எனவே சைவசித்தாந்தச் சார்புடைய இலக்கியங்களை மட்டுமே இங்கு எடுத்துக்கொண்டு அவைகளில் சமுதாய உணர்வுகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை முன்னிறுத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சமுதாய உணர்வு

சமுதாய உணர்வு வேறு; சமுதாய அறிவு வேறு. சமுதாய நோக்கு இரண்டிலும் உண்டு என்றாலும் குறிக்கோள் நிலையில் இரண்டும் தம்முள் மாறுபடுவன.

குறிக்கோள் நிலைச் சமுதாயம் இது என வரையறை செய்யவும் அவ்வரையறையின் வண்ணம் அத்தகைய சமுதாயத்தை அமைக்கவும் வழிவகை செய்வது சமுதாய உணர்வு.

தான் வாழும் சமுதாயத்தில் அமைந்துள்ள சில கூறுகள் அல்லது நிகழ்வுகள் ஆகியவைகளைச் சுட்டிச் செல்கின்ற அளவில் உதவுவது சமுதாய அறிவு. சமுதாயத்தில் திருமணம் இருக்கிறது;

விருந்து நடைபெற்றிருக்கிறது. கல்வி உண்டு, சாதி உண்டு, குலம் உண்டு என்றெல்லாம் சமுதாயச் செய்திப் பட்டியல் தருவதற்கு உதவுவது சமுதாய அறிவு. ஆனால் கூடி வாழும் மக்களிடம் சமுதாயம் என்ற உயிரோட்டம் காணப்பெறுகிறதா என்ற அடிப்படையில் சமுதாயத்தை நோக்கும் உயிரோட்டத்தைக் கொண்டதே சமுதாய உணர்வு.

ஒத்த இருப்பு

சமுதாய உணர்வின் அடிப்படையானது ஒத்த இருப்பு (Common Existence) என்ற கருத்தமைவை அடிப்படையாகக் கொண்டது என்று கருத வேண்டியுள்ளது.

நான் ஓர் இருப்புடைய பொருள் என்று எண்ணும் அதே நேரத்தில் என்னுடைய இருப்பைப் போலவே இருப்புடைய பொருள்கள் பலவும் இங்கே உண்டு என்பதை ஏற்று என்னுடைய இருப்பினால் அவைகளின் இருப்புக்கும் அவைகளின் இருப்பினால் என்னுடைய இருப்புக்கும் சில அகநிலை, புறநிலைத் தாக்கங்கள் அமைகின்றன என்று இணைத்துக் காண்பதுதான் சமுதாயத்தின் உயிர்நாடி.

நான் தனிமனிதனே என்றும், எனக்குத் தனித்த இருப்பு உண்டு என்றும் எண்ணுகின்ற நான், என் செயல்களையெல்லாம் என் இருப்பை மட்டுமே உள்ளிட்ட செயல் எனக் கொள்ளாமல் என்னுடைய தனிச் செயல் என்னுடைய இருப்பின் மூலமாகத் தொடர்பு இருப்புக் கொண்டுள்ள ஏனைப் பொருள்களையும் சென்று தாக்கும் எனக் கொள்ளும் கொள்கையின் அடிப்படையில் தான் சமுதாயம் என்ற கருத்தமைவு மலர்கிறது என்பதை உணர்ந்து தெளிதல் வேண்டும்.

இரண்டு சான்றுகள்

1. சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோராகிய பிசிராந்தையார் தாம் நரையில்லாமல் வாழ்வதற்கு ஒரு காரணம் கூறுகின்றார். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரில் இருப்பதால் எனக்கு நரை இல்லை என்கிறார். சான்றோர்கள் தனித்தனி இருப்பு உடையவர்களே. ஆன்று அவிந்து அடங்கிக் கொள்கை உடையவர்களாக இருப்பது அவரவர்களது தனித்தனி முயற்சியும் வெற்றியும். ஆனால் அவர்களின் முயற்சியும் வெற்றியும் அவர்களின் இருப்பைத் தாக்கிப் பின்னர், அந்தத் தாக்கம் அவர்களின் இருப்பினோடு இணைப்பு இழுப்புக் கொண்டிருக்கிற ஏனைப் பொருள்களின் இருப்பையும் தாக்குகின்றது. அத்தகைய இணைப்பு இருப்புத்தத்துவமே சமுதாயத்தின் ...ட்டம்.

2. கழற்றறிவார் நாயனார் எனப் பெறும் சேரமான் பெருமாள் நாயனார் வரலாற்றையும் இங்கே காணலாம். ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற கட்டாயத்தன்மை தோன்றும் போது என்னுடைய ஆட்சிப் பொறுப்பு என்பது என்னுடைய இருப்புடன் தொடர்புடைய இருப்பைக் கொண்ட எல்லா உயிர்களையும் இணைப்பது. ஆகையால் என்னுடைய இருப்புடன் இணைப்பு இருப்பு உடையவைகளாக ஆறறிவு பெற்ற மக்களேயன்றி ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை பெற்ற உயிரினங்களும் பிறவும் இருக்கின்றனவே என்று ஒரு வகை இணைப்பிருப்பைக் கண்ட உணர்வே சமுதாய உணர்வு. அதனால்தான் ஓரறிவு உயிர்களும் பேசுவதைத் தெரிந்து அவைகளுக்கு வேண்டுவன அளித்து வாழ முடியும். வாழ வேண்டும். அதுவே ஆட்சிப் பொறுப்பின் அமைப்பு என்று வேண்டியதாகச் சேரமான் பெருமாள் நாயனார் வரலாற்றின் மூலம் அறிகிறோம்.

இருப்பு இணைப்பு வகைகள்

ஒரு குடும்பத்தில் பிறந்த குழந்தைக்கு மூவகை இருப்புக்கள் உள்ளன.

1. குழந்தையின் தனிநிலை இருப்பு
2. குடும்பத்தின் உறுப்பு என்ற வகையில் அந்தக் குழந்தையின் இருப்பு
3. அதே குழந்தை ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்குப் பிறகு ஏதேனும் ஓர் நிலையத்தின் உறுப்பு என்ற வகையில் அதன் இருப்பு.

இவ்வகையில் ஒவ்வோர் உயிரும் ஏழு கூறு இருப்பு இணைப்புக்களைக் கொண்ட சமுதாயமாக விளங்குகின்றது என்பதை என் வகையில் எடுத்துக் காட்டி விளக்கிய பெருமை கீழே குறிப்பிடப் பெறும் ஐவருக்கும் உண்டு.

1. நக்கீரர்—மதுரை, 2. திருஞானசம்பந்தர்—சீர்காழி, 3. திருமங்கை ஆழ்வார்—திருக்குடந்தை, 4. அருணகிரிநாதர்—சுவாமிமலை, 5. தண்டபாணி சுவாமிகள்—திருவல்லிக்கேணி.

மேலே குறிப்பிடப்பெற்ற ஐவரும் ஐந்து இடங்களை அடிப்படையாகக் கொண்டு ஏழுவகை இருப்பு இணைப்புக்களை எடுத்துக்காட்டிச் சமுதாய உணர்வு தோன்றி வளருமாற்றை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இங்கே குறிப்பிட்டுள்ள அனைத்தும் சமுதாயமும் சமுதாய உணர்வும் தமிழகத்தில் எவ்வாறு தோற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளன என்பதை எடுத்துக் காட்டும் முன்னுரைப் பகுதியாகும்.

சைவ இலக்கியங்களும் சமுதாய உணர்வுகளும்

தமிழ் இலக்கியங்களில் சைவக்கருத்துக்கள் அங்கும் இங்குமாகக் காணப்பெறுபவைகளையெல்லாம் இங்கே யான் குறிப்பிடவில்லை.

சைவ இலக்கிய வரலாற்றில் முதலிடம் பெறுவன காரைக் காலம்மையாரின் படைப்புக்களே.

சங்க காலத்தில் பாடப்பெற்ற சைவ இலக்கியங்கள் இருந்தாலும் அவைகளையெல்லாம் திருமுறை இலக்கியங்களுள் இணைத்துத் தொகுக்கப் பெற்றுவிட்ட காரணத்தால் பன்னிரு திருமுறைகளிற் காணப்பெறும் சமுதாய உணர்வுகளை மட்டுமே இங்கே எடுத்து எழுத விரும்புகிறேன். விரிப்பின் பெருகுமாதலின் சில சான்றுகளை மட்டும் எடுத்தெழுத வேண்டியதாயிற்று.

சமுதாயத் தொண்டு - ஈதல்

சமுதாயத்தில் நின்று சமுதாய உணர்வைத் தோற்றுவிப்பது வளர்ப்பது என்பவைகள் சமுதாயத் தொண்டுதான் என்றாலும், பாடல் அருளுவது என்பதும் ஒருவகைச் சமுதாயத் தொண்டுதான் என்றாலும், சமுதாயத்துக்கு கைத்தொண்டு செய்தல் வேண்டும் என்ற கொள்கையை முதன் முதலாகக் கூறியவர் காரைக்கால் அம்மையார்.

''எளியது இதுவன்றே ஏழைகள் யாதும்
அளியீர் அறிவிலீர் ஆஆ''

என்று அற்புதத் திருவந்தாதி (46 ல்)யிற் கூறுகிறார். அடுத்தவர்களுக்கு ஏதேனும் ஒன்று கொடுத்துத் தன்னைப் பழக்கிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகின்றார். இதையே பின்பற்றிப் பின்னர் வந்த திருஞானசம்பந்தர் உலகச் சமுதாயக் கொள்கையாக உருவாக்குகின்றார். பிறருக்குக் கொடுத்தேயாக வேண்டும் என்ற கொள்கையை அம்மையார் பின்பற்றுவதைத் திருஞானசம்பந்தர் சிவம் வாழும் இடம் எனக் கொண்டு கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

''மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதி ஆகும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்தம் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருமென உரைப்பார்''
(பெரியபுராணம் 2990)

இதையே பின்னர் வந்த வள்ளற்பெருமான் அனைத்துயிர்களுக்கும் கொடுத்துப் பசி தீர்ப்பதையே ஜீவகாருண்ய ஒழுக்கம் என்

றும், அதுவே மோட்ச வீட்டின் திறவுகோல் என்றும் குறிப்பிட்டு வளர்த்துக் காட்டுகின்றார். இதே கருத்தைத் திருமூலர் கூறும் போது கோயிலில் சென்று உணவைப் படைப்பதில என்ன பயன்? நடமாடும் கோயில் நம்பரை உண்ணவைக்க வேண்டும் என்று கூறு கின்றார்.

'படமாடக் கோயில் பகவர்க்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக்கோயில் பகவற்கு அது ஆமே' (திருமந்திரம் 1857)

இதே கொள்கையை மிகவும் எளிமைப்படுத்தி 'யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி' என்று திருமூலரே வற் புறுத்தி இருக்கின்றார். அதுவும் இயலாதவர்கள் 'யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே' என்றார் (திருமந்திரம் 252). இத னையே மேலும்,

'மற்றதுவாய் நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக்கல்லது
உற்று உங்களால் ஒன்றும் ஈந்ததுவே துணை
மற்றண்ணல் வைத்த வழி கொள்ளுமாறே'

என்பது திருமூலரின் 259 ஆம் மந்திரம். சமுதாயத் தொண்டின் மறுமலர்ச்சிக் காலமே கி.பி. 7 ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.

சமுதாயத் தொண்டு-மொழி இன உணர்வு

திருஞானசம்பந்தர் தம்மை மொழி உணர்வால் சமுதாய உணர்வால் உலகவர்களோடு ஈடுபடுத்திக் கொண்டார். தன்னை எல்லா இடங்களிலும் தமிழ் ஞானசம்பந்தன் என்று முதன் முத லாக இலக்கியத்திற் கூறிக் கொண்டார். நாடு முழுவதும் சுற்றி வந்தார். அவர் பரப்பியது சமயமா தமிழா என்ற வினாவுக்கு விடையளிக்கும் நிலையைப் பின்வந்த சுந்தரர் மேற் கொள்ளுகின் றார். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புஞ்ஞானசம்பந்தனுக்கு' என்பது சுந்தரர் தம் திருப்பாட்டு.

சமுதாயத்தொண்டு-விழிப்புணர்வு

சமுதாயத்தில் விழிப்புணர்வு உண்டாதல் வேண்டும். இவ் வகையில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து தொண்டாற்றினார்கள். தெருப்பெருக்குதல், திருக்குளம் சீர்மைப் படுத்துதல் முதலிய சமுதாயத் தொண்டுகளையெல்லாம் திரு நாவுக்கரசர் சமைத்துத் தந்தார். அதனாலேயே அவர் 'உழவாரம்'

என்ற அரியதொரு கருவியை எப்போதும் தம் கையகத்தே கொண்டிருந்தார். 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்' என்றும் 'நமனை அஞ்சோம்' என்றும், 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்சவருவதும் இல்லை' என்றும், எடுத்துக் கூறி விழிப்புணர்வை உண்டாக்கினார். 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்று முழங்கினார். சமுதாயத் தொண்டர்கள் யார் என்பதை எடுத்துக் காட்டும் முக மாக கி.பி. 12 ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழாரடிகள் 'வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என்று தன்னலம் பேணாது உழைக்க வேண்டும் என்று கூறிப் பன்னிரு திருமுறையாசிரியர் களும் மக்கட் சமுதாயத்துக்கு விழிப்புணர்வை உண்டாக்கினார் கள்.

உயர்ந்த வாழ்வைப் பெற வேண்டிய இந்த மனிதச் சமு தாயம் குறிக்கோள் இலாது கெடுகிறதே என்று அதைத் தன் மேலிட்டுக் கூறுகின்றார் அப்பரடிகள்.

'பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவுடன் மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோளிலாது கெட்டேன்'

என்று கூறுவதைக் காண்க.

சமுதாயத்தொண்டில் - சமதர்மம்

எல்லாரும் வாழ வேண்டும்; இன்பமாக வாழ வேண்டும். பொருள் பெற்றிருப்பது என்பது பிறருக்குக் கொடுத்து வாழ் வதற்கே. இதனைப் பிற்காலத்தே காந்தியடிகள் தர்மகர்த்தாக் கொள்கை என்று குறிப்பிட்டார்.

'இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம்
கடு நரகங்கள் வைத்தார்'

என்பது அப்பரடிகள் வாக்கு. ஆரவாரச் செயல்களாலும் போலிச் செயல்களாலும் சமுதாயத்துக்கு எத்தகைய பயனும் இல்லை என்பதைப் பல இடங்களில் வற்புறுத்திக் கூறி உள்ளார்.

'கங்கை ஆடிலென்
காவிரி ஆடிலென்
பொங்கு தண்கும
ரித்துறை ஆடிலென்
ஓங்குமா கடல்
ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனா
தவர்க்கு இல்லையே'

என்றும்,

'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்'

என்றும் முழங்கினார்.

சமுதாயத் தொண்டில் - ஊழ்வினை

சமுதாயத் தொண்டில் அன்றும் இன்றும் தொடர்ந்து மக்களை அலைக்கழித்து வரும் பெருமை மிக்க சமுதாய நோய்கள் இரண்டு. ஒன்று மடிமை; இரண்டாவது ஊழ்வினை.

'மடிமை குடிமைக்கண் தங்கின் அது ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்'

என்பது திருக்குறள்.

மடிமையை நீக்க முயற்சியை மேற்கொள்ளச் செய்ய வலியுறுத்தும் போது முன்னின்று தடுப்பது ஊழ்வினைக் கொள்கை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்ற வரியை மட்டும் முழங்கும் இந்தச் சமுதாயம் அந்தப் பாடலின் பின்னுள்ள வரிகளைக் கவனிப்பதில்லை.

'நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

இப்புறநானூற்றுப் பாடலை அடியொற்றிய வகையில் பக்குடுக்கை நன்கணியாரின் பாடல்,

'இன்னாதம்ம இவ்வுலகம்
இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே'

என்று அமைந்தது. இன்பதுன்பச் சூழ்நிலை உடையதுதான் இவ்வுலகம். அதுவும் ஊழ்வினை வயத்ததே என்று ஒருவகைச் சமுதாய மடிமைக்கருத்தானது நிலவி வந்த காலத்தில் இவ்வுலக வாழ்க்கையை உவந்து ஏற்று, இன்ப துன்ப நிலையை ஏற்றும் எதிர்த்தும் நின்று வாழ இயலும் என்ற கருத்தை இவ்வுலகில் நிலை நிறுத்தி விளக்கினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஒரு வீட்டில் அழுகையும் எதிர் வீட்டில் சிரிப்பும் நிலவிய இவை இயற்கை என்னாது அவினாசியூரில் மாற்றிக் காட்டி வாழ்ந்து திருத்திய சமுதாயப் பெருமையை நாம் சுந்தரர் வரலாற்றால் உணர முடிகிறது.

மேலே கூறப் பெற்றவைகளால் சமுதாய உணர்வுகள் வேறு, சமுதாய அறிவுவேறு என்பதும், சமுதாய உணர்வுகளை உயிரோட்டமாகக் கொண்டு எழுந்த பாடல்களே திருஎழுகூற்றிருக்கை என்பதும், இருத்தல் சமுதாய உணர்வை அடிப்படையாகக் கொண்டது என்பதும், காரைக்கால் அம்மையார் முதல் சுந்தரர் ஈறாக உள்ள பலரும் சமுதாய உணர்வுகளை எடுத்துக் கூற மக்களுலகத்துக்குத் தொண்டாற்றினர் என்பதும் சுருக்கமாக விளக்கப் பெற்றன.

---

2. பெரியபுராணம் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்

டாக்டர் கொ. ஆறுமுகம்
தமிழ்த் துறை
அரசு கலைக் கல்லூரி
சேலம்

உலக மொழிகளுள் தொன்மையான மொழி தமிழ் மொழியாகும். தமிழில் முகிழ்த்துள்ள பக்தி இலக்கியங்கள் போல உலகில் வேறு எம்மொழியிலும் தோன்றவில்லை. சைவர்கள் நிதியமாகப் போற்றுவது சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். அவற்றின் மணிமுடியாகத் திகழ்வது பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பெரியபுராணமாகும். சைவ சமய நெறி, அதைச் சார்ந்தொழுகும் சாதனம், அதன் பயன் என்ற நிலையில் இல்லாமல், முதலாம் நூற்றாண்டுத் தொடங்கிப் பத்தாம் நூற்றாண்டு வரை நடைபெற்ற தமிழக வரலாறு, அரசு, அமைச்சு, நாகரிகம், பண்பாடு, பக்தி, மக்கள் நிலை, சமுதாய நிலை முதலிய அனைத்தையும் தன்னகத்தே கொண்டு சிறப்புடன் விளங்குவது பெரியபுராணம்.

பெரியபுராணம்

'தமிழ் நாட்டிலே பல இடங்களில் வரலாற்றுக்குட்பட்ட காலத்திலே ஊரும் பேரும் உசாவியறியத்தக்க பல வகை மரபுகளிலும் தோன்றித் திகழ்ந்து பயன் கருதாது பேரன்புடன் இறைவனை வழிபட்டு அவன் திருவருள் பெற்ற சிவனடியாரின் வரலாறுகளைத் தொகுத்து உயர்வு நவிற்சியின்றி இணையற்ற இனிய செந்தமிழ் நடையில் திருத்தொண்டர் புராணம் இயற்றியருளிய பெருமை அதன் ஆசிரியர்க்கே உரியது. இது போன்ற வேறு புராணம் வடமொழியிலும் தென் மொழியிலும் இல்லை என்றே கூறலாம்'. (கு. சுப்பிரமணியபிள்ளை, சேக்கிழார், ப. 5)

'தமிழ் மொழியில் உள்ள எல்லாப் புராணங்களும் இதிகாசங்களும் கிட்டத்தட்ட ஆதியில் வடமொழியில் இயற்றப்பெற்றன. இராமாயணத்தை ஆதியில் வான்மீக முனிவர் வடமொழியில் பாடினார். மகாபாரதமும் கந்தபுராணமும் மூலத்தில் வியாச முனிவரால் வடமொழியில் பாடப்பெற்றவை. ஆனால், பெரிய

புராணம் அப்படிப்பட்டதன்று . இதற்கு மூலம் தமிழ்மொழி. தமிழ்மொழியில் உள்ள இதனை 'உயமன்னியு பக்த விலாசம்' என்று வடமொழியில் பிற்பாடு மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஆக, தென் மொழியிலிருந்து வடமொழிக்கு சென்ற ஒரே நூல் பெரியபுராணம் எ ்பது குறிப்பிடத்தக்கது. (திரு முருக. கிருபானந்தவாரியார், சிவவருட்செல்வர் ப. 13)

பெரியபுராண ஆசிரியர், சான்றோர் வாழும் தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் மரபில் தோன்றிய அருள்மொழித்தேவர். அவர் தம்பி பாலறாவாயர். அருள்மொழித் தேவர் தம் பெருமையால் தாம் பிறந்த மரபை விளக்கியமையால் சேக்கிழார் என்ற குடிப்பெயரே இயற்பெயராக அமைந்தது. முறையாகக் கல்வி பயின்று கல்வி கேள்விகளிலும், ஒழுக்கத்திலும், ஆட்சித் திறத்திலும் சிறந்து விளங்கியமையால் இரண்டாம் குலோத்துங்கனிடம் தலைமை அமைச்சராய் விளங்கினார். 'உத்தம சோழப் பல்லவன்' என்ற உயர்ந்த பட்டமும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியதால் 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பட்டமும் பெற்றார்.

சேக்கிழார் தில்லை சென்று இறையருளால் காப்பியம் பாடி முடித்தார். தம் காப்பியத்திற்குத் திருத்தொண்டத் தொகை, திருவந்தாதி, மூவர் முதலிகள் அருளிய திருமுறைகள், காரைக்காலம்மையாரின் பதிகங்களும் அந்தாதியும், சேரமான் பெருமாள் அருளிய பொன் வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கையிலாய ஞானவுலா ஆகியவற்றைத் துணையாகத் கொண்டார். இவை மட்டுமன்றிக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலியவற்றையும் ஆதாரமாகக் கொண்டு பெரியபுராணத்தை அருளிச் செய்தார்.

சேக்கிழார் திருத்தொண்டத் தொகையினை ஒட்டியே தம் நூலுக்கும் திருத்தொண்டர் புராணம் என்று பெயரிட்டார். ஒவ்வொரு சருக்கத்திற்கும் திருத்தொண்டத் தொகையில் ஒவ்வொரு பாடலின் தொடக்கத்தையே அமைத்தார். பெரியபுராணம் இரண்டு பாகங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் கொண்டு 2386 பாடல்களாலானவை.

'திருத் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்ற ஔவையின் வாய்மொழிக்கேற்ப தொண்டர் தம் பெருமை சொல்வதாலும் செயற்கரிய செயலைச் செய்த பெரியார்களைப் பற்றிக் கூறுவதாலும் இது பெரியபுராணமாயிற்று. அதற்குச் சான்றாக, 'எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்' என்ற பாடல் அமைத்துள்ளது. சேக்கிழார் அறுபத்து மூன்று தனியடியார்

களைப் பற்றியும் ஒன்பது தொகை யடியார்களைப் பற்றியும் கூறுவதை நோக்கமாகக் கொண்டாலும் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு நூலாகவும் சமயப் பொருளையும், இறையருளையும், இறைவனின் பெருங்கருணைத் திறத்தையும் விளக்கும் அருளியல் நூலாகவும் விளங்குகின்ற ஒரு அருட் காப்பியமாகப் பெரிய புராணத்தை இயற்றினார்.

ஒரு பெருங் கவிஞர் தாம் வாழும் காலத்தையும் அதற்கு முற்பட்ட காலத்தையும் எதிரொலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றார் என்பர் திறனாய்வாளர். சங்க இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்கள் நிலை, சமுதாய நிலை, பழக்கங்கள், நாகரிகம், பண்பாடு, மேற்கொண்ட தொழில்கள் ஆகியவற்றைப் பற்றி எடுத்தியம்புகின்றன.

பெரியபுராணம் ஒரு புரட்சிக் காப்பியம்!சமுதாய நூல்; சமுதாய நலமே சமய நலமாகக் கொண்டிலங்குவது. நாயன்மார்கள் சமுதாய மேம்பாட்டுக்காக வாழ்ந்தவர்கள். சைவத்தின் பெருமையினைத் தழைக்கச் செய்யவும் சமயத்தின் கொள்கைகளை நிலை பெறச் செய்யவும் வாழ்ந்து காட்டியவர்கள்.

தமிழகத்தில் சில காலங்களாய் சமுகம் சமுதாயம் என்ற இரண்டையும் ஒரே பொருளில் கொண்டுள்ளனர். மக்கள் உறவு கொண்டு வாழ்கின்ற பகுதியைச் சமுகம் என்னும் அச்சமுகத்தினிடையே மொழி சமயம் நாகரிகம் புண்பாடு கொள்கை போன்றவற்றுள் சிலவற்றைக் கொண்ட பகுதியைச் சமுதாயம் என்றும் கொள்ளுவது பொருத்தமாகும். (சோ. இலக்குமிதரன் பாரதி, 5 ஆம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப 332).

சமுதாயத்தின் அடிப்படையில் கோயில்கள் கட்டி, குளம் வெட்டினர். அங்கு இயல், இசை, நாடகங்களை படைத்தனர். இவை சமுதாயத்தின் மன வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாயின. இயற்கையின் அடிப்படையில் பல்வேறு தொழில் செய்யும் மக்கள் ஒன்றுபட்ட சமுதாயத்தை அமைத்தனர். அவர்களிடையே பண்ட மாற்று தொழில் வளர்ச்சி போன்றவற்றைக் கொண்டு உறவு முறை ஏற்பட்டது. மற்றும் நாகரிகம், பண்பாடு, மொழி, கொள்கை போன்றவற்றால் ஒன்றுபட்ட பகுதியே சமுதாயம் எனப்படும்.

"மக்களின் தொகுதிக்குச் சமூகம் அல்லது சமுதாயம் எனப் பொதுவாகக் கூறினும் இரண்டிற்கும் சிற்சில வேறுபாடுகளும் உள்ளன. சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட தனி இயல்பு கொண்ட இனம் அல்லது சாதி என்பர். ஒரு குறிப்பிட்ட சமூகம் தன்னைச்

சார்ந்தவர்களுக்கே நன்மை சேர்க்கவும் தீமைகளைக் களையவும் துணை நிற்கும். ஆனால் சமுதாயம் என்று சொல்லும்பொழுது அதில் பல்வேறு மதத்தினர் மொழியினர் சாதியினர் இருக்கலாம். இவர்கள் பொது நோக்கம் அல்லது பொது உறுதிப்பாடு காரண மாகவே ஒன்றுபடுவார்கள். மனிதன் சேர்ந்து வாழத் தொடங்கிய நாளே, சமுதாய அமைப்பிற்கு வித்திட்ட நாளாகும். கூட்டு வாழ்க்கையே சமுதாய வாழ்க்கை என்றாலும் பிழையாகாது'' என்பர் அ. மு. பரமசிவானந்தம் (அ.மு. பரமசிவனாந்தம்; சமுதாயமும் பண்பாடும் ப. 30).

''நமது சமய வழிபட்ட தனி மனித வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை முறை, சமுதாய வாழ்க்கை முறை ஆகியன எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கும் ஒரு சிறந்த காப்பியம் பெரிய புராணம். சங்க காலத்தில் நிலவிய விழுமிய வாழ்க்கையை நீண்ட இடைவெளிக்குப் பிறகும் தலை தடுமாறிப் போகாமல் பாதுகாத்தவர்கள் பெரியபுராணத்தில் இடம் பெற்றிருக்கும் சான்றோர்கள்'' (குன்றக்குடி அடிகள், நமது நிலையில் சமயம் சமுதாயம், ப. 52).

சமயம்

சமையம் (சமயம்) என்னும் சொல் சமைப்பது என்னும் பொருளுடையது. மனிதனை வாழ்க்கையை நல்வழிகளில் ஈடுபடச் செய்வது. பண்படுத்தி, பக்குவமாக்கிச் சமைப்பது சமயம் எனப்படும். உலகம் இன்பமாகவும் அமைதியாகவும் நடைபெற்றது. சிந்திப்பதும் பேசுவதும் செயல்படுத்துவதுமே சமயப் பெரியோர்களின் இயல்பாகும். சமய உணர்வோடு சமய வாழ்க்கையே ஒரு பண்பட்ட தூய வாழ்க்கையாகும்.

சமயம் என்பது சாத்திரம் ஞானம் அன்று. அது வாழும் முறையாகும். வாழ்க்கை நெறியாகும் என்று கூறியவர் சுவாமி விவேகானந்தர். இறைவனோடு நம்மை நேரிடையாக இணைப்பதாகும் என்றார் காந்தியடிகள். மனிதனிடத்தில் மறைந்துள்ள தெய்வீகப் பண்புகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவது சமயம். பெரியபுராணம் ஓர் உயர்ந்த சமய நூலாக மட்டுமல்லாமல் உலகப் பொதுச் சமய நூலாகவும் விளங்குகின்றது.

சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தவர்கள் மூவர் முதலிகளும், குலச்சிறையார், காரைக்காலம்மையார், திருமூலர், சாணக்கியர், ஐயடிகள் காடவர்கோன், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார் மற்றும் பிற அடியார்களுமே யாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரியபுராணத்தில் இறைவன் ஒருவனே என்பதைச் சேக்கிழார் பல இடங்களில் பாடியுள்ளார். அவற்றுள்

'...எவ்வுயிர்க்கும்'

(திருநாவுக்கரசுபுராணம், பா. 134)

சான்றான் ஒருவனைத் தண்டமிழ் மாலைகள் சாத்தினரே'
'உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை'

(குங்குலியக்கலயர்புராணம். பா. 22)

'ஏகநா யகரைக் கண்டார்' (கண்ணப்பர் பா. 105)

என்பன சிலவிடங்களாம். இறைவன் வரம்பில்லாத ஆற்றல் உள்ளவன் என்பதை,

'அலகில் சோதியன்...' (பெரியபுராணம் பாயிரம் பா.1)
'ஆதியாய் நடுவுமாகி யளவிலா அளவுமாகி'

(தில்லைவாழ் அந்தணர், பா. 1

'மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேலாருங் கொடியாரை...'

(ஏயர்கோன் கலிக்காமர் பா. 12)

என்ற பாடல்களில் சுட்டுகின்றார்.

சாக்கியர் முன் ஊழ்வினைப் பயனாய் சிவ நெறியில் பிறக்கவில்லை. ஆனால் பின்னர் சிவ நெறியே மெய்ந்நெறி என்பதை உணர்ந்து சிவனை வழிபடுகின்றார். செய்வினை, செய்வான், வினைப்பயன், கொடுப்பான் என நான்கு பொருள்களும் ஓர் உண்மைச் சமயத்திற்கு வேண்டப்படுவன என்பதைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இதனை,

'செயல்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்'
என்ற பாடல் உணர்த்துகின்றது. (சாக்கியர் புராணம், பா. 8)

சமய நெறியில் சேக்கிழார் சடங்குகளை வெறுக்கவில்லை. ஆயினும் சடங்குகளே சமயம் என்று கூறவில்லை. கண்ணப்பர் அன்பு வழியில் நின்று ஆறே நாட்களில் இறையருள் பெற்றார். ஆகம வழியில் வழிபாடு செய்த சிவகோசரியார் இறைவனைக் கனவில் காண முடிந்தது. இறைவனுடைய சிறப்புகள் அன்பெனும் பிடியுள் அகப்படும் என்பதனை,

அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாழ்வென்றும்
அவனுடைய நிலை இவ்வாறறிநீ' என்றருள் செய்வார்

(கண்ணப்பர்)

என்னும் பகுதியால் அறிகிறோம்.

பக்தி மார்க்கத்தில் அஞ்செழுத்து மந்திரம் சிறப்பானது, அதுவே உயிர் நாடியானது. இதனை முதன் முதலில் சைவ உல

கிற்குக் கூறியவர் திராவிட சிசு எனப்போற்றும் சம்பந்தரேயாவர். எத்துணை வழிபாடு செய்தாலும் அகத்தில் ஈசனுக்கு அன்பில்லையேல் அஃது ஆரவாரத் தன்மையுடைத்து என்பதை அப்பர்,

'வேதம் ஓதிலென் கேள்விகள் செய்யில் என்
ஓதி அங்கம் ஓர் ஆறும் உணரில் என்?' (திருமுறை 5—99—44)

என்கிறார்.

"விதி, பக்தி இரண்டையும் சண்டேசர் போன்றோர் வரலாற்றைக் கூறும்பொழுது கூட அவருடைய உள்ளன்புக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடினார். அன்பு வழி ஒன்றை மட்டும் மேற்கொண்ட திருநீல நக்கர் மனைவியார், கண்ணப்பர் சாக்கியர் முதலானோர் வரலாறுகளில் இதனை வலியுறுத்தியதுடன் அன்பு வழியே விரைவில் பயன் தரும் என்பதைக் கூறினார்" (அ.ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.335). சேக்கிழார் போற்றிய சைவம் தன்னலத்தை முற்றிலுமாகத் துறந்தது. கொள்கைக்காக வாழ்ந்தவர்கள் நாயன்மார்கள். இறைவனுடைய அடியார்களை முதன் முதலில் வீரர்கள் என்று போற்றியவர் சேக்கிழாரே யாவர் என்பது ஆராயத்தக்கது.

"இறைவனை வழிபடுவதற்கு இலக்கணம் வகுத்துத் தந்த நூல் பெரிய புராணமாகும். இறைவனைத் தொழுவதற்கு இதுவே முறை என்ற விதிகள் வகுத்து வைத்திருந்தனர். அம்முறை மரபை மாற்றியது பெரியபுராணம்" (குன்றக்குடி அடிகள், நமது நிலையில் சமயம் சமுதாயம், ப. 52). "இறைவனை எட்டத்தில் வைத்து ஏதோ வாழ்வோடு பிணைப்பில்லாத வாழ்த்துப் பொருளாக்கிக் கோவில்களிலும் குருக்கள்மாரின் சாபத்திலும் தான் கடவுளை வணங்க வேண்டுமென்று கருதுகிற சமுதாயத்துக்கு நல்லதொரு விழிப்புணர்வைப் பெரியபுராணத்தின் மூலம் நாயன்மார்கள் கொடுக்கின்றார்கள்." (ஆர். சொல் விளங்கும் பெருமாள் —சக்தி பெருமாள், பட்டிமண்டபம், ப. 10). சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் வாழ்க்கையோடு இணைந்து சமய நெறி நடைபெற்றது. நாயன்மார்கள் காலத்தில்தான் சமயம் தனியிடம் பெற்றது.

திருமணம்

பெரியபுராணத்தில் வருகின்ற திருமணங்கள் அனைத்தும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுச் செய்தவைகளேயாகும். காப்பிய நாயகரான சுந்தரருக்குப் புத்தூர் சடங்கவி என்பவரின் மகளை மணம் முடிக்க முடிவு செய்தனர். இன்தமிழ் ஏகநாதராகிய சம்பந்தருக்கும் பெருமணத்து நம்பியாண்டார் என்பவரின் மகளை

மணமுடித்தனர். பெண்வீட்டாரிடம் சென்று சான்றோர்களே பெண் கேட்டதாக அறிகின்றோம். இதனை,

'எம்முடைய குலக்கொழுந்தையாம் உய்யத்தருகின்றோம்'
(திருஞானசம்பந்தர் புராணம். 1167)

என்னும் பாடல் சுட்டுகின்றது.

திருமணம் செய்வதற்கு முன் மணமக்களுக்குப் பொருத்தம் பார்க்கும் பழக்கம் சமுதாயத்தில் இருந்து வந்துள்ளது என்பதைக் காரைக்காலம்மையார் வரலாற்றால் அறியலாம். இதனை,

'தளிரடிமென் நகைமயிலைத் தாதவிழ் தார்க்காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணம் செய்தார்கள்'
(காரைக்காலம்மையார் புராணம், பா. 11)

என்னும் பாடல் உணர்த்துகின்றது. இது பொருநதாத திருமணம் என்பதை வெளிப்படுத்துகின்றது. இங்கு இளங்கோவின்

'காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்',
(சிலப்பதிகாரம், 1—57)

என்ற வரியும் நினைவு கூரத்தக்கது.

திருமணத்தில் சீர்வரிசைகள் முதலியன தருதல் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆயினும் வணிகர் தம் இல்லத்தில் அது சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது என அறிகின்றோம். காரைக் காலம்மையாரை மனைவியாக அடைந்த மகிழ்ச்சியினைக் காட் டிலும் சீர்வரிசைகளைக் கண்டே மகிழ்ந்தார் அவர் கணவர் என் பதை, 'மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரப்பில் தனம் கொடுத்தற்பின்

' நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பில் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியும் கொள்கையினில் மேம்படுதல் மேவினான்
(காரைக்காலம்மையார் புராணம், பா.13)

என்றபாடல் சுட்டுகின்றது. திலகவதியாருக்குப் பன்னிரண்டாவது அகவையிலேயே திருமணம் பேசப்பட்டது என்பதை நோக்குங்கால் அக்காலச் சமுதாயச் சூழல் புலனாகின்றது. மயிலை சிவநேசச் செட்டியார் தம் மகள் பூம்பாவையைச் சம்பந்தருக்காக கொடுக்க விழைந்ததையும் உணர முடிகின்றது.

சேக்கிழார் காலத்தில் கலப்புத் திருமணங்களும் நடைபெற் றன. இதனைச் சுந்தரர் கணிகையர் குலபரவையாரையும், வேளா ளர் குலச்சங்கிலியாரையும் மணந்தமையால் அறியலாம். சிலப்பதி காரக்காலத்தில் ஒதுக்கிய கணிகையர் குலத்திற் பிறந்த பரவை யாருக்குச் சிறப்பான இடத்தைக் கொடுத்த பெருமை சேக்கிழா ரையே சாரும். பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் குழந்தையினைத் தத்து எடுத்துக் கொள்ளும் வழக்கம் சமுதாயத்தில் இருந்தது. இதனை,

நரசிங்க முனையர் என்னும் நாடு வாழ் அரசர் கண்டு
பருவரங்காதல் கறப்பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நம்பினாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங்குமரன் கேற்ப அன்பினால்மகன்மை கொண்ட''

என்னும் பாடல் புலப்படுத்துகின்றது. (தடுத்தாட் கொண்ட புராணம் பா. 5) தனக்கு உறுதி செய்த கணவன் திருமணத்திற்கு முன் இறக்க நேருமாயின் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. இதைத் தடுத்தவர் அப்பர். இராசாராம் மோகன்ராய் போன்றோருக்கு முன்பே அவர் கொள்கையினைத் தமிழகத்தில் செயல்படுத்தியவர் அப்பர். இவர் முதல் சமூக சீர் திருத்தவாதி. திருப்பழையாறையில் இறைவனுக்காக உண்ணா நோன்பு மேற்கொண்டவர் இவரே. காந்தியடிகள் கைராட்டையினை மேற்கொண்டது போல அப்பரும் உழவாரப் படையினைத் தம் கையகத்தே கொண்டனர். இறைவனைப் பாடுகின்ற சம்பந்தரும் மங்கையர்க்கரசி மீது ஒரு பதிகமே பாடியுள்ளார். மதுரையில் மீனாட்சி குடியிருப்பதே மங்கையர்க்கரசிக்காகத்தான் என்பர் சம்பந்தர். இதன் மூலம் சேக்கிழார் பெண்மையின் உணர்வைப் போற்றுகின்றார் என்பது வெளிப்படுத்துகின்றது.

விருந்தோம்பல்

பெரியபுராணம் ஒரு பண்பாட்டுப் பெட்டகமாகும். தமிழ் மக்களிடையே பண்டு தொட்டே விருந்தோம்பும் பண்பு சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. இதன் சிறப்பினை, இளையான் குடிமாறர், அப்பூதியடிகள், சிறுத்தொண்டர் முதலானோர் புராணங்களில் போற்றிக் கூறியுள்ளார். இளையான்குடி மாறரின் இல்லம் வந்தோர்க்கு அறுசுவை அமுதம் படைத்து மகிழ்ந்த செய்தியினை,

'உண்டி நாலு விதத்தில் லாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகன் தொண்டர் அவையில் அமுது செய்ய
அளித்துள்ளார்'

(இளையான்குடிமாறர் புராணம் 4) என்பதால் உணரலாம். அந்தணராகிய சுந்தரர் இல்லத்தில் அரசராகிய சேரமான் பெருமாள் உடனிருந்து அமுது உண்டதும் இங்கு நோக்கத்தக்கது.

செல்வம் சுருங்கிய காலத்தும் மனம் சுணக்கம் இன்றித் தம்மிடம் உள்ள பொருளைக் கொண்டு உபசரித்த இளையான்குடி மாறரின் மனைவி மங்கையர் போற்றும் மாணிக்கம். தமிழகப் பெண்டிர் இரவு பகல் எந்நேரமாயினும் வந்த விருந்தினரை இன்முகம் கொண்டு விருந்தோம்புவர் என்பதனை,

'அல்லின் ஆயினும் விருந்துவரின்உவக்கும்' (நற்றிணை 1–2)

என்ற பாடல் உணர்த்தும். கோவலனைப் பிரிந்த கண்ணகியும்,

'விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' (சிலம்பு 16–73) எனக் கூறுவதாலும் சிறையிருந்த செல்வி சீதையும்,

'விருந்த கண்டபோது என்னுறுமோ? (கம்பர் காட்சிப் படலம், 15). என்று கூறியதாலும் விருந்தோம்பலின் சிறப்புத் தெரிகின்றது.

அப்பூதியடிகள் மகன் இறந்தமைக்கு வருந்தவில்லை; அப்பருக்கு அமுது செய்யக் கால தாமதம் ஆகிவிட்டதே என்பதற்காகவே வருந்தினார் என்பதனை,

'அறிவரும் பெருமை அன்பர் அமுது செய்தருளுதற்குச்
சிறிதிடை யூறு செய்தான் இவன்'
(அப்பூதியடிகள் புரா, பா. 37)

என்ற பாடல் உணர்த்துகின்றது. அப்பருக்கு அமுது படைக்க நீண்ட வாழை இலையின் குருத்தை விரித்து அரிந்த பக்கம் உண்பவரின் வலப்பக்கம் இருக்கும்படியாகச் செய்து அதில் அப்பூதியடிகள் அமுது படைத்தார்.

சாதிப்புன்மை

சேக்கிழார் காலத்தில் சாதிகள் தமிழகத்தில் கால் கொண்டிருந்தன. அவர் சாதி வேற்றுமைகளைக் கடியாமல் அன்பினால் உளங் கலந்த அடியார்களை ஒழுக்கத்தினாற் உவக்கச் செய்து சாதி வேற்றுமையை அகற்றுகின்றார். தொழிலில் உயர்வு தாழ்வு கருதாத சமுதாயத்தையே படைக்க விரும்பினார் சேக்கிழார்.

சாதிகள் சங்க காலத்திலும் இருந்ததென்பதைப் புறப்பாடல் விளக்கும். அதனால் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (குறள் 972) என வான்மறை வள்ளுவம் உணர்த்துகிறது. வள்ளுவரின் வாய்மொழிக்கு விளக்கமாக அமைந்துள்ளது பெரியபுராணமாகும். சமய வேறுபாடுகளைக் களைந்து வரலாற்றுத் தத்துவத்தால் மட்டுமல்லாமல் நடைமுறையில் சாதி வேற்றுமைகளை மறந்து ஒரு குல உணர்வோடு நின்று ஓதுபவர் (பெரியபுராணச் சொற்பொழிவுகள் குன்றக்குடி அடிகள், பக்கம். 35) சேக்கிழார் என்பர் குன்றக்குடி அடிகள்.

பெரியபுராணத்தில் வரும் அடியார்கள் விதியிலும் சமயம் பெரிதென்று போதனையாலும் சாதனையாலும் காட்டி வந்துள்ளனர். தீண்டத்தகாதவர் எனக் கருதத்தக்க வகுப்பினருள் எல்லாச் சாதிகளிலிருந்தும் நாயன்மார் தோன்றியுள்ளனர். அடி

யார்கள் பிறப்பாலும் சிறப்பாலும் பிறவற்றாலும் வேறுபடினும் சமயத் தொண்டில் அனைவரும் ஒன்றுபட்டமையால் அவர்கள் வீடுபேறு பெற்றனர். பக்தர்கள் சமூகத் தொண்டர்கள்; பக்தர் களிடையே உயர்வு தாழ்வு கிடையாது. பக்திநெறி சாதிப்பிரி வினை அற்றது (முத்துச்சண்முகம் தமிழ் இலக்கியக் கோட்பாடுகள் பக்கம் 47) என்ற முனைவர் முத்துச் சண்முகம் கூற்று நோக்கத் தக்கது.

ஆதி சைவ மரபில் தோன்றிய சுந்தரர் நரசிங்கமுனையர் என்னும் குறுநில மன்னர் இல்லத்தில் வளர்ந்தார். வேளாளர் குடி யில் பிறந்த அப்பரை அந்தணர் குல சம்பந்தர் அப்பரே என்றார். சம்பந்தர் சிவிகையைத் தாங்கியது அறிந்து அப்பர் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். அப்பூதியடிகள் அப்பரைக் காணாமலேயே அவரைக்குருவாகவும் பொன்னாகவும் பொருளாகவும் போற்றியது மட்டுமன்றித் தம் பிள்ளைகளுக்கும் அவர் பெயரையே சூட் டினார்.

சேக்கிழார் நாடாளும் அரசர் முதல் திருக்குறிப்புத் தொண்டர் வரை அனைவரையும் ஒரு தன்மையராகவே விளக்குகின்றார். இதுபற்றிச் 'சிவ அரசில் செந்நெறிக் குடியரசில் குடிகுலபால் வேற்றுமை ஏதும் இல்லை என்று எடுத்துக்காட்டும் பெருந்தமிழ்க் காப்பியம் பெரியபுராணமே எனலாம்' என்று முனை வர் சஞ்சீவி கூறியுள்ளது கூர்ந்து நோக்கத்தக்கது.

சேக்கிழார் ஐயர் என்ற சொல்லைத் தம் காப்பியத்துள் நுட் பமாக ஆறு இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அச்சொல் நான்கு முறை யாழ்ப்பாணருக்கும் ஒரு முறை திருநாளைப்போவாருக்கும் ஒரு முறை கண்ணப்பருக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நீதிமுறை

சேக்கிழார் காலத்தில் நீதிநெறிமுறையினைச் சிறப்பாகப் பேணி வந்தனர். குறையுடையோர் அரசரிடம் நேரே சென்று முறையிடுதல் அக்கால வழக்கம். இவ்வுண்மையினை மனுநீதிச் சோழன் வரலாற்றால் அறியலாம். இவ்வுண்மையினைத் திருநீல கண்ட நாயனார் புராணம் தடுத்தாட் கொண்ட புராணம் ஆகியவற்றில் காணலாம்.

மன்னன் எவ்வாறு மக்களைக் காக்க வேண்டுமென்பதைச் சேக்கிழார் 'மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை' (பெரிய புராணம் திருநகரச் சிறப்பு பா. 36) என வரும் பாடலில் உணர்த்துகின்றார்.

இறைவனே நீதி வடிவமாக விளங்குபவன். இறைவனிடட் சுந்தரர் கொடுத்த வாக்குறுதியினைத் தவறியதால் திருவொற்றி யூரில் தம் இரண்டு கண்களையும் இழந்தார். இறைவனின் தோழ ராக விளங்கியவர் சுந்தரர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு வழக்கினை விசாரித்துத் தீர்ப்பு வழங்க மூன்று வகை யான சாட்சியங்கள் தேவையாகும். அவை ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி என்பனவாகும். இந்த மூன்றின் துணையால்தான் சுந்தரரின் வழக்கு விசாரிக்கப்பட்டதென்பதை 'ஆட்சியில் ஆவ ணத்தில் அன்றி மற்றயலார் காட்சியில் மூன்றில் ஒன்று காட்டு வாய்' (தடுத்தாட் புராணம் பா. 5) என வரும் பாடல் விளக்கு கின்றது. வழக்கு நடைபெறும் இடம் வாதியின் இருப்பிடம் என் பதும் அறியப்படுகிறது. திருநீலகண்ட நாயனார்க்கும் வேதியர்க் கும் நடைபெற்ற வழக்கில் தில்லையிலுள்ள அவையோர்களே வழக்கினைத் தீர்த்தவர்கள் என்பதும் புலனாகிறது. சிறியவர்கள் செய்த பிழைக்குப் பெரியோர்களே பொறுப்பாவர் என்பதைக் சண்டேசுர (பாடல் 43) புராணம் நமக்கு விளக்குகின்றது.

உழைப்பே உயர்வு

சேக்கிழார் உழைப்பே உயர்வு நல்கும் என்பதை நம்பியவர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பரின் வழியில் நின்றவர். காப்பியத்தால் வரும் அனைத்து அடியார்களும் உழைப் பால் உயர்ந்தவர்கள். அவருள்ளும் தாழ்ந்த குலத்தில் தோன்றிய வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறிப்புத் தொண்டர் துணி வெளுத்தலைத் தொழிலாகக் கொண்டவர். தம் உழைப் பால் செய்த திருப்பாட்டினைத் தந்து தொண்டு செய்தவர் திரு நீல கண்டர். அமர்த்தியார் கோவணம் நெய்து அடிகளார்கட்கு உவந்தளித்தார்.

திருத்தொண்டர்களின் உள்ளமும் உணர்வுகளும் செயல் களும் சமுதாயத்திற்குப் பல நிலைகளில் பயன் பட்டிருக்கின்றன என்பதைச் சேக்கிழார் வாய்ப்புக் கிட்டும் பொழுதெல்லாம் மறவாமல் பாடியுள்ளார். சமுதாயத்தில் நிகழ்ந்த அத்துணை நிகழ்ச்சிகளையும் இயற்கையாகச் சேக்கிழார் வெளிப் படுத்தியுள்ளார். ஆதலின் தமிழர்களின் வாழ்க்கையினைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி பெரியபுராணம். பக்திச் சுவை விழைவோர்க்கு இது ஒரு பெருங்காப்பியம். பக்தியாளர் களுக்கு இது பக்தி சுரக்கும் சுனை. தமிழ்ப் பற்றுள்ளவர்களுக்கு சிறந்த தமிழிலக்கியம். சீர்திருத்தவாதிகளுக்குப் புத்துலகம் காட்டும் பெட்டகம். ஆட்சியாளர்களுக்கு அரசியல் சாசனம். நீதியை நாடுகின்றவர்களுக்குச் சட்டப் புத்தகம். இல்லறத்தார்க்கு நல்லற நூல். பொதுவுடைமைக் கொள்கையார்க்கு உலக சமரசம் காட்டும் சாசனம். சுருங்கக்கூறின் சமுய தாயத்தில்நடந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒருங்கே திரட்டித் தரும் கருத்துக் கருவூலமாகும்.

3. தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சமுதாயப் பார்வை

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

சமுதாய நோக்கில் அருளாளர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய சமய அருளாளர்களின் படைப்புகளில் மறுமலர்ச்சி நோக்கும் பொதுமை வழிபாட்டுணர்வும் பெரிதும் வெளிப்பட்டு நின்றன. திருவருட்பிரகாச வள்ளலார் (1823-1874) வண்ணச்சரபம் தண்ட பாணி சுவாமிகள் (1839-1898) பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் (1850-1929) ஆகிய மூவரும் தமிழுக்கும் சமுதாய உணர்விற்கும் சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றினர். தமிழின உணர்ச்சி, மொழி உணர்ச்சி, சமுதாய உணர்ச்சி ஆகியவற்றைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தி புத்துணர்ச்சி மல்கக் காரணமாயினர். உயிரிரக்கத்தோடு கூடிய வழிபாட்டுணர்வைத் தம் பாடல்களில் வற்புறுத்தினர். 'கொல்லா நெறியே குருவருள்நெறி' எனக் கொள்கை முழக்கம் செய்தனர். இம்மூவருள் தண்ட பாணி சுவாமிகளின் படைப்புகளில் காணும் சமுதாயப் பார்வை குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

தண்டபாணிசுவாமிகள்

தண்டபாணி சுவாமிகள் உயிரக்க நெறி நின்று பாடிய பாடல்கள் பலவாகும். கருவிலே திருவுடையராய் விளங்கிய இவர் சிறு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர் என்பர். வண்ணம் பாடுவதில் வல்லவராய் விளங்கியமையின் 'வண்ணச்சரபம், எனப் போற்றப் பெற்றார். இலக்கண, இலக்கிய, சமய, சாத்திர தத்துவ நூல்கள் எனப் பல்வகையிலும் தம் புலமையைப் பதித்தவர். ஏறத்தாழ ஒரு இலட்சம் பாடலுக்கு மேல் பாடியதாகவும் இப்பொழுது சுமார் 50,000 பாடல்கள் கிடைப்பதாகவும் கூறுவர். தம் படைப்புகளுள் பாதிப்பாடல்களுக்கு மேல் இறைவன் மீது கொண் பாடலால் அனலிலும் புனலிலும் இட்டுத் தாமே அழித்ததாகக் கூறுவர்.

மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சமயபேதமற்ற பெருந்தகையாளர். அனைத்துத் தெய்வங்கள் மீதும்பாடிய

அருளாளர். திருவரங்கத்திருவாயிரம், பழனித்திருவாயிரம், தில்லைத்திருவாயிரம், தெய்வத்திருவாயிரம், திருமால் திரு ஆயிரம், ஏழாயிரப்பிரபந்தம் போன்ற சமய நூல்கள் பலவும் இவருடைய படைப்புகளாகும். கோவை, பிள்ளைத்தமிழ், கலம்பகம் சதகம், அந்தாதி, மாலை, சித்திரக்கவி எனப் பல துறைகளிலும் நூல்கள் பாடியவர்.

மும்மணிக் கோவைபல மாலைபல அந்தாதி
மூவகைய பலஇன் னவா
முதுநெறிப் பனுவல்பல புதுநெறிப் பனுவல்பல
முத்தமிழ்ச் சுவை வழாமல் இம்மணிற் புலவர்பலர்
மகிழ்வுறக் கொடுத்து
இப்போதும் நுவலுகின்றேன்
இன்னமும் பகருவேன் நின்னருள் உரித்தெனக்கு'

என்று தாம் பாடிய பாடல்கள் குறித்து அவரே குறிப்பிடுவார். 'புதுநெறிப் பனுவல்' எனத் தம் நூல்களை அவர் சுட்டுவது உளங் கொளத்தக்கது.

சமயப் பொதுமை

அறுசமயங்களான சௌரம், சைவம், சாக்தேயம், வைணவம், காணாபத்யம், கௌமாரம் முதலிய அனைத்தையும் பேதமின்றிப் பாடியவர் தண்டபாணி சுவாமிகள். ஏழுகிழமைகட்கும் உரிய வழிபாட்டுப் பாடல்களாக ஏழாயிரம் பாடல்கள் பாடி 'ஏழாயிரப் பிரபந்தம்' எனும் நூலைத் தந்தவர்.

அநந்தபேதத்து அறுவகைச் சமயமும்
அவை முழுவதும் ஒருவலும் தழுவலும் ஆகும்
அதீத நெறி ஒன்றும் ஆய ஏழும்
வழிபடற் பொருட்டே வாரம் ஏழாயவே

என்று தம் சத்திய சூத்திரத்தில் குறிப்பிடுவர். அந்தந்தச் சமயத் தெய்வங்களைப் பற்றிப் பாடும்போது அவ்வச் சமய வாணராகவே மாறிவிடுகின்றார். ஏழாயிரப் பிரபந்தத்துள் கதிரவனைத் துதிக்கையில் சௌரனாகவும், சிவனைப் போற்றுகையில் சைவனாகவும், சத்திய வழிபடுகையில் சாக்தனாகவும், விட்டுணுவை இறைஞ்சுகையில் வைணவனாகவும், கணபதியை வணங்குகையில் காணாபத்தியனாகவும், குமரனை ஏத்துகையில் கௌமாரனாகவும், சமயாதீத்தைச் சார்கையில் மாந்தனாகவும் அந்தந்த நிலையில் நின்று பாடுகின்ற பீடும் பெருமையும் இவரிடத்தே ஈடும் எடுப்பின்றிக் கொண்ட கொள்கையில் தண்டமிழ்த் தொண்டராய் விளங்குகின்றார் என்பர். (த.கோவேந்தன், திருமால் ஆயிரம், முன்னுரை ப. XII)

மாந்தர் இன ஒருமைக்குச் சமய ஒருமை இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர் அருளாளர் தண்டபாணி சுவாமிகள் என்பது அவர்தம் படைப்புகளால் நன்கு விளங்கும். தெய்வ வடிவம் பலவாயினும் பரம் பொருள் ஒன்றே என்பதைப் பல பாடல்களின் வழி வற்புறுத்துவர். எந்த ஒரு சமயவாதிக்கும் தன் தெய்வத்தைப் போற்றும் நிலை தொடக்க காலத்தில் இருக்கக் கூடும். முறையான வழிபாட்டால் சமரச நிலையை அடைய முடியும் என்பதைத் தம் நூலான 'தியானாநுபூதியில்' கூறுவார்.

என்கடவு ளேஉயர்ச்சி யென்று சொல்வோன்
இறுமாந்து நாட்கழியாது ஏங்கி வாடித்
தன் கடவுள் திருவுருவைக் காண வேண்டித்
தவித்தானேல் சமரசத்தோர் தம்மிற் சேர்வான்
பின்கடவுள் வேற்றுமைதோற் றாது சொன்னாற்
பிணங்கிடான் அவரோடும் பேசிக் கொள்வான்
முன்கடவுள் வரக்கண்டும் புவியோர் உய்யும்
முறைகருதிப் பலவாறு மொழிவார் உண்டே (24)

என்னும் பாடல் வழிச் சமரச நன்னெறிக்கு வழிவகுக்கின்றார்.

உயிரிரக்கக் கோட்பாடு

அனைத்து உயிரின் மீதும் அளவற்ற அன்பு பூண்டவர் சுவாமிகள். சீவகருணையைத் தம்முயிர் நாடியாகக் கொண்டவர். எல்லா மக்களும் கொல்லல், ஊன் உணவு கொள்ளல் இன்றி நல்லோராய் வாழவேண்டுமென எண்ணியவர். இத்தகு கோட்பாட்டினைத் தம் உயிர்க் கொள்கையாகக் கொண்ட வடலூர் அடிகளாரிடம் நட்புக் கொண்டவர். 'உன்கையால் ஒரு சிற்றெறும்பைக் கொன்றுவிடு; உனக்கும் பிறஉயிர்கட்கும் வீடுபேறு தருவேன்' என்று இறைவனே கூறினும் அத்தகைய முக்தி வேண்டேன்' என்று கூறித் தம் அழுத்தமான உயரிரக்க உணர்வை வெளிப்படுத்துவார்.

சிற்றெறும்பு ஒன்றைச் செகுத்தியேல் அதற்கும்
மற்றெலா உயிர்க்கும் வணங்கும் உன் தனக்கும்
நம்திரு வடிநிழல் நன்களிக் குதும் என
முந்திய முதல்வனே முன்வந் துரைப்பினும்
ஐய! அம் முத்தி அடியனேற்கு ஆகாது

என்னும் கொள்கையினர் சுவாமிகள். வடலூர் அடிகளாரின் சிந்தனைகளும் இவற்றோடு ஒப்பு நோக்கத்தக்கன.

தமிழ் உள்ளம்

தமிழின் மீது உள்ள பற்றினை அவர் வெளிப்படுத்தும் விதம் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. தமிழ்ச் சுவையறியாத தெய்வத்தையும் அவர் சாடுவார்.

தமிழ்ச்சுவையறியாத் தெய்வம் உளதெனில்
அஃதுணர் அலகையில் தாழ்வெனல் அறமே
(அறுவகை இலக்கணம் புலமை 3)

என்று தமிழ்ச் சுவையறியாத் தெய்வத்தை அலகைக்கும் கீழானது என்பர்.

தமிழ் மொழிக்கு உயர்மொழி தரணியில் யாதெனல்
வெகுளியற்றிருப்போன் வெறும் புலவோன்

என்பார். தமிழ்ச் சுவையறிந்த முருகனைப் பற்றிக் குறிப்பிடும் போது

பூசைக் கவுமாரர் புதுத்தமிழ் மீது
ஆசைப்படும் ஆறுமுகக் குகவேள் (முருகதாசர் அநுபூதி 50)

என்றுரைப்பார். இறைவனிடம் வேண்டும் போதுகூடச் செந்தமிழ்ப் பேரார்வம் சிதையும்படி கலிப்பேய் வந்தடையாவாறு வரம் தருவாய் என வேண்டுவார். தமிழினையும் இறைவனையும் ஒன்றுசேரப் போற்றும் உள்ளம் இவரிடமிருந்ததை இவர்தம் பாடல்கள் காட்டுகின்றன.

சமுதாயச்சிந்தனை

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த துறவியருள் இவர் தம் பணி வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாய் விளங்குகின்றது எனலாம். ஆங்கிலேயரின் வரவால் தமிழ்ப்பண்பாட்டுக் களங்கள் எங்ஙனமெல்லாம் சிதைந்துள்ளன என்பதை 'ஆங்கிலியரந்தாதி' என்னும் தம் நூலுள் காட்டுகின்றார். 'திருமால் ஆயிரம்' என்னும் இறை வழிபாட்டு நூலிலும் இத்தகு சமுதாயப் பார்வையினைக் காண முடிகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சி நிகழ்ந்தபோது அவர் உண்ணும் ஆனிறைச்சி அடிகளின் உள்ளத்தைப் புண்படுத்தியது. அரசியல் குறித்து ஆன்மிகத்தில் உள்ளோர் பெரும்பாலும் பேசுவதில்லையெனினும் சுவாமிகள் ஆங்கிலேயரின் கொடுமையை எதிர்த்துப் பலபாடல்கள் பாடியுள்ளார். 'இங்கிலீசுக்காரர் அநியாயக் கொடுமை' என்று தொடங்கும் அவர்பாடல் பெரிதும் குறிப்பிடத் தக்கது.

எடுப்பு

இங்கிலீசுக் காரர் அநியாயக் கொடுமையை
என்னென்று சொல்வேன் அம்மா? (இங்கிலீசு)

தொடுப்பு

பங்குக்குத் தகப்பான் பால் மகன் சண்டை செய்வதும்
பாரிக்கு நாயகன் பயப்படுகின்றதும்
எங்கும் பசுக்கள் மேய்தற் கிடமற்றுப் போனதும்
எளியவர் வழக்கிழந்திடுவதும் முதலாக (இங்கிலீசு

உடன் தொடுப்பு

சப்பாத்திக் கள்ளிக்கும் தரிசுக்கும் தீருவை
தடையறக் கொடுத்திடத் தண்பதங்கள் செய்வதும்
மெய்ப்பார்ப்பார் வீட்டினிற் பிறந்த பிள்ளைகளும்
வேதங்கள் படியாமல் வேலைகேட் டலைவதும்
துப்பாக்கி எனும் திருட்டாயுதம் வாள் முதற்
கொல்லும் நல் ஆயுதத் தொகைகளை வெல்வதும்
செயர்க்கு வித்தாகிய கள்ளும் சாராயமும்
தேனுக்கும் மேலாய சிறப்புற்று விளங்கலும்
பயிர்த் தொழில் செய்வோர்க்கும் மேலான லாபங்கள்
பாவி வக்கீல்களே படைப்பதும் ஆதியாம் (இங்கிலிசு)

வெள்ளையர் ஆட்சியைக் கொடுங்கோல் என்றும், அவர் குடையைக் 'கருங்குடை' என்றும் அவர்களை இழிந்த பேய் போன்றவர் எனுங் கருத்துடன் 'குணுங்கர்' எனும் சொல்லால் இழித்தும் பழித்தும் பேசுவார்.

'புலை வெண் குணுங்கர்'
'எமன் ஒக்கும் ஆங்கிலியர்'
'திருட்டுத்தன்மை கைவந்த ஆங்கிலியர்'

என்றெல்லாம் சாடுவர்.

நிரைபடப் பசுவனகந் தந்தினம் கொன்றுதினும்
நீக்குடை நிழலில் வெம்பித்
தலைமகன் அழும்துயர் சகிக்கறியேன் மனச்
சாட்சி யன்றி யுண்டோ!'

என்று திருத்தணிகைப் பதிகத்திலும் குறிப்பார். இவ்வாறு ஆங்கிலேயரைச் சாடும் சுவாமிகள் அவர்தம் ஆட்சியை அகற்றவல்லமை படைத்த ஒருவனை, வீரனை, தலைவனை, சித்தனைப் படைத்துத் தருமாறு இறைவனிடம் வேண்டுவார்.

செந்தமிழ்ப் பயிற்சி மறைந்து ஆங்கிலமோகம் ஏற்பட்டதையும் குறிக்கின்றார்.

'கன்னி நன் நாட்டில் பிறந்தாரும் ஈனக்கலை பயில

இன்னிசைச் செந்தமிழ்ப்பாவாணர் வாடுறும் இக்கொடுமை என்பர்'.

தவத்திரு சுவாமிகளின் படைப்புகள் இங்ஙனம் சமய, சமுதாய மொழி உணர்வை ஊட்டும் வண்ணம் அமைந்தில்லது. அனைத்துப் பாடல்களாலும் புலனாகின்றன. ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன்னரேயே அவர்தம் அணுகுமுறை விழிப்புணர்ச்சியோடு அமைந்திருப்பது எண்ணி இன்புறத்தக்கதாய் இலங்குகின்றது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மாபெருங்கவிஞர், சமயப் பொதுமையாளர், தத்துவ நூல் வல்லார், சமுதாயச் சிந்தனையாளர், புதுமை இலக்கணம் படைக்க வல்லோர், தமிழ்ப் பற்றாளர், ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி கொண்டவர், உயிர்க் கொலையை வெறுத்த அருளாளர், பண்பாட்டைப் போற்றியவர் எனப் பல நிலைகளாலும் சுவாமிகளைக் கண்டு மகிழலாம்.

. கன்னட வீர சைவ இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்

டாக்டர் செ. இராமசாமி
கன்னடத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

1: கன்னட இலக்கியம்

கன்னட இலக்கிய வரலாற்றை ஆய்வுக் கண்ணோட்டத்தில் வல்லுனர்கள் பலகால கட்டங்களாகப் பிரித்து இருக்கிறார்கள். இந்தப் பிரிவுகளுக்கு 1. சமயம், 2. காலம், 3. கவிஞன், 4. யாப்பு இவற்றை வெவ்வேறு வல்லுனர்கள் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனர். 9ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரையிலான கன்னட இலக்கிய வரலாற்றை (1) சமணயுகம் (9லிருந்து 12 வரை) 2. வீரசைவ யுகம் (13லிருந்து 15 வரை) 3. வைதிக யுகம் (16லிருந்து 19 வரை) எனச் சமய அடிப்படையில் பிரித்தாய்வது வழக்கம். சைவ, வைணவ இலக்கிய காலம் வைதிக யுகத்தினுள் அடங்குகிறது. ஒரு சமய கால கட்டத்தில் மற்றொரு சமய நூல்கள் ஒன்றிரண்டு வந்திருக்கக் கூடுமானாலும் பொதுவாகக் குறிப்பிட்ட சமய ஆதிக்கத்தை கண்ணுற்று இப்பிரிவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கன்னட இலக்கியத்தின் ஆரம்ப காலமான 9ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலக்கியத்தையும் சமயத்தையும் பிரித்துப் பார்ப்பது இயலாதது. ஏனெனில் இந்த பத்தாம் நூற்றாண்டு இலக்கியத்தின் இலக்கிய நோக்கமே சமயமாகத்தான் இருந்திருக்கிறது. ஆதலால் அத்துணை இலக்கிய நூல்களையும் சமய நூல்களாகவே கொள்ளலாம். இந்தியசமயங்களல்லாது கிறித்துவ, இஸ்லாமிய நூல்களும் பிற்காலத்தில் வந்துள்ளன.

2. கருநாடகத்தில் சமயங்கள்

தொன்றுதொட்டுக் கருநாடகத்தில் பல சமயங்கள் பரவியிருக்கின்றன. உலகில் இன்று பிரபலமாக இருக்கும் சமயங்களில் இந்து, சமணம், கிறித்துவம், இஸ்லாம் சமயங்கள் கருநாடகத்தில் புழக்கத்தில் உள்ளன. பௌத்தமும் ஒருகாலத்தில் வளர்ந்தோங்கி

யிருந்தது. கருநாடக சமய வரலாற்றை ஆராய்பவனுக்கு அது உலக சமய வரலாறாகத் தோன்றினால் மிகையாகாது.

இந்து சமயத்திலேயே சைவம், பாசுபதம், சைவ சித்தாந்தம், வீர சைவம், வைணவம், பாகவதம், துவைதம், அத்வைதம், சாக்தம், காணாபத்யம், ஸ்காந்தம், சௌரம், முதலானவைகளும், வகுலீசம், காளாமுகம், காபாலிகம் போன்ற பயங்கர சைவ சமயப் போக்குகளும் புழக்கத்திலிருந்திருக்கின்றன.

ஆதியில் வைதிகம்தான் இங்கு காலூன்றியிருந்திருக்கிறது. இதற்கும் முன்பு இங்கே ஆரியமல்லாத ஒரு தொன்முதற்குடி அல்லது திராவிட நாகரிகமும், அது சார்ந்திருந்த ஒரு சமய மரபும் இருந்தது என்பதற்கும் சான்றுகள் உள்ளன. இதனுடன் வைதிகமும் கலந்து இந்துச் சமயமாக உருமாறி, பல கிளைகளைக் கொண்டு பரவி வந்தது. இதன் பிறகு பரவிய பௌத்த, சமண சமயங்களையும் கன்னடியர் வரவேற்றுப் போற்றியிருக்கின்றனர். ஆயிரமாயிரம் ஆண்டுகள் இங்கே சைவ, வைணவ, சமண, பௌத்த மதத்தவர் இணைந்து அன்போடு அமைதியாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். பிற்காலத்தில் பரவிய இஸ்லாமிய, கிறித்துவ சமயங்களையும் வரவேற்று வாழ வைத்துப் போற்றியது கருநாடகம். இந்தப் பிற சமய சகிப்புத்தன்மை கன்னட மக்களின் சிறப்பு.

எத்துணை சமயங்கள், எத்துணை மதங்கள் தோன்றினாலும், பரப்பப்பட்டாலும், அவைகளின் உயர் கொள்கைகள், சமுதாய மேம்பாட்டு நெறிகள், சமுதாய நலம் பேணும் அரிய கருத்துகள் மட்டுமே சீரணிக்கப்பட்டு நிலைத்து நின்று இன்று எல்லாச் சமய நெறிகளின் கலவைச் சமுதாயமாகத் தோற்றமளிக்கிறது. இத்துணை சமயங்களை வரலாற்றில் காணப்பட்டாலும், இலக்கியம் போந்து பேறு பெற்ற சமயங்கள் சிலவே. அவை முறையே சமணம், வீர சைவம், சைவம், வைணவம், இஸ்லாமியம் மற்றும் கிறித்துவம் ஆகும். இவைகளிலும் மிகச் சிறப்பான இடத்தை சமணமும் வீரசைவமும் வைணவமும் பெற்றிருக்கின்றன.

3. வீரசைவ சமயம்

இந்து சமயத்துள் கிளைத்த பல சமயவழிகள் பகுத்தறிவற்று, பயங்கரவாதமாக மக்களிடமிருந்து விலகிப் போயின. சைவத்தின் இக்கிளைகளை வேதத்திற்கு எதிரானவை என இராமானுசர் கூறினார். வேதங்களை ஒப்புக்கொள்ளும் அத்துவைதம், சிறீவைணவம் போன்றவையும் அவ்வளவாக ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகத் தோன்றவில்லை. கர்மகாண்டத்திற்கு முக்கியத்துவம் அளித்த இவை வேள்வி, யாகம் போன்றவைகளுக்கு தனிச்சிறப்புக்

கொடுத்தமையால் பொருளற்றவையாகத் தோன்ற ஆரம்பித் தன. ஆதலால்தான் பசவண்ணர் ஒரு வசனத்தில் ''வெறும் பேச்சுக்கே உனைக் கொன்றார்களென அழு கடாவே! வேதம் படித்தவர்கள் முன் அழு, சாத்திரம் கேட்டவர்கள் முன் அழு! நீ அழுததற்கு தகுந்தது செய்வான் கூடல சங்கமதேவன்'' எனக் கூறியுள்ளார். இப்படி, சமயத்தின் பெயரால், வேள்வி, யாகங் களின் பெயரால் உயிர் வதை செய்வது, மாமிசம் உண்பது போன்ற செயல்கள் மலிந்து கிடந்தது இந்துச் சமயத்தில். தர்க்கங்களில், வாதங்களில் பெருமைபற்றிக் கொண்டு மக்களிடமிருந்து விலகிச் சென்று விட்டது வைதிக சமய முறைகள். சமுதாய முன்னேற்றக் கொள்கையற்ற இந்து சமயம், தனி மனிதனின் ஆன்மீக உயர்வு பற்றி கூறி வந்தது. இப்படிப்பட்ட சமய அரசியல் குழப்பமான சூழ்நிலையில் சமுதாயக் கண்ணோட்டமுள்ள அமைப்புத் தேவைப் பட்டது. இப்படிப்பட்ட கால கட்டத்தில்தான் பசவண்ணர் தோன்றினார். ஆனால் பசவண்ணர் வீர சைவ சமயத்தைத் தோற்றுவிக்கவில்லை. வீரசைவம் 9, 10ம் நூற்றாண்டிலேயே தோன்றி வளர்ச்சியடையா நிலையில் இருந்தது. இதற்கும் புத் துயிர் ஊட்டி உலகறியச் செய்தவர் பசவண்ணர். பசவண்ண ருடன், அல்லமர், சென்னபசவண்ணர், சித்தராமர், அக்கமா தேவி, மாதரசர், கக்கய்யா, பொம்மய்யா, மாரய்யா போன்ற நூற்றுக்கணக்கான அடியார்கள் இணைந்து செயல்பட்டனர். பசவண்ணரின் வீடே 'சிவானுபவ மண்டபம்' என அழைக்கப் பட்டது. இந்த மண்டபம் தான் வசன இலக்கியத்தின் ஊற்றுக் கண். அங்கே இவர்கள் புதிய தத்துவம், சமயம், சமுதாயம் பற்றிப் பேசினர். தங்களது சமயத்திற்கு ஒரு சமுதாய வடிவம் கொடுத் தனர். இதை ஒரு சமயம் என்று அவர்கள் கூறவே இல்லை. இப்படிச் சமயத்தில் தோன்றிய சூறாவளி ஒரு சமுதாயப் புரட்சி யாக வெடித்தது. இவர்கள் தங்களை சரணர்களென அழைத்துக் கொண்டனர். சரணர்கள் மனிதவாழ்வின் நிலை பண்புக்கூறு மதிப்புகளை நிர்ணயம் செய்தனர்,. அது ஆண் பெண் உயர்வு தாழ்வு எண்ணத்திற்கப்பாற்பட்டது. எங்கும் நிறைந்திருக்கும் ஆன்மா அவனில் இருப்பதால் இந்த வேறுபாட்டிற்கு அப்பாற் பட்டவன் மனிதன். அவன் நிற்கும் நிலம் அதாவது சிருஷ்டி உண்மையானது. இது பொய்யன்று, பந்தமுமன்று. கர்மவினை மண்ணில் கர்மஉடலால் தான் மோட்சம் கிடைக்கும் என்றும், 'உலகென்பது படைப்பவனின் பட்டறை' என்றும், 'இங்கு ஏற்றுக் கொள்ளப்படுபவர்கள் அங்கும் ஏற்றுக் கொள்ளப்படுவார்களென் றும் தெளிவாகக் கூறினார். உலகை, வாழ்வை மாயமென்றும் பொய்யென்றும் கூறாமல் அதன் உயர்வின் பொறுப்பேற்றவர்கள் சரணர்கள். மண்ணில் நின்று கைலாயத்தை நோக்குவதை விட அந்தக் கைலாயத்தையே மண்ணுக்குக் கொண்டுவர வேண்டுமென்

பது இவர்கள் நோக்கு. இப்படி வாழ்வுசார்பான, மக்கள் சார்பான கருத்துக்கள் மக்கள் விரோத வாழ்க்கை விரோதக் கொள்கைகளையுடைய இந்துச் சமயத்திற்கு பெரும் அதிர்ச்சியையும், மக்களிடையே பரபரப்பையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது.

4. வீரசைவ இலக்கியம்

கன்னட இலக்கிய வரலாற்றில் வீரசைவ இலக்கிய காலம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மற்ற சமய இலக்கியங்களில் வடமொழி இலக்கிய ஆதிக்கம் மிகுதியானது. வீரசைவ இலக்கியத்தின் மீது தமிழ் சைவ சித்தாந்த, தேவாரப் பாடல்கள், சைவப் புராணங்களின் செல்வாக்கும் சிறிதளவு வடமொழி இலக்கியத்தின் செல்வாக்கும் காணப்பட்டாலும் கன்னடத்தின் தனித்தன்மை மிகுந்ததாகவும் அமைந்தது வசன இலக்கியம். வீரசைவ சமய நூல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. வசன இலக்கியம்
2. காப்பிய நூல்கள்
3. சமய நூல்கள்

4.1. வசன இலக்கியம்

வசன இலக்கியம் என்பது ஆரம்பகால வீரசைவ சரணர்களின் படைப்பு. இவை சிறுசிறு வடிவங்களுடையவை. இவை பாடலும் அல்லாத உரைநடையும் அல்லாத இடைப்பட்ட நிலையுடையவையாதலால் இவற்றை 'வசனம்' என்றழைத்தனர். இதுவரை வழக்கத்திலிருந்த கடினமான காப்பிய மொழியிலிருந்து விடுபட்டு, மக்களின் எளிய மொழியிலேயே அமைந்தது வசனம். இவை பொதுவாக எட்டு பத்து வரிகளையே உடையவை. ஆயிரக்கணக்கான வசனங்களை இவர்கள் இயற்றியுள்ளனர். இவர்களில் அல்லமர், பசவண்ணர், சித்தராமர், அக்கமகாதேவி, சென்ன பசவண்ணர் ஆகியோரின் வசனங்கள் மிகவும் பிரபலமானவை.

4.2. வீரசைவ காப்பியங்கள்

ஆரம்பகால சரணப்பிரமுகர்களுக்குப் பிறகு காப்பிய யுகம் ஆரம்பமாகிறது. சிவனைப் பற்றியும், சிவனடியார்களைப் பற்றியும் இக்காலத்தில் காப்பியங்கள் படைத்தனர். இவற்றில் அரிகரனின் 'கிரிசா கல்யாணம்', '63 நாயன்மார்களின் வரலாறு',

இராகவாங்கனின் 'அரிச்சந்திர காவ்யம்', சாமரசனின் 'பிரபுலிங்க லீலை', பீமகவியின் 'பசவ புராணம்' சடக்சரதேவனின் 'சபர சங்கர விலாசம்', 'இராசசேகர விலாசம்' போன்ற காப்பியங்கள் குறிப்பிடத்தகுந்தவை. இவற்றில் பிரபுலிங்கலீலை, பசவ புராணம் தமிழுக்கும், தெலுங்கிற்கும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

i.3. வீரசைவ சமய நூல்கள்

இலக்கிய நூல்களல்லாது, சமய சாத்திர நூல்களும் தோன்றியுள்ளன. காப்பிய காலத்துக்குப் பிறகே இவை மிகுதியாகத் தோன்றின. வசன இலக்கியத்தின் சாரத்தையே சாத்திரமாக்கிக் கொடுத்தனர் 14ம் நூற்றாண்டுக்குப் பிறகு வந்த வீரசைவ மடாதிபதிகள். 'சிவானுபவ சாத்திரம்', 'சித்தாந்த சிகாமணி', 'கைவல்ய பத்ததி', 'விவேக சிந்தாமணி' போன்றவை குறிப்பிடத்தக்க நூல்கள்.

5. வீரசைவ இலக்கியம் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்

இந்திய சமயங்களில், இல்லாத கடவுளைத் தேடியவர்களும், பாடியவர்களும் ஏராளம். ஆனால் மனிதனைத் தேடியவர்களையும், சமுதாய ஏற்றத்தைப் பாடியவர்களையும்தேடித்தான் காணவேண்டும். இந்திய சமயங்களில் சமுதாயப் பார்வை முதலில் தோன்றியது பௌத்த மதத்தில் தான். பிறகு குறிப்பிடத்தக்க சமயம் வீரசைவம் தான். ஆதலால்தான் சரணர்கள் சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி விமரிசித்து இருக்கிறார்கள். எங்கே சமுதாய அறிவு உணர்வாக உருவெடுக்கிறதோ அங்கே விமரிசனம் தோன்றுகிறது. விமரிசனம் என்றால் சமுதாயத்தின் இருப்பை எடுத்துக் காட்டி, அதன் குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டுவதோடு நில்லாமல், அதை சீர்திருத்தும், நெறிப்படுத்தும் வழிகாட்டியாகவும் செயல்படுவது இன்றியமையாதது. சரணர்கள் சிவானுபவிகளாக இருந்தது போல் உலக அனுபவம் மிக்கவர்களாகவும் இருந்தனர். தங்கள் சமகால சீர்குலைந்த சமுதாயத்தை நல்வழிப் படுத்த சமய டாம்பீகத்தை விரட்டி மனிதத் தன்மையை விழித்தெழச் செய்ய, பரம்பரையான பொருளற்ற நடைமுறையைச் சீர்திருத்தி உயிர்த்தெழச் செய்ய வேண்டிய பல கொள்கைகள் அங்கே தோன்றின. பக்தி யென்பது அனுபவத்தின் புலப்பாடு. அதை உள்ளத்தில் வைத்துப் போற்ற வேண்டும். இப்படி ஆன்மீகத்தை அடைந்தவர்கள் புற ஆடம்பரத்தில்

திளைக்க மாட்டார்கள். உண்மை அறம் நசிந்துவிட புற ஆடம்பரத்தை வளர்க்கமாட்டார்கள்-

5.1. மக்கள் போரிடாமல் பெருமை பேசும் பேடியைப் போல் பரம்பொருள் பற்றிப் பேசும் வாய்வீச்சு வீரர்களாக இருந்தனர் போலும். கர்ம சித்தாந்தத்தைப் போற்றிய சமுதாயத்தைச் சாடுகிறார் சென்னபசவண்ணர்.

தச்சு மாசலதேவியை குலமகள் ஆக்குகிறேனென
பொன் காராம்பசுவைக் கொன்று நரகத்திற்குப்
போகச் சொல்லியதோ வேதம்
அகிம்சா பரமோ தர்ம மெனஓதி
அசுர விருந்திற்காக கருமம் செய்து
ஆட்டுக்கடாவை கொன்று தின்பது பாதகமில்லையா?

என்றும் சாடுகிறார்.

சாத்திரப் புராணங்களின் பெயரால் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தனர் போலும். அந்த நம்பிக்கையின் வேரையே அறுக்க முயற்சித்தனர் சரணர். ''வேதமென்பது வெறும் படிப்பு, சாத்திரமென்பது சந்தைச் செய்தி. புராணமென்பது போக்கிரிக் கும்பல்' என்கிறது ஒரு வசனம். இன்னொரு வசனம், 'சாத்திரம் பெரிதெனில் கருமத்தைத் தின்கிறது; வேதம் பெரிதெனில் உயிர்வதை சொல்கிறது'' என்று இவை பற்றிப் பொருள் தெரியாமல் உண்மை தெரியாமல் ஏற்படுத்தியிருந்த மாயத் திரையைக் கிழிக்கின்றனர்.

5.2. சாதி வேற்றுமை அக்காலத்தில் மிகப் பெரிய கொடுமையாக இருந்திருக்கிறது. சாதி பிறப்பால் ஏற்படும் ஒன்றாகக் கருதப்பட்டது. வருணாசிரமத்தின் பெயரால் சமுதாயத்தை உடைத்து வாழ நினைப்பவர்களைக் கண்டித்திருக்கின்றனர். பிராமணனாகப் பிறந்த பசவண்ணனே பிராமணர்களின் சுயநலத்தை, கபடத்தை வெளிச்சமாக்கியிருக்கிறார்.

பிராமணர்கள் தங்களைத் தாங்களே பூவுலக தேவதைகளென உயர்த்திக் கொண்டு மற்றவர்களைத் தாழ்த்தியதைக் கண்டு பசவண்ணர் கூறுகிறார்.

'பிராமணன் தெய்வமென நம்பியதால் கௌதமனுக்கு பசுவதையாயிற்று; பலிக்கு சிறையாயிற்று; கர்ணனுக்கு கவசம் போயிற்று; தக்ஷனுக்கு ஆட்டுத் தலையாயிற்று'.

'ஹோமத்தின் பெயரால் ஆடு தின்பவன்
பிறர் கழுத்தை யறுத்துவிட்டு மந்திரமோதும் கொலை
காரன். இவன் செயல் ஒருவிதம் சொல்லொரு விதம்'

எனவும்,

'நெருப்பு தெய்வமென வேள்வியிடும் பார்ப்பனர்
வீட்டில் தீப்பற்றியெரியும் போது கழுநீரையும்
தெருப்புழுதியையும் அள்ளிப்போட்டு எல்லோரையும்
அழைப்பர்' எனவும் கூறினர்.

சாத்திரத்திற்கொரு வழி தனக்கொரு வழியென வாழும் பிராமணரின் கொடும் கர்மத்தை கபடமனத்தை வெட்ட வெளிச்சமாக்கி பிராமணர் உயர்ந்தவர்கள் எனும் மாயையை உடைத்தெறிந்தனர். உயர்வு தாழ்வு பிறப்பில்லை, ஒருவனின் நடத்தையில் எனக் கூறினர்.

'சொல் தவறியவன் சக்கிலியன்
புலை தின்பவன் புலையன்'

என யார் இழிந்தவன் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் பசவண்ணர்.

5.3. சாதி வேற்றுமையை வெறுத்தது போலவே ஆண்-பெண் உயர்வு தாழ்வு மனப்பான்மையையும் கண்டித்திருக்கின்றனர். பெண்களுக்கும் ஆண்களுக்குரிய அத்துணை உரிமைகளும் உளவெனக் கூறியதோடு நில்லாமல் அவை கிடைக்க வழியும் ஏற்படுத்தினர். பெண்ணைச் சூத்திரம் என்கிறது வைதிகம். பெண்ணை மாயை என்கிறது இந்துச் சமயம். பெண்ணுக்குக் கடவுள் கணவன் எனக் கூறி அவள் மோட்ச வழியையும் அடைத்துவிட்டனர். இந்நிலையை சரணர்கள் மாற்றிப் பெண்களும் கல்வி அறிவு பெறும் வழியை ஏற்படுத்தினர். பெண்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல இலக்கியத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றனர். அக்கமகாதேவி, நீலாம்பிகா, முக்தாயி, ராசவ்வா, ரெம்மவ்யர், பொம்மலாதேவி, கங்காம்பிகை இப்படி பெண் கவிஞர்களின் பெரும் பட்டியலே உருவாகியது. ஆண் பெண் வேற்றுமையை தாசிமய்யா தம் வசனத்தில் இப்படிக் கூறுகிறார்.

'முலை முடி வந்தால் பெண்ணென்பர்
தாடி மீசை வந்தால் ஆணென்பர்
நடுவில் இளையும் ஆன்மா பெண்ணும் அல்ல
ஆணும் அல்ல பாராய் இராமநாதா'

5.4. வளரும் சமுதாயம் தொடர்ந்து உற்பத்தியில் தொடங்க வேண்டும் என்பது சரணரின் கொள்கை. உடலறம் லிங்க கிரியையாகத் தொடரவேண்டும். தொழிலில்லாமல், வேளாண்மையில்லாமல், உடலை வருத்தாமல் எந்தத் தனி மனிதனும் சமுதாயத்தில் இருக்கக்கூடாது. 'காயகம்' (காயம் என்றால் உடல், காயகம் என்றால் உழைப்பு) எனும் புதுத்தத்துவத்தை அறிமுகப்படுத்தினர். ''உடலிருக்கும் வரை எப்படிப்பட்ட சிவயோகியாக இருந்தாலும் முடிந்த அளவு உழைக்க வேண்டும். உழைக்காதவனுக்கு உண்ணும் அதிகாரமில்லை. உழைப்பே கைலாயம். அதில் உயர்வு, இழிவு, ஏற்றத் தாழ்வுகளில்லை. அது பக்தி ஞானத்துடன் கூடிய செயல். காய்ச்சிக் கொல்லனானான்; துவைத்து வண்ணா-னானான். ஆதலால் உழைப்பில் ஊறு காண்பது பாதகம். எல்லாத் தொழிலும் பரமனின் ஆராதனை. இதைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லாம் ஒரே மனிதகுலத் தோன்றல்கள். செவியில் பிறந்தவன் எவனும் இல்லை''. இப்படிச் சரண சமுதாயம் உழைப்பால் உயர்ந்தது. உயர்வு இழிவு உணர்வுகளை நிர்மூலமாக்கி, சமத்துவத்தின் வீடாகியது. இந்தத் தத்துவத்தால் பொருள் ஓரிடம் நில்லாமல் சமுதாயத்தில் வளமை ஓங்கியது. உழைப்பின் உயர்வை, சமுதாயம் புரிந்து கொண்டது.

5.5. சமுதாயத்தில் பக்தி, கடவுள் எல்லாம் ஆடம்பரப் பொருள்களாக மாறி வந்தன. ஜபம், தவம், பூசை எல்லாம் வெளி வேஷமாகலாம். கோயில்கள் பாமர மக்களைச் சுரண்டும், அறியாமையில் தள்ளும் விஷச்சுழியாக மாறியது. மக்கள் மாதக் கணக்கில் தங்கள் உழைப்பை விடுத்து, உழைத்துச்சேர்த்த பொருளை விரயம் செய்து, நேரத்தையும் வீணடித்துக் கொண்டு கோவில்களுக்குச் சென்று வந்தனர். இது கண்ட பசவர், உழைப்பின் பயன் உழைப்பவனுக்கே சேரவேண்டும் எனும் நோக்கத்தில் 'இஷ்டலிங்கம்' எனும் தத்துவத்தை அறிமுகப்படுத்தினார். ''ஒவ்வொருவனும் சிவனின் ஓர் அம்சமே. ஆதலால் ஆண்டவனை உள்ளத்தில் வைக்க வேண்டும். உடல் மேல் வைத்துப் பூஜிக்க வேண்டும். அவனைத் தேடிக் காட்டிலும் மேட்டிலும் அலைய வேண்டாம்; அவன் கோயிலிலும், கல்லிலுமா இருப்பான் என்றும், 'லிங்கத்தை உடல்மேல் தரித்து அதைப் பூசித்தால் போதும்; மற்ற தாவர லிங்கங்களைத் தேடி அலைவது விபச்சாரம் செய்வது போல்'' என்றும், காசி என்றும், சிறீ சைல

மென்றும் அலைபவர்களைத் தடுத்தார். சமுதாயத்தைப் பெரிய அழிவிலிருந்து தடுத்து ஆட்கொண்டார்.

5.6. காலங்காலமாகச் சமயம், நாடு, மொழி ஆகியவை சுரண்டல் சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. சமயத்தின் பெயரால் பல ஆயிரமாண்டுகள் இந்தச் சமுதாயம் சுரண்டப்பட்டிருக்கிறது. வாழ்விற்குச் சமயமா? சமயத்திற்காக வாழ்வா? என்பதில் தெளிவற்ற நிலையை உருவாக்கி, சமயத்தைப் பிழைப்பாக்கி ஒரு சோம்பேறிக்கும்பல் வாழ்ந்து வந்தது, வருகிறது.

நாடும் மொழியும்கூட சுரண்டல் சாதனங்கள்தான். நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் வெறிநிலைக்குத் தூண்டிவிட்டுப் போர்க்களங்களில் பொதுமக்களைப் பலிகொடுத்து வந்தனர். கண்ணை இழந்தவனும் காலை இழந்தவனும் தன்னை இழந்து மனைவி மக்களை அனாதைகளாக்கிப்பெற நினைத்தது இல்லாத வீர சொர்க்கம். ஆனால் இவர்கள் பிணக்குவியல்மேல் வெற்றி கண்ட அரசர்கள், இங்கேயே சொர்க்கத்தைக் கண்டனர்.

மொழியும் அப்படித்தான். அன்றைய இலக்கிய மொழி பாமரன் எண்ணியும் பார்க்க இயலாத எட்டாக்கனியாக இருந்தது. இலக்கியம் பண்டிதர்களின் ஏகபோகச் சொத்தாக மாறிப் பாமரன் தன் கருத்துக்களைச் சொல்ல வாயில்லாதவனாக இருந்தான். தாம் சொல்லுவதை யாரும் புரிந்துகொள்ள வேண்டும், அதுபோல் எல்லோரும் தம் கருத்தைச் சொல்லவும் வேண்டும் என்பது சரணர்களின் நோக்கம். இலக்கியப் படைப்பாளர்கள் உயர்ந்த, கடின நடையைத் தகர்த்துப் பாமர மொழியைப் பயன்படுத்தினர். யாப்புத் தளைகளையும் உடைத்தெறிந்து சுதந்திரமான வசனம் உருவாயிற்று. சமுதாயத்தில் எல்லா நிலைகளிலிருந்தும் இலக்கியம் உருவாயிற்று. நூற்றுக்கணக்கான பெண்களாலும் சமுதாயத்தில் தாழ்ந்தவர்களெனக் கருதப் பட்ட ஆயிரக்கணக்கானவர்களாலும் இலக்கியம் உரம்பெற்று வளர்ந்தோங்கியது.

5.7. இப்படிச் சமய மாற்றம் ஒரு சமுதாயப் புரட்சியாக வசன இலக்கியத்தின் வாயிலாக வெடித்தது. தனிமனிதனின் உயர்வையன்று; சமுதாயத்தின் உயர்வைப் போற்றிய இலக்கிய மரபு தோன்றியது.

உதவி நூல்கள்

ல்புர்கி எம். எம்., வசன சாகித்ய மத்து சீவண மௌல்யகளு, மார்க்க தொ. 1, பக். 229-287, நரேஸ் & கம்பெனி, பெங்களூர், 1985.

நந்தீமட் எஸ்.சி. கன்னட நாடின சரித்ரெ, பகுதி 2, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1975.

ஹிரேமட், ஆர்சி. சட்ஸ்தல ப்ரபெ, கருநாடகப் பல்கலைக் கழகம், தார்வாட, 1966.

சிவருத்திரப்பா ஜி. எஸ்., சமக்ர கன்னட சாகித்ய சரித்ரெ, தொகுதி 3, பெங்களூர் பல்கலைக்கழகம் பெங்களூர், 1976.

சமய இலக்கியங்களில் சமுதாய உணர்வுகள்

(வைணவ இலக்கியம்)

வ. கி. ச. ந. இராகவன்
வைணவத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

வணங்கும் துறைகள் பலபலவாக்கி
    மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி
    அவை யவையதோர்
அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி
    பரப்பி வைத்தாய்
இணங்கு நின்னோரையில்லாய் நின் கண்
    வேட்கையெழுவிப்பனே[1]

முன்னுரை

வைணவ சமயநெறி நான்மறையினை (அஃதாவது இருக்கெசுர் சாமவேதங்களும்[2] உபநிடதங்களும்[3] கூடியது) முதல் நூலாகக் கொண்டதாகும். ஈசாவாஸ்யோபநிஷத்தின்[4] முதல் மந்திரத்தைக் காண்போம்.

ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்।
தேந த்யக்தேந பூஞ்ஜீதா:
மா க்ருத: கஸ்யஸ்வித் தநம்॥

பொருள் : இந்நிலவுலகில் மாறுதலடைந்து வரும் பொருள்கள் எவையெவையோ அவை யாவும் இவ்வுலகைத்தன் ஆளுகைக்கு உட்படுத்தியுள்ள இறைவனாலே உள்ளும் புறமும் தன்னகப்படுத்தியவையாம். இந்த விஷயத்தையறிந்து அதன் மூலம் விவேகம் (பகுத்தறிவு) அடைந்தனவாக 'நன்றிது, தீயது' என நன்றாகப் புரிந்துகொண்டவனாக, அவ்வப் பொருள்களுடன் கூட இருக்கின்ற நீ, அவ்வப் பொருள்களைப் பயன்படுத்தி அனுபவி; மற்றொருவருடைய சொத்தினைச் சிறிதும் விரும்பாதே.

மக்கள் தோன்றிய காலம் முதலாக உலகில் சமயமும் தோன்றி வளர்ந்து வருகின்றது. அக்காலத்திய சமய உணர்வினை இன்றளவும் தாங்கி நிற்பவை இலக்கியங்கள் எனலாம். சமயத் தொடர்

பில்லாத இலக்கியம் அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை சமயமும் அதைச் சார்ந்த இலக்கியங்களும் மனித சமுதாயத்தை மேம்படுத்தவே தோன்றியவை. உலகின் எப்பாகத்தை எடுத்துக் கொண்டாலும் அங்குச் சமயமும் இலக்கியமும் பின்னிப் பிணைந் தனவாகவே காணப்படுகின்றன. பாரத நாட்டில் தொன்மையான சமயங்களாகக் கருதப்படுபவை வைணவமும் சைவமும். இவற்றின் கோட்பாடுகள் வேத காலம் தொட்டு இன்றளவும் இலக்கியத்தின் வாயிலாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. திருமால் உலக ளந்த செய்தி இருக்கு வேதத்திலேயே காணப்படுகின்றது. பின்பு தோன்றிய வேதத் தொடர்புள்ள நூல்களிலும் இதிகாசப் புராணங் களிலும்திருமாலினுடைய செயல்களும் திருமால் நெறியும்விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இலக்கியத்தைச் சமுதாயத்தின் பிரதிபலிப்பு என்பர். ஆக, பண்டைய இலக்கியங்களிலே நாம் காண்பது அன்றைய சமுதாய உணர்வுகளின் பிரதிபலிப்பேயன்றி வேறில்லை.

திருமால் என்ற சொல்லுக்கு 'அன்புடையன்' (வியாமோஹம் உடையவன்)என்பதும் ஒரு பொருள். ஆகையினாலேயே திருமாலை 1) மக்களிடத்திலே அன்புடையவனாக (2) அவர்களுக்கு இடுக்கண் வருங்கால் காப்பவனாக (3) இவ்வுலகப் பந்தத்தினின்றும் விடுவிப்பவனாகச் சான்றோர்கள் கண்டார்கள். திருமாலையே தனிப்பெரும் கடவுளாக வழிபட்டவர்கள் வைணவர்கள் எனப் பட்டனர். அவர்களது சமயம் வைணவம் எனப்பட்டது. வைணவம் சமுதாயத்திற்குச் செய்தது என்ன என்பதை இலக்கி யத்தின் வாயிலாகப் பார்ப்போம்.

வேதகாலம்

வேத காலத்தில் ரிஷிகள் திருமாலின் வீரத்திலேயே ஈடுபட் டார்கள். (ப்ரதத் விஷ்ணுஸ்தவதே வீர்யாய ம்ருகோ நமபீ குசரோ கிரிஷ்டா:) அவனை அழகிய ஆடை அணிகள் அணிந்தவ னாகவும் உலகங்களையெல்லாம் தன் ஆளுகைக்கு உட்படுத்தியவ னாகவும் மகிழ்ச்சியைத் தரும் உலகிலே நம்மைக் கொண்டு சேர்ப்பவனாகவும் துதித்தார்கள். 'நம்முடைய துயர்களை நீக்க துன்பங்களைப் போக்கப் பற்பல பிறவிகளைத் திருமால் எடுக்கி றான் என்றும், அஃது அவனுக்கு இழுக்கன்று; ஆனால் பெருமை யைச் சேர்ப்பது' என்றும் வேத மந்திரம் கூறும்.

1. யுவா ஸு¯வாஸா: பரிவீத ஆகாத்!
ஸ உச்ரேயான் பவதி ஜாயமாந:

2. தத்விஷ்:ணோ: பரமம் பதம் ஸதா
பச்யந்தி ஸூரய:

3. விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:

இதிகாசங்கள் எனப்படும் இராமாயணமும் மகாபாரதமும் திருமால் பற்றியவையே. இன்றளவும் இவை மனிதசமுதாயத்துக்கே வழிகாட்டிகளாக விளங்குகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பதினெண் புராணங்களிலும் திருமாலின் பெருமையும் வழிபாட்டு முறைகளும் வைணவ நெறியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

வைணவ ஆகமங்களான ஸ்ரீபாஞ்சராத்ரத்திலும் வைகாநஸத்திலும் அடங்கிய பல்வேறு ஸம்ஹிதைகளில், திருமால் வழிபாடு தனியொருவனுக்காகவும் சமுதாயத்திற்காகவும் என இரு வகையாக விளக்கப்பட்டுள்ளது. ஆகவே பண்டைய இலக்கியங்கள் யாவும் மக்கள் சமுதாயத்தை நல்வழிப்படுத்தத் தோன்றியவையே.

சங்ககாலம்

தற்போது கிடைத்துள்ள பண்டைத் தமிழ்ச் சங்க நூல்களில் பற்பல இடங்களில் வைணவசமயக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. பரிபாடலில் திருமால், அவதாரங்கள் எடுத்து உலகைக் காப்பாற்றியமையும் உலகில் உள்ள பொருள்கள் அத்தனையிலும் அவன் இருக்கிறான் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. திருமாலுக்குக் கோயில்களமைத்து வழிபட்டமை சங்க நூல்களில் காணப்படுகின்றது. வைணவத் துறவிகள் 'முக்கோற்பகவர்' எனக் குறிக்கப்படுகின்றனர்.

முல்லை நிலத்தில் வாழும் மக்களுக்குத் திருமால் வழிபடு கடவுளாகவும் அவர்களது நெறி வைணவம் என்பதும் தொல்காப்பியத்தால் விளங்கும்.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'

என்ற நூற்பா இறை வழிபாட்டின் முதன்மையை வலியுறுத்தும். பரிபாடலில் காணப்படும் சில முக்கியப் பாடல்களில் திருமாலின் மிக உயர்ந்த சிறப்பியல்புகள் காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

1. விறல் மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க்கு அருளும் நீ (அருளியும்)
திறன் இல்லோர்த்திருத்திய தீது தீர் கொள்கை
மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ (1.37 – 40)

2. தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ,
கல்லினுள் மணியும் நீ, சொல்லினுள்வாய்மை நீ,
அறத்தினுள் அன்பு நீ, மறத்தினுள் மைந்து நீ (3. 63–65)

3. அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத்து அண்ணலை வணங்கி
நல்அடி ஏத்தி நிற்பரவுதும்
எல்லேம் பிரியற்க எம் சுற்றமொடு ஒருங்கே
(திரட்டு 1, வரிகள் 79)

ஆழ்வார்கள் காலம்

பௌத்தமும் சமணமும் இந்நாட்டில் செழித்தோங்கிய காலத்தில் வைணவ நெறிமுறைகள் சிறிது வலுவிழந்தன. ஆனால் குப்தர்கள் காலம் முதல் வைணவ சமயமும் வைணவ இலக்கியங்களும் திரும்பவும் முக்கியத்துவம் பெற்றன. வேத காலத்துப் பக்தி நெறியின் விதிமுறை யோகம் சமுதாயத்தில் அனைவரும் பின்பற்றக் கூடியதாய் இல்லை. வேதத்தில் முற்பகுதியான கர்ம காண்டத்தில் கூறப்பட்டவை வேதமோதிய ஒரு சிலருக்கே பயன்பட்டன. உபநிடதங்களில் கூறப்பட்ட உபாஸநங்களும் பலருக்குப் பயன்படவில்லை. ஆக, பிற்காலத்தில் பக்தி நெறியில் ஒருவகைப் புரட்சி ஏற்பட்டதென்றே சொல்லலாம். இதனைத் தமிழகத்தில் முன்னின்று நடத்தியவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களுமேயாவர். பௌத்தர்களையும் சமணர்களையும் போல் இவர்கள் வேதநெறிகளை வெறுத்து ஒதுக்கியவர்கள் அல்லர். வேத நெறிகளே அனைவர்க்கும் வழிகாட்டுபவை என்பதிலே இவர்களுக்கு ஐயமில்லை. அந்நெறிகளே எல்லோருக்கும் பயன்பட வேண்டும். எளிமையாய் இருக்க வேண்டும் என்று இவர்கள் கருதினார்கள். மக்களுக்குப் புரியும்படி அவர்கள் மொழியிலே இதனை எடுத்துச் சொன்னார்கள். இவ்வாறு கூறும்போது தமிழகத்திலே வழங்கி வந்த இலக்கியக் கோட்பாடுகளை இவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தமிழின் அகத்துறை இவர்களுக்குப் பெரிதும் கைகொடுத்தது எனலாம். ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களிலே (திவ்யப்பிரபந்தத்திலே) சமுதாய வாழ்க்கை எவ்வாறு சித்தரிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சிறிது காண்போம்.

ஆழ்வார்களது அருட்செயல்களிலிருந்து அன்றிருந்த சமுதாய நிலையை ஒருவாறு அறிய முடிகிறது. மக்கள் தொகுதியை ஆழ்வார்கள் தொண்டர் என்றும் மிண்டர் என்றும் இருவகையாகப் பிரிக்கின்றார்கள். தொண்டர் என்பவர் எம்பெருமானுக்கு ஆட்பட்டவர்; மற்றையோர் மிண்டர். பல்லாண்டு பாட அழைக்கின்ற

பெரியாழ்வார், தொண்டர் குலத்தில் உள்ளீர் என்று விளிக்கின்றார். இவர்களை வாழாட்பட்டு நின்றீர்கள் என்றும் மற்றவரைக் கூழாட்பட்டு நின்றீர்கள் என்றும் கூறுகின்றார். தொண்டரடிப் பொடியாழ்வார். மிண்டருக்கு இடும் சோற்றை நாய்க்கு இடுவதே மேல் என்கிறார்.

'மிண்டர்பாய்ந்துண்ணும் சோற்றை

விலக்கி நாய்க்கிடுமின்நீரே என்பது அவர் வாக்கு. தொண்டராய் இருப்பதை அமுதமுண்ணல் என்றும் அவர் கூறுகிறார். பெரியாழ்வார் மற்றொரு பதிகத்தில் 'தூமணிவண்ணனைத் தொழாதவர், பெற்ற தாயர் வயிற்றினைப் பெருநோய்செய்வான் பிறந்தார்களே' என்கிறார்.

'எம்பிரானைத் தொழாத பாவகாரிகளைப் படைத்தவன் எங்ஙனம் படைத்தான் கொலோ' என்றும் வியக்கிறார். எம்பிரான் நாமத்தை நெஞ்சில் கொண்டு, நாவினால் அழையாத மானிடசாதியர் பருகு நீரும் உடுக்கும் கூரையுங்கூடப் பாவம் செய்தனவாகத் தோன்றுகின்றன இவருக்கு.

திருமங்கையாழ்வார், 'அவனை உள்ளத்து எண்ணாத மானுடத்தை' (பெ. தி. 11–6–7) என்கிறார். 'ஊழிக் காலத்தில் உலகங்களையெல்லாம் தன் வயிற்றிலே வைத்துக் காத்த பெருந்தகையை நினையாதவர் நீசர்கள்' என்கிறார். (11. 6 8).

சில புறச்சமயங்கள் உலக வாழ்க்கையை வெறுப்பவை. உலகத்தோடு ஒட்டாது துறவறம் பூண்டு தனித்து இயங்கி, தன் மேம்பாட்டையே குறிக்கோளாகக் கொள்வன. அச்சமயத்தவர் பிற உயிர்களிடத்துக் கருணை காட்டினாலும் உண்ணாநோன்பிருந்து உயிர் விடுதல் சிறந்த மார்க்கம் எனக் கொள்வர். உடலைத் துன்புறுத்தும் பல செயல்கள் அவர்களுக்கு ஏற்புடையவை. ஆனால் ஆழ்வார்கள் உடலை வருத்தச் சொல்லவில்லை. பட்டினி கிடக்கச் சொல்லவில்லை. திருமங்கையாழ்வாரின் இரு பாடலை நோக்குவோம். 'ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலின் பிரியாப் புலனைந்தும் நொந்துதாம் வாடவாடத் தவம் செய்ய வேண்டா' (5) 'காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயோடு நின்று தவம் செய்ய வேண்டாம்' (3.22)

உலக இயல்புக்கு ஏற்ப நல்ல ஆடை அணிகளை அணியவும் சாந்து, மலர்கள் முதலியவற்றைப் பயன்படுத்தவும் நல்ல உணவு வகைகளை உண்ணவும் வைணவம் போதிக்கின்றது. ஆனால் இவற்றை முதலிலே எம்பெருமானுக்கு அர்ப்பணித்துப் பிறகு அவனுடைய பிரசாதமாக ஏற்க வேண்டும் என்பது ஒன்றே வரையறை. ''நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்

கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும் மெய்யிட நல்லதோர் சாந்தமும் தருகிறான் எம்பெருமான்'' என்கிறார் பெரியாழ்வார். பின்னுமோர் பாசுரத்தில் (திருப்பல்லாண்டு 9) பெரியாழ்வார் 'உடுத்துக்களைந்த நின்பீத்கவாடையை உடுப்பதும் உண்டு. நீ அமுது செய்த கலத்திலிருப்பதை உண்பதும் உண்டு நீ சூடிக் களைந்த துழாய் மாலைகளைத் தொண்டர்களாகிய நாங்கள் சூடுவதுமுண்டு. என்கிறார்.

வைணவ சமயம் வளர்ந்த காலத்தில் தன்னுடன் பற்பல கலைகளையும் வளர்த்தது. முக்கியமாகப் பல்வேறு தலங்களில் கோயில்கள் கட்டப்பட்டன. பழைய கோவில்கள் விரிவுபடுத்தப் பட்டன. நாட்டையாண்ட அரசர்கள் கலைப் பணி செய்வதைக் கடமையாகக் கொண்டனர். திவ்வியபிரபந்தப் பாடல்களிலிருந்தும் திருவல்லிக்கேணி, பரமேச்சுர விண்ணகரம், அட்டபுயகரம், திருக்கண்ணபுரம், திருநறையூர், திருமாலிருஞ்சோலை முதலிய திருத்தலங்களில் திருமாலுக்குக் கலையழகு மிளிரும் கோயில்கள் எழுப்பப்பட்டன என்பது புலனாகும். கோயில்களில் இசைக்கலை, நாட்டியக்கலை, சங்கீதம், பலவித வாத்தியங்கள் அன்றாட நெறி முறைகளில் இடம் பெற்றன.

நாட்டில் அமைதி நிலவியதாலும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து அவர்கள் கவலையின்றி வாழ்ந்ததாலும் கலைகளின் வளர்ச்சி ஏற்பட்டது. திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழிப் பாடல்களிலிருந்து பற்பல தலங்களிலும் வாழ்ந்தவர்கள் பற்பல கலைகளிலே சிறந்து விளங்கினார்கள் என்பது தெற்றென விளங்கும்.

அக்கால மக்களின் வாழ்க்கை செழிப்புடன் விளங்கியது என்பது ஆறுகள், வயல்கள், சோலைகள் இவற்றின் வருணனையால் விளங்கும். மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். வாழ்க்கை மகிழ்ச்சிகரமாய் விளங்கியது. இதனால் உயர்ந்த சிந்தனைகள் தோன்றின. அவையே சமய இலக்கியங்களாக வெளிப்பட்டன. மக்கள் தவறான செயல்களைச் செயலாற்ற அஞ்சினார்கள். தவறு செய்தவர்கள் கூட பிறகு மனம் வருந்தித் திருந்தவும் சமயப் பாடல்கள் வாய்ப்பு அளித்தன. தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில்,

'சூதனாய்க் கள்வனாகித்தூர்த்த ரோடிசைந்த காலம்
மாதரார் கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேளை'
(16)

'மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோர் இன்சொலில்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளிவிளிவன்வாளா' *(30)*

என்றும் பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில் (1, 1—4)
'வென்றியே வேண்டியு வீழ் பொருட்கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன்'

என்றெல்லாம் தம்மை நொந்து கொண்டுள்ளார். இத்தகைய ஆழ்வார்கள் எம்பெருமானுக்குத் தொண்டு பூண்டதால் தாங்கள் திருந்தியதாகக் கூறியுள்ளனர். இத்தகைய பாடல்கள் பின்புள்ளாரைத் தவறு செய்வதினின்று தடுக்கவும் தவறு செய்தோரைத் திருத்தவும் என்றென்றும் பயன்படும் என்பது உறுதி.

உபநிடதங்கள் பகவத்கீதை முதலியவை காட்டும் கருமம் ஞானம் உபாஸநம் என்ற நெறிகள் சாதாரண மக்களுக்கு ஏற்றவை யல்ல. வைணவச் சமய இலக்கியங்களில் இவற்றைக் காட்டினும் பக்தி நெறியே உயர்ந்தது என்று பாராட்டப்பட்டு உள்ளது. இந்த பக்தி எம்பெருமானே கதி, அவனையன்றி வேறோர் உபாயமில்லை என்ற திடமான எண்ணமாகும். இதனை நம்மாழ்வார் 'நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன், ஆகிலும் இனி உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்' (திருவாய்மொழி 5.7.13) என்கிறார். பூதத்தாழ்வாரோ

'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தைஇடுதிரியா—நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்
(இயற்பா 2-ஆம் திருவந்தாதி 1)

என்று பாடுகிறார். இவ்வாறு தன்வழிபடு கடவுளிடத்தில் அன்பு செலுத்துபவன் அக்கடவுளையின்றி வேறொன்றிலே மனம் செலுத்த மாட்டான் என்பதைப் பல அழகிய உவமைகளால் குலசேகராழ்வார் குறிப்பிடுகிறார். அவற்றுள்,

தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில் சூழ்விற்றுவக்கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன்
அருள் நினைந்தே அழுங்குழவி அதுவே போன்றிருந்தேனே
(பெருமாள் திருமொழி 5,1)

கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும்
கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்... (5, 2)

'வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல்' (5, 4)
என்பவை சில.

சமயம் கடவுள் பக்தியோடு அடியார்களிடத்தில் பக்தியும் அவசியம் என்பதனை நன்கு வலியுறுத்துகின்றது. இதற்குச் சான்றாக அடியார்களின் பெருமையைப் பற்றியும் அவர்களிடம் பக்தி செலுத்தாதவரின் சிறுமையையும் கூறும் பல பதிகங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக நம்மாழ்வாரின் திருவாய்மொழியில்,

1. பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப்
   பயில இனிய நம்பாற்கடல் சேர்ந்த பரமனைப்
   பயிலும் திருநாவுடையார் எவரேலும் அவர் கண்டீர்
   பயிலும் பிறப்பிடைதோறும் எம்மையாளும் பரமரே
   (3, 7, 1)

2. நெடுமாற்கடிமை செய்வேன்போல்
   அவனைக் கருத வஞ்சித்து
   தடுமாற்றற்ற தீக்கதிகள் முற்றும்
   தவிர்ந்த சதிர் நினைந்தால்
   கொடுமா வினையேன் அவனடியார்
   அடியே கூடுமிது வல்லால்
   விடுமாறென்பதென் அந்தோ?
   வியன் மூவுலகு பெறினுமே (8.10, 11) முதலியவை.

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில்

1. நண்ணாதவாளவுணரிடைப்புக்கு வானவரைப்
   பெண்ணாகியமு தூட்டும் பெருமானின் மருவினியத்
   துண்ணார்ந்த கடல் மல்லைத்தல சயனத்துறைவாரை
   எண்ணாதேயிருப்பாரை இறைப்பொழுதும் எண்ணோமே
   (6, 2, 1)

2. கண்சோரவெங்குருதிவந்திழிய
   வெந்தழல் போல் கூந்தலாளை
   மண்சேர முலையுண்ட மாமதலாய்
   வானவர் தம் கோனே என்று
   விண்சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு
   மணிமாடமல்கு செல்வத்
   தண்சேறையெம் பெருமான் தாள் தொழுவார்
   காண்மின் என் தலைமேலாரே (7.4 1) முதலியவை

பெரியாழ்வார் திருமொழியில்,

1. நாவகாரியம்சொல்லிலாதவர்நாடொறும்விருந்தோம்புவார்

தேவகாரியம் செய்து வேதம் பயின்று வாழ்
திருக்கோட்டியூர்
மூவர் காரியமும் திருத்தும் முதல்வனைச் சிந்தியாத
அப்பாவ காரிகளைப் படைத்தவன்
எங்ஙனம் படைத்தான் கொலோ' (4.4.1) முதலியவை

2. பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து
பொறிகளால்
ஏதமொன்றுமிலாதவண் கையினார்கள்வாழ் திருக்
கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய
பாததூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே
(4.4.6) முதலியவை.

குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழியில், (2, 3):
'ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம்கீண்டதும் முன்இராமனாய்
மாறடர்த்ததும் மண்ணளந்ததும் சொல்லிப்பாடிவன்
பொன்னிப்பேர்
ஆறுபோல் வரும் கண்ணநீர்கொண்டு அரங்கன்
கோயில்திருமுற்றம்
சேறுசெய் தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு
என்சென்னிக்கணிவனே'

முதலியவை.

அடியார்கள் சமுதாயத்திற்கே வழிகாட்டிகளாக விளங்கு கிறார்கள். அவர்களுடைய பிறப்பு குலம் தொழில் முதலியன கொள்ளப்படவில்லை. அவர்களுடைய பக்தியே அவர்களை மேம் படுத்தியது. பிறர் அவர்களைத் தொழவும் செய்தது. அந்தணர், அரசர், வேளாளர் முதலிய வெவ்வேறு சாதிகளிலே தோன்றிய ஆழ்வார்கள் அனைவராலும் கொண்டாடப்படுகிறார்கள்.

நம்மாழ்வாரின் கீழ்வரும் பாடல் இதனைத் தெற்றென விளக்கும்.

குலந்தாங்குசாதிகள் நாலிலும் கீழ்இழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கு
ஆளென்றுள்
கலந்தார் அடியார் தம்மடியார் எம் அடிகளே.

உயர்குலத்தவர்களாயினும் கசடறக் கற்றவர்களாயினும் அடியார்களைப் பழிப்பார்களாகில் அவர்களே தாழ்ந்தவராகின் றார்.

தொண்டரடிப் பொடியாழ்வார் (திருமாலை 43)

'அமரவோரங்க மாறும் வேதமோர் நான்குமோதி

தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேலும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர்போலும் அரங்கமா நகருளானே.'

என்று உயர் குலத்தவராயினும் திருமாலடியார்களைப் பழித்தால் நிந்திக்கத்தக்கவராகின்றனர் என்கிறார். ஆனால் இழி குலத்தவராயினும் திருமாலடியார்களாகில் கொண்டாடத்தக்கவர்கள் என்று அவ்வாழ்வாரே காட்டுகிறார்.

'பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்
இழிகுலத்துவர்களேனும் எம்மடி யார்களாகில்
தொழுமின் நீர் கொடுமின் கொண்மின் என்று நின்னொடும் ஒக்க
வழிபட அருளினாய் போல் மதிள்திருவரங்கத்தானே'.

எத்தகைய குற்றம் செய்வராயினும் வருந்தி எம்பெருமானிடம் அடைக்கலம் புகுந்தால் அவர்களை மன்னித்து அவர்களது பாவங்களை நீக்கி வீடு பேறு தருகிறார் பகவான் என்பது வைணவத்தின் அடிப்படையான கொள்கை. இக்கொள்கை இன்றளவும் மக்களை நல்வழிப்படுத்தித் தீயவழிகளிலிருந்து மீட்டு நம்பிக்கையுறச் செய்கிறது. பகவத்கீதையின் ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மா

மேகம் சரணம் வரஜ அஹம்த்வா ஸர்வபாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மாசுச: (கீதை 18.66)

என்ற சுலோகத்தில் இக்கருத்தினை ஆழ்வார்களும் பின்பு தோன்றிய ஆசாரியர்களும் போற்றிப் பரப்பினார்கள். சரணாகதி என்றும் இந்நெறி அனைவருக்கும் உரியது. இதனை வேதாந்ததேசிகர்

'அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும்
நொந்தவரே முதலாக நுடங்கி அனன்னியராய்
(அதிகார சங்கிரஹம் 17)

என்ற பாடலிலே கூறுகிறார். இவ்வாறாகவே' பத்தி முதலாமவற்றில் பதியெனக்குக் கூடாமல்...அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான்புகுந்தேனே' என்றும் கூறுகிறார்.

நம்மாழ்வாரும் தன் திருவாய்மொழியில் (6.10.10),
'புகலொன்றில்லா அடியேன்
உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'

என்றும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றார்.

சமயம் என்பது வாழ்க்கையின் நெறிமுறை. அடிப்படைக் கருத்துகள் ஒன்றானாலும் காலப் போக்கில் இவற்றில் மேலெழுந்தவாரியாகச் சிறிது மாறுதல்கள் ஏற்படுவது இயற்கை. சமயக் கருத்துக்களைப் படம் பிடித்துக் காட்டுவன சமய இலக்கியங்கள். இக்கட்டுரையில் வைணவ சமய நூல்கள் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மேம்பட இச்சமயம் எவ்வாறு உதவியது என்பதைக் கண்டோம்.

அடிக்குறிப்புகள்

1. திருவிருத்தம் 96
2. பெரியாழ்வார் திருமொழி 5.1.6.
3. ஈச கேந கட ப்ரச்ந முண்ட மாண்டூக்ய தித்திரி।
   ஐதரேயம் சசாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம் தச ॥
4. உத்தமூர் வீரராகவாச்சாரியார், ஸ்ரீஈசாவாஸ்யோபஷத் பாஷ்ய விவரணம் (தமிழ்) சென்னை 1968 ப.19

6. வைணவ சமய இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாயப் பழக்கங்கள்

—டாக்டர் எஸ். கண்ணன்

சமயம் எனும் சொல் நெறி, கொள்கை, மதம் என்று பல பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புற்றிருக்கும் சமயங்கள் பலவாகும். அவற்றுள் வைணவமும் ஒன்று. விஷ்ணுவை, திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுதலே வைணவ சமயம் ஆகும். விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்தவன் என்று பொருள்[1] வடவேங்கடம் தென்குமரி. ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகில் திருமால் வழிபாடு பன்னெடுங் காலமாக வழக்கில் இருந்து வருகிறது. சங்க காலத்தில் பலவகையான வழிபாட்டு நெறிகள் தமிழரிடையே சிறந்து விளங்கின. அவற்றுள் ஒன்றுதான் திருமால் வழிபாட்டு நெறி எனும் வைணவ சமயம் ஆகும்.

வைணவ இலக்கியங்களின் வளர்ச்சி முறையைக் கவனித்தால், சங்க காலம், பக்திக் காலம், உரையாசிரியர்கள் காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

சங்ககாலம்

'மாயோன்மேய் காடுறை உலகம்' என்பது தொல்காப்பியம். எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய கடைச்சங்க இலக்கியங்களில் திருமால் நெறி பேரளவில் பேசப்படுகிறது. பரிபாடல் வைணவ சமயத்தின் அடிப்படைச் செய்திகளைத் தெளிவாக்கும். சங்கம் மருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை கண்ணபிரானின் பெருமையினைப் பாராட்டுவதாக அமைந்துள்ளது. அக்கால கட்டத்தில் பாரதம் பற்றிய செய்தியும் திருமாலின் அம்சமான கண்ணன் பற்றிய கதையும் தமிழகத்தில் நன்கு பரவியிருந்தன. இச்செய்திகள் தமிழக மக்கள் எந்த அளவிற்குத் திருமால் பக்தியில் திளைத்திருந்தனர் என்பதை எடுத்தியம்புகின்றன.

பக்திக்காலம்

சங்கம் மருவிய காலத்தைத் தொடர்ந்து களப்பிரர் ஆதிக்கத்தில் அகச் சமயங்கள் ஒளிகுன்றின. அப்பொழுது வைணவமும் தேக்க நிலையில் இருந்தது. களப்பிரர் ஆட்சியகன்று பல்ல

---

1. அக்னிகோத்ரம் ராமானுஜ தாதாசாரியார், வரலாற்றில் பிறந்த வைணவம், கும்பகோணம், 1973, பக். 10.

வரும் அவரைத் தொடர்ந்து பிற்காலச் சோழரும், பாண்டியரும் செந்தமிழ் நிலத்தே செங்கோலாட்சி செலுத்தியபோது சைவம் புத்துயிர் பெற்றது போல வைணவமும் புத்துயிர் பெற்றது.

பல்லவர் காலத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு இடங்களில் ஆழ்வார்கள் அவதரித்தனர். இவ்வாழ்வார்களை அடியொற்றிப் பிற்காலத்தில் தோன்றிய அமயார் பெருமக்களை ஆசாரியார்கள் என்று வழங்குவர். ஆழ்வார்களின் இனிய தமிழ்ப் பாசுரங்களை இசையுடன் ஏறத்தாழ 11-ஆம் நூற்றாண்டளவில் நாதமுனிகள் தொகுத்தார். அவையே நாலாயிரதிவ்ய பிரபந்தம் என்று வழங்கலாயிற்று.

சமயக்காழ்ப்புணர்ச்சி

'மறந்தும் புறந்தொழாமாந்தராகத' திகழ்ந்த வைணவர்கள் பிற சமயத்தைச் சாடுவதைத் தம்முடைய வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

'அறியார் சமணர் அயர்ந்தார் பௌத்தர்
சிறியார் சிவப்பட்டார்கள்' 2

எனும் பாசுரவடி, திருமழிசையாழ்வாரின் தீவிர பாசுரவடி, திருமழிசையாழ்வாரின் தீவிர வைணவப் பற்றை வெளிப்படுத்துகின்றது. பிற சமயங்களின் மீது கொண்ட வெறுப்பினைத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் புலப்படுத்துவார்.

'வெறுப்போடு சமணர்முண்டர் விதியில் சாக்கியர்கள்......
..............கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமாநகருளானே' 3

என்ற பாசுரவடிகள், வேற்றுச் சமயத்தாரைக் கொல்லவேண்டும் என்ற வெறியுணர்வு மக்கள் மனதில பரவியிருந்தது என்பதைத் தெளிவாக்குகிறது. ஆயினும் சைவ வைணவ சமயத்தாரிடையே பொறையுணர்வு நிலவியிருந்ததுஎன்பதற்கும் அக்காலப்பிரபந்தங்களே சான்று பகர்கின்றன. கடல் மல்லையில் அவதரித்த பூதத்தாழ்வார் 'அரியும் சிவனும் ஒருவனே' என்ற சமய ஒருமைப் பாட்டுக்கு வித்திட்டார்.

தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாலும் தோன்றுமால சூழும் எந்தைக்கு
திரண்டருவி பாயும் திருமலைமேல்
இரண்டுருவும் ஒன்றாம் இசைந்து.[4]

2. நான்முகன் திருவந்தாதி, 6.
3. திருமாலை, 8.
4. மூன்றாம் திருவந்தாதி, 63.

என்ற பாடல் அடிகளுக்கு ஒப்ப திருமழிசை ஆழ்வாரும்,

'தேருங்கால் தேவன் ஒருவனேயென்றுரைப்பார்'[5] என்று கூறுவர்.

மொழிப்பற்று

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய' சைவ அடியார்களை ஒத்த அளவில் வைணவ ஆழ்வார்களும் தமிழ்ப்பாசுரங்களைப் பாடித் தலங்கள்தோறும் சென்று வழிபட்டனர். முதலாழ்வார்கள் மூவருக்கும் அடுத்துத் திருமழிசையாழ்வார் தோன்றினார். இவருடைய சீடன் கணிகண்ணன் பாடிய தமிழ்ப் பாசுரங்களின் மீது ஈடுபாடு கொண்ட 'காமரு பூங்கச்சி மணிவண்ணன்' தன்னுடைய 'பைந்நாகப்பாயைச் சுருட்டித் தோளில் போட்ட வண்ணம் தன் சீசன்கணிகண்ணன் பின்சென்றான் என்பது ஒரு செவி வழிச் செய்தி.6 இக்கதையைக் கருத்தில் கொண்டு பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய குமரகுருபரசுவாமிகள் தம்முடைய மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் திருமால் வணக்கத்தில் 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங்கொண்டலே' 7 என்று திருமாலை அழகாக வருணிப்பார்.

சாதிவேறுபாடற்ற போக்கு

சமய வெறுப்புணர்ச்சி ஒருபுறம் இருப்பினும், திருமால அடியவர்கள், குறிப்பாகப் பாகவதர்களுக்குள் சாதிவேற்றுமை பாராட்டலாகாது என்ற திடமான கருத்து ஆழ்வார்கள வாழ்ந்த காலததில் வேரூன்றியிருந்தது என்பதும் புலனாகிறது. தொண்டரடிப்பொடியாழ்வார் அந்தணர்களை விளித்து,

'பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்காள்
இழிகுலத்தவர்களேனும் எம்மடியார்களாகில்
தொழுமினீர். 8

'தமர்களில் தலைவராய சாதியந்தணாகளேலும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோரளவில் ஆங்கே
அவர்கள் தாம் புலையர் போலும்'.9

என்று கூறுவர். நான்காம் வருணத்தில் அவதரித்த மாறனை, சடகோபனை வைணவர்கள் 'நம்மாழ்வார்' என்று இன்றும் போற்றுவதையும் சாதி வேற்றுமை பாராட்டாத சமுதாய உணர்வுக்குச் சான்றாகக் கொள்ளலாம். திருப்பாணாழ்வார் சரித்திரமும் இக்கருத்துக்கு அரண் செய்கிறது.

5. நான்முகன் திருவந்தாதி, 2.
6. குருபரம்பரைக் கதைகள், தொண்டை மண்டலச் சதகம்.
7. மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், காப்புப்பருவம்.
8. திருமாலை, 41.
9. திருமாலை, 43.

பெரியாழ்வார் ஆண்டாள் பாசுரங்களின் மூலம் வெளியாகும் சமுதாய உணர்வுகள்

திருவில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார், அவருடைய திருமகளார் ஆண்டாள் ஆகியோரின் பாசுரங்களின் மூலம் மூவகை இனத்தாரைப் பற்றிய செய்திகள் வெளியாகின்றன.

அ. அந்தணர்குலம்

அந்தணர் குலத்தினரின் பல்வேறு நடைமுறை வழக்கங்ளைக் இவர்களுடைய பாசுரங்கள் தெளிவுபடுததுகின்றன. நாச்சியார் திருமொழி வைதிக திருமண முறையைப் படம் பிடித்துக் காட்டு கிறது. இறந்த பின் உடலை எரிக்கும் வழக்கம் பெரியாழ்வாரின் பாடல் வழி புலனாகிறது. அக்கால மக்கள் கைக்கொண்டிருந்த பல்வேறு நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும இவ்விரு வருடைய பாசுரங்கள் எடுத்தியம்புகின்றன.

ஆ. ஆயர்குலம்

'குற்றமொன்றில்லாத கோவலர்தம்' வாழ்க்கையை இவ் விருவர்தம் பாசுரங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. விடியலில் எருமைகள் பனிப்புல மேயச் செல்லல் (சுற்று வீடு மேய்தல்), ஆயர்மகளிர் தயிர் கடைதல், ஆயர்காடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லல், தாய்மார் மோர் விற்கப்போதல், ஆயர் உணவு வகை ஆகியன சிறப்பான முறையில் சொல்லப்படுகின்றன. ஆயர் உடுத்தும் உடை, செருப்பு அணிதல் மற்றும் ஆயர் குல ஆண்மக்கள் காது தாழப் பெருக்கிக் கொள்ளல்[10]. ஆகியனவும் மிகத் தெளி வாகக் கூறப்படுகின்றன. இவற்றில் காது பெருக்கிக் கொள்வது மட்டும் முற்றிலும் மாறுபட்ட நிலையில் இன்று உள்ளது. பாண்டி நாட்டில் இன்று பெண் மக்கள் மட்டுமே(கிராமத்தில் உள்ளோர்) காதுகளைத் தாழப் பெருக்கிக் கொள்கின்றனர்.

வேடர்குலம்

திருவில்லிப்புத்தூர்ப் பகுதி, இன்றைய மேற்குத் தொடர் மலைப் பகுதியில் வாழ்ந்த வேடர் குலத்தாரின் மணமுறையைப் பெரியாழ்வார் குறிப்பிடுகின்றார்.

இம்மூவகை இனத்தாரின் சிறப்பான இயல்புகளோடு சமு தாயத்தில் நிலவி வந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும் நாம் அறிவதற்கு இவ்விருவருடைய பாசுரங்களும் துணை புரிகின்றன. மகன்மை கொள்ளல், பிணைகொள்ளல், கொத்தடிமை முறை, ஊழ்வினையில் நம்பிக்கை, கண்ணேறுமடல், காக்கை கரையின் விருந்து வரும் எனும் நம்பிக்கை, கனவில் நம்பிக்கை, திருத்தலப் பயணம், தீவினை தீர்க்கும் எனும் நம்பிக்கை ஆகியனவும் பிறவும் ஈண்டுச் சுட்டப்படுகின்றன. மக்களின் கலையார்வம் கலையறிவு

10. பெரியாழ்வார், திருமொழி, 2, 3, 10.

வார்ப்புச் சிலை பற்றிய நுண்ணறிவு போன்ற அரிய பல செய்திகளை ஆண்டாள் பாசுரங்கள் அழகுறச் சொல்கின்றன. இவ்வாறு நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் ஒவ்வோர் ஆழ்வாரின் காலப் பின்னணியும் சமுதாய உணர்வும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம்.

சோழர்காலம்

பல்லவர் காலத்தையடுத்துச் சோழர்காலம் தழைத்தோங்கியது. சோழ அரசப் பெருமக்கள் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தபோதிலும் பிற மதங்களை வெறுத்தாரல்லர். வைணவம் புத்தம் போன்ற பிற சமயங்களுக்கும் அரசர்கள் ஆதரவு அளித்தனர். இக்கால கட்டத்தில்தான் சைவ வைணவ சமயக் காப்பியங்கள் எழுதப்பெற்றன. சேக்கிழாரின் பெரியபுராணம்' கம்பனின் இராமகாதை முதலியன சோழ மன்னர்களின் ஆதரவால் உலகில் பிறப்பெடுத்தன. ஈண்டு கம்ப ராமாயணத்தின் வழி வெளியாகும் சமுதாய உணர்வுகளைக் காண்போம். கம்பருடைய இராமகாதை தமிழில் எழுதப்படும் முன்பு தமிழர் பாரதக் கதையிலும் கண்ணன் மீதும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். சங்கப் பாடல்களில் பாரதம் பற்றிய குறிப்புகளையும் கண்ணனைப் பற்றிய செய்திகளையும் காணலாம். சங்கப் பாடல்களில் பாரதம் பாடிய பெருந்தேவனார் சுட்டப்பாடுகிறார். ஆழ்வார்கள் பாசுரங்களில் கண்ணனுக்கும் பாரதத்திற்கும் கொடுக்கப்பட்ட ஏற்றம் இராமாயணத்திற்கு அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. பரமேசுவரவர்மன் தன் ஊரில் பாரதம் படிப்பதற்கென்றே சிவன் கோயிலில் ஒரு மண்டபமும் மற்றும் தேவையான நிவந்தங்களும் அளித்தான் என்று வரலாற்று ஆய்வாளர் கூறுவர்[11]. கம்பனின் இராமகாதையே தமிழகத்தில் இராமபிரானைப் பற்றிய ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. மூல காவியத்திலிருந்து கம்பர் பல இடங்களில் மாறுபடுகிறார் என்பது அனைவரும் அறிந்ததே. இம்மாற்றங்கள் கம்பர் காலச் சமுதாயச் சூழலை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. அவற்றுள் சில இடங்களை ஈண்டுக் காண்போம்.

அ. குழந்தைமணம்

வால்மீகி இராமாயணத்தில் சீதைக்குத் திருமணம் நடைபெறும்பொழுது 6 வயது நிரம்பிய சிறுமியாக இருக்கிறாள். தான் இராமனுடன் 12 ஆண்டுகள் அரண்மனையில் வாழ்ந்த பின்பு காட்டிற்கு 18 வயதில் வந்ததாகச் சீதையே கூறுவதாக வால்மீகி அமைத்திருக்கிறார்.[12] குழந்தை மணம் என்பது தமிழகம் அறியாத

11. பிள்ளை கே. கே. தமிழக வரலாறும் பண்பாடும், தமிழகப் பாடநூல் நிறுவனம், சென்னை 1972.
12. வால்மீகி இராமாயணம், மூன்றாவது சர்க்கம் 4, 7, 4, 10

ஒன்று. தமிழர் மரபுக்கு ஒவ்வாத இத்திருமண வயதைக் கம்பர் தம்முடைய காவியத்தில் மாற்றினார். களவொழுக்கம் என்பது கற்பொழுக்கத்திற்கு முன்பு நடைபெறக்கூடிய ஏற்றுக்கொள்ளப் பட்ட மரபாகும். வால்மீகி இராமாயணத்தில் சீதையும் இராம னும் திருமணத்திற்கு முன்பு சந்தித்துக் கொண்டதாகக் கூறப்பட வில்லை. ஆனால் கம்பர் சீதையைப் பருவ நங்கையாகப் படைத்து அவளை அரண்மனைமேன்மாடத்தில் நிற்குமாறு செய்கிறார். விசுவாமித்திரன் வழிகாட்ட நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாகச் சென்ற இராமனின் கணகள் மேன்மாடத்தில் நிற்கும் சீதையின் கண்களோடு கலக்க,

'அண்ணலும் நோக்கினான்' அவளும் நோக்கினாள்[13]

எனக் கம்பர் வெகு அழகாகக் கூறிச் செல்கிறார். பெண்ணுக்குத் தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை நல்குதலும் வேண் டும் என்ற கம்ப நாட்டாழ்வாரின் மனக்குறிப்பு இக்காட்சியில் தெற்றெனப் புலப்படுகிறது.

ஆ. விதவை மறுமணம்

சாணக்கியர் வாழ்ந்த கால கட்டத்தில் வட நாட்டில் விதவை மறுமணம் இருந்தது என்று ஆய்வாளர் கூறுவர். இன்னும் சற்றுப் பிற்பட்ட காலகட்டத்தில் குழந்தைப் பேறற்ற விதவை கள், பிள்ளைப் பேற்றிற்காகத் தம் கணவனின் உடன் பிறந்தோரு டன் கூடும் வழக்கம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. வேத காலத்தில் இருந்த இவ்வழக்கத்தை நியோகி முறை என்றழைத் தனர். ஆனால் கொள்ளப்படவில்லை. இன்றையச் சூழலில் கால மாறுபாட்டிற்கு ஏற்ப விதவை மறுமணத்தை நாம் ஏற்றுக்கொண் டாலும் சங்க காலந்தொட்டு பிற்காலச் சோழர் காலம் வரை விதவை மறுமணம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாகக்கண வனை இழந்த பெண்டிர் கைம்மை நோன்பு நோற்றதை இலக் கியங்களில் பரக்கக் காணலாம். வால்மீகி காலத்தில் விதவை மறு மணம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. வாலி யின் மரணத்திற்குப் பின் தாரை சுக்ரீவனின் மனைவியாகிறாள். ஆனால் கம்பனால் இதைக் கற்பனை செய்துகூட பார்க்கமுடிய வில்லை. கம்ப இராமாயணத்தில் தாரை கைம்மைக் கோலத்தில் இருந்ததாகக் காட்டப்படுகிறாள். மண்டோதரி கைம்மைக் கோலத்தில் வாழ்ந்ததாக வால்மீகி கூறக்கம்பர் தம்முடைய காப்

13. பாலகாண்டம், மிதிலைக்காட்சி
14. Prof. Indra, 'The status of women in Ancient India',, Lahore, 1940, p. 115.
15 Ibid, p. 107.
16. Dr. (Miss) Jeyal, S. 'The status of women in the Epics', Motilal Banersidoss, Delhi, 1966, p. 187.

பியத்தில் இராவணன் இறந்தவுடன் மண்டோதரி தன்னுயிர் கொண்டு தன் கணவனின் இன்னுயிரைத் தேடிச் செல்பவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் விதவைகளுக்கும், உரிய இடத்தைக் கம்பன் வாழ்ந்த சமுதாயம் அளித்தது போலும். இலங்கையிலிருந்து மீண்ட இராமனை வரவேற்கும் போதும், அவன் பட்டம் சூட்டிக் கொண்ட போதும் அவனுடைய தாய்மார்கள் மூவரும் கலந்து கொள்வதைக் கம்பன் காட்டுகிறார்.

இ. கற்புநெறி

பிற பெண்டிரை, உடலளவில் மட்டுமன்றி உள்ளத்தளவில் தீண்டுதலும் குற்றமாகக் கருதப்பட்டது. சங்கப் பாடலில் குறுந்தொகையின் தலைவி தன்னுடைய விருப்பமாகக் கணவனிடம் தனித்திருக்குங்கால் கூறும்,

‘இம்மை மாறி மறுமையாயினும்
நீயாகியர் என் கணவன்
யானாகியர் நின்னெஞ்சுநேர்பவளே’[14]

எனும் பாடலில் நெஞ்சில் இடம் பெறுதல் ஒரு பெரும் பேறாகக் கருதப்பட்டதை நாம் உணரலாம். இதுபோன்றே, தன் நெஞ்சில் வேறு ஒரு பெண்ணுக்கும் இடந்தரவில்லை என்று இராமன் சீதையோடு தனித்திருக்கையில் சூளுரைப்பான்,

‘இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்
சிந்தையாலும் தொடேன்’[15]

என்று இராமன் கூறுவான். கற்பு எனும் நெறியை இருபாலருக்கும் பொதுவில் என்று முழக்கமிட்ட மாகவியின் கருத்துக்குக் கம்பனின் இப்பாடல் அடித்தளமாக அமைகிறது.

வால்மீகியில் இராவணன் சீதையைத் தொட்டுத் தூக்கிச் செல்வான். ஆனால் கம்பனில் சீதையின் பர்ணசாலையோடு அவளை இராவணன் தூக்கிச் செல்லுகிறான். இலங்கையில் சீதையைச் சந்திக்கும் அனுமன் அவளைத் தன் தோளின் மேல் அமர்ந்து கொண்டால் இராமனிடம் தூக்கிச் செல்லுவதாகக் கூறுவான். அதற்கு உடன்பட மறுப்பாள் சீதை.[16] ஏனென்றால் பிற ஆடவன் மேல் மகளிர் உடல் படுதல் குற்றம் எனும் சமுதாய உணர்வு மேலோங்கியிருந்தது.

17. குறுந்தொகை, 49
18. குறுந்தொகை, 89
19. சுந்தர காண்டம், சூடாமணிப்படலம், பா. 34.
20. சுந்தர காண்டம் சூடாமணிப்படலம், பா. 19.

பெண்களுக்குஏற்றம்கொடுக்க வேண்டும்என்பதில் பாரதிக்கு முன்னோடியாகக் கம்பர் திகழ்கிறார். சமுதாயம் அரசியல் கல்வி பொருளாதார மற்றும் அனைத்து நிலைகளிலும் பெண்கள் இடம் பெற்று வளமுடன் வாழ வேண்டும் என்று அவர் விரும்புவதை அவருடைய காவியத்தில் பல இடங்களில் காணலாம். கிரேக்கப் பேரறிஞரான பிளேட்டோவின் சிந்தனையை ஒத்ததாக இவை அமைந்துள்ளன என்று கூறலாம். வால்மீகி ஆண் குழந்தைகளைப் பெறுதலையே உயர்வாகச் சொல்லும் போது,[17] கம்பர் தம் காப்பியத்தில் மகளிரை எங்கும் தாழ்த்திப் பேசவில்லை.

ஈ. சீதனம் வழங்கல்

சங்க காலத்தில் தலைவிக்குத் தலைவன் சிறப்புச் செய்ய வேண்டும். அதாவது திருமணத்தில் பெண்ணுக்கு ஆண்மகன் பணம் கொடுக்க வேண்டும். இன்றும் கிராமங்களில் பரிசம் போடுதல் என்று இவ்வழக்கத்தைக் குறிப்பிடுவர். ஆனால் இவ்வழக்கம் வடவர் வருகையால் பண்பாட்டுக் கலப்பால் சிறிதுசிறிதாக மாறியது. பிற்காலச் சோழர் காலத்தில் ஆணுக்குப் பெண் பணம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. திருமணமாகும் பெண்ணிற்குப் பிறந்த வீட்டிலிருந்து பல்வேறு வகை சீதனப்பொருள்களும் அனுப்பப்பட்டன. இதைச் சில கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன என்றும், இச்சீதனப் பொருள்கள் மீது கணவனுக்கு எவ்வித உரிமையுமில்லை என்பதையும் அக்கல்வெட்டு வெளிப்படுத்துவதாகவும் ஆய்வாளர் கருதுவர். கம்பர் காலச் சமுதாயம் இவ்வழக்கத்தை ஏற்றுக் கொண்டிருந்ததால் அவர் தம்முடைய காவியத்தில் இச்செய்தியை எவ்விதமாற்றமுமில்லாமல் எடுத்துரைக்கிறார்.

உ. நாத்திகநெறி

ஆத்திகமும் நாத்திகமும் சமய உணர்வின் இருபக்கங்கள் ஆகும். வால்மீகி இராமாயணத்தில் ஜாபாலி முனிவர் இராமனுடன் கங்கைக் கரையில் பேசுவது நாத்திகவாதத்தின் சாயலை ஒத்தது ஆகும். சீதையைப் பட்டத்து அரசியாக அலங்கரிக்கும் போது அவள் இடை மிக நுண்ணியதாக இருந்ததால் அஃது (இடை) இருக்கிறதா இல்லையா என்று ஐயப்பட்டனர். இதற்கு ஓர் அழகான உவமையைக் கூறுவார் கம்பர். நாத்திக வாதிகள் இறைவன் இருக்கிறானா அன்றி இல்லையா என்று ஐயங்கொள்வதுபோல் சீதையின் இடை உளதா அன்றி இலதா என்று அலங்கரிக்கும் மகளிர் ஐயுறவு கொண்டனர். இவ்வுவமையால் பிற்காலச் சோழர் காலத்தில் ஒருபால் நாத்திக உணர்வும் இலைமறை காய் மறையாக இருந்தமையை உணரலாம்.

---

21. வால்மீகி இராமாயணம், VII, 43/18
22. Dr. Gopalan, N. 'Social Philosophy of kambar', p. 95.

ஊ. பிரபத்திநெறி

பழுத்த வைணவரான கம்பர் வைணவ சித்தாந்தத்தின் பிரபத்திநெறி அல்லது சரணாகதி எனும் உயர்கோட்பாட்டினை மிகச் சிறந்த முறையில் விளக்குவர். வைணவ சமயக் கோட்பாடுகள் மக்கள் மனதில் வேரூன்றித் தழைத்திருந்தமையை இதன் வாயிலாக உணரலாம். குகன் சுக்ரீவன் விபீடணன் ஆகியோர் இராமனைச் சரணடைந்து உய்வதாகக் காட்டுவர். நாமசங்கீர்த்தனம் குறிப்பாக இராமநாமத்தின் பெருமையை வாலிவாய்ச் சொற்கள் விளக்குகின்றன. (மகாத்மாகாந்தி அவர்களும் இராம் இராம் என்று இராமபிரானின் பெயரை உச்சரிப்பதில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது நாமனைவரும் அறிந்ததே) சரணாகதி தத்துவத்தின் வாயிலாக நான் எனது எனும் அகங்கார மமதைகள் நீக்கப்படுவதோடு பிறப்பால் ஏற்படுத்திக் கொள்ளப்படும் உயர்வு தாழ்வு தாமே மறைந்து விடுகின்றன. சமுதாய ஒற்றுமைக்கு வழிவகுக்கும் இந்த உயரிய உணர்வு இக்காவியத்தின் வழி வெளிப்படுகிறது. வால்மீகியில் வெறும் மனிதனாகச் சித்தரிக்கப்படும் இராமன் கம்பர் வாழ்ந்த காலத்தில் கோயிலில் வைத்து வணங்கப்படும் இறை நிலைமையை எய்திவிட்டான் என்பதும் ஈண்டு நினைவு கூறற்பாலது. திருமாலே கடவுள் என அறியாதவரும் தெய்வ நிந்தனை புரிபவரும் நரகம் புகுவர். என்று அவர் கூறுவது அக்கால உணர்வின் வெளிப்பாடு ஆகும்.

மதுவின் வருண வேறுபாடுகளையும் அவற்றுக்கு உரிய விதி வேறுபாடுகளையும் கம்பர் ஏற்கிறார். ஆனால் அவருடைய உள் மனத்தில் வள்ளுவப் பெருந்தகையின் சாதி வேறுபாடற்ற சமுதாய உணர்வு மேலோங்கி நிற்பதை நன்கு உணரலாம். குறிப்பாக வாலி இராமனிடம் பேசும் போது, 'சூரிய குலத்தில் உதித்த அனைத்து உயிர்களுக்கும் ஒரே விதிதானே அமைய வேண்டும்?' என்று வினவுகிறான். வாலியின் வாய்ச் சொற்கள்,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் உயிர்கொள்கையைப் பறை சாற்றுவதாக உள்ளன.

எ. அரசியல்

சோழர் கால அரசியலில் மூத்த மகன் இளவரசனாகப் பட்டம் சூட்டப் பெறுவான். மூத்தவனை அடுத்துள்ள மற்றைப் பிள்ளைகளுக்கும் ஆட்சிப் பொறுப்பில் சில பணிகள் ஒப்படைக்கப்படும். முதலாம் இராசராசன் தான் அரசனாயிருக்கையிலேயே தன்னுடைய மூத்தமகன் இராசேந்திரனுக்கு இளவரசனாகப் பட்டம் சூட்டினான். அதுபோல் முதலாம் குலோத்துங்கன் தன் மகன்

23. Dr. Gopalan, N. Social of Philosophy of Kambar', p. 75

விக்கிரமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினான். இதுபோல் கம்ப இராமாயணத்தில் சுக்ரீவன் கிட்கிந்தை அரசனாக முடிசூட்டிக் கொண்டவுடன் அங்கதனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டுகிறான். இச்செய்தி அக்கால அரசியல் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. அம்மட்டோ? சோழ நாட்டில் நிலவிய நாட்டுப் பிரிவுகளை அயோத்தியில் அமைத்துக்காட்டுகிறார் கம்பர். மண்டலம், வளநாடு, நாடு, ஊர் என அயோத்தி பிரிக்கப்பட்டதாகக் கூறுவதும், அறிஞர் பெருமக்கள் ஆலோசனைப்படி அரசன் நாட்டையாள்வதாகக் கூறுவதும் தமிழ்நாட்டின் மரபைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

'மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' என்பது சங்க காலக் கொள்கை. மக்களை உடலாகவும் மன்னன் அவ்வுடல்களின் உயிராகவும் கருதப்பட்ட இக்கொள்கையைக் கம்பன் மாற்றிக் கூறுவது அக்காலச் சமுதாய உணர்வின் மறுமலர்ச்சியைக் காட்டுவது ஆகலாம். மன்னன் தசரதனைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்'

என்று சொல்லும்போது மன்னவனை உடலாகவும் மக்களை உயிராகவும் காட்டுகிறான். எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற மகாகவியின் வாக்கிற்குக் கம்பர் விதையிட்டதை இதன் மூலம் அறியலாம்.

கம்பர் போர்க்களக் காட்சியை வருணிக்கும்போது அவர் காலத்திலிருந்த மட்பாண்டக்கலை, கொல்லன் உலை, ஆடை நெய்தல் மற்றும் சர்க்கரை செய்யும் வாணிபம் ஆகியன பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். சோழர் காலத்தில் அரசர்கள், கோயில் திருப்பணிகள், சாலைகள் அமைத்தல் போன்றவற்றின் மூலமாகச் சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற செய்தியையும் கம்பர் தம்முடைய காவியத்தின் மூலமாக எடுத்துரைக்கிறார்.

ஏ. செய்ந்நன்றியறிதல்

சங்க காலந் தொடங்கி செய்ந்நன்றி பெரிதும் வலியுறுத்தப் படுகிறது. சோழர் காலச் சமுதாயத்தில் செய்ந்நன்றி மறவாமை தொடர்ந்துபின்பற்றப்பட்டுள்ளது. கம்பர் இராமகாதையை அரங்கேற்றும்போது நடந்த ஒரு நிகழ்ச்சி இக்கூற்றுக்கு உறுதுணையாகின்றது. இஃது ஒரு செவிவழிச் செய்தியாகும். அவை, கம்பர் தாம் இயற்றிய பாடல்களில் ஆயிரத்துக்கு ஒரு பாடல் வீதம் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைப்புகழ்ந்து பாடலாம் என்று ஒப்புக் கொண்டது. அதைக்கேட்ட கம்பன் எம்முடைய சடையப்பர் நூற்றில் ஒருவரல்லர்; ஆயிரத்தில் ஒருவர் என்று கூறி அதை அப்படியே ஏற்றுக்கொண்டதாகக்கதையொன்று நிலவிவருகிறது. கதை நிகழச்சியாயினும் செய்ந்நன்றி மறவாமை எனும் சீரிய அறம் தழைத்தோங்கியிருந்தமையை இதன் வாயிலாக உணரலாம்.

'கொலைப் பாவத்தைவிட செய்ந்நன்றி
கொல்லல் கொடுமையானது; அதற்குக்
கழுவாயே இல்லை' எனும் குறிப்புகள் கம்பஇராமாயணத்தின் வழி புலப்படுகின்றது. மொழி உணர்வு மிகுந்த காலகட்டமாக இருந்தது என்பதற்கும் சான்றாகச் சில பகுதிகளைக் கம்ப இராமாயணத்தில் காணலாம். இராமனுக்குத் தமிழும் தெரியும் என்று கம்பர் குறிப்பிடுவார். திருவேங்கடவன் சிறப்புக்களை இராமன் வாயிலாகக் கூறும்போது இச்செய்தி வெளிப்படுகிறது.

கி.பி. 11ஆம் நூற்றாண்டளவில்தான் ஆழ்வார்களின் பாசுரங்களை இசை நயத்துடன் தொகுத்தனர் என்பது வைணவர் கொள்கை. 12 ஆம் நூற்றாண்டளவில் இப்பாசுரங்களுக்கு விளக்கவுரைகள் எழுந்தன. ஆளவந்தார் திருவாய் மொழிக்கு உரை செய்தார் எனினும் அவற்றிற்குப் பட்டோலை கொண்டு வரவில்லை.

வைணவ சமய வரலாறுகளையும் ஆசாரியர்கள் எனப்படும் ஆழ்வார்கள் வழிக்குரவர் வரலாறுகளையும் கூறும் நூல்களாக வடமொழியில் 'திவ்விய சூரி சரிதம்' 'பிரபன்னாமிருதம்' என இரண்டு நூல்கள் உள்ளன. திவ்விய சூரி சரிதம் எனும் வடமொழி நூலைப் பின்பற்றி 'ஆறாயிரப்படி குருபரம்பரா பிரபாவம்' மற்றும் 'பன்னீராயிரப்படி குருபரம்பரா பிரபாவம்' ஆகிய மணிப்ரவாள நூல்கள் எழுந்தன. பெரிய புராணத்தை அடியொற்றிக் குருபரம்பரைக் கதைகள் வெளிவந்திருக்கக் கூடும். இந்நூல்கள் வாயிலாக வடமொழிக்குத் தமிழகம் எந்த அளவிற்கு ஏற்றம் கொடுத்திருந்தது என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.

குருபரம்பரைக் கதைகளின் வழிப் பல அரிய செய்திகளைப் படிப்போர் உணர்வர். குறிப்பாகக் குருபக்தி எத்துணைச் சிறப்பான நிலையில் இருந்தது என்பதை மதுரகவிகளின் வாழ்வாலும் கூரத்தாழ்வானின் தியாகத்தாலும் உணரலாம்..

ஆழ்வார் பாசுரங்களைத் தொகுப்பித்தவர் நாதமுனிகள். அவருடைய பேரன் ஆளவந்தார். இவருக்குப் பல சீடர்கள் உண்டு. அச்சீடர்களுள் சிறப்பாகப் போற்றப்பட்டவர் மாறனேர் நம்பி. ஆளவந்தாருக்கு ஏற்பட்ட இரண உபாதையைத் தாமே ஏற்று ஆளவந்தாரை அத்துன்பத்தினின்றும் விடுவித்தார். மாறனேர் நம்பி இரணத்தினால் தொல்லைப்பட ஆரம்பித்தார் (பிறருக்கு ஏற்படும் துன்பத்தைத்தாமே ஏற்றுக் கொள்ளும் வழக்கம் சமய நெறிகளுள் ஒன்றாகும்). பெரிய நம்பிகள் மாறனேர் நம்பிக்குச் சிகிச்சை செய்ய விரும்பியபொழுது மாறனேர் நம்பி அதை ஏற்க

மறுத்து விடுகிறார். தமக்கு ஏற்பட்ட துன்பத்தை ஆசாரியனின் அன்பளிப்பு என்று அதை உவப்போடு ஏற்றுக் கொண்டாராம். இராமானுசரின் சீடர் கூரத்தாழ்வான் தம் குருவிற்குப் பதிலாக தானே குலோத்துங்க சீடனிடம் சென்று தம் கண்களை இழந்தார்.

ஐ. பரந்த மனப்பான்மை

'வாழு; வாழவிடு' என்ற கொள்கை உலகத்தாரால் இன்று வலியுறுத்தப்படுகிறது. இத்தகைய பரந்த மனப்பான்மை 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவரால் வலியுறுத்தப்படுகிறது. இராமனுசர் காலத்திற்குப் பின் வாழ்ந்த மணவாளமுனி அவர்களை வாழ்த்தும் பாடலில் இக்கருத்து வலுப்பெறுவதை நன்கு உணரலாம்.

'அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்தமிழ் நூல் வாழ
கடல்சூழ்ந்த மண்ணுலகம் வாழ
மணவாள மாமுனியே இன்னும் ஒரு
நூற்றாண்டிரும்'

என்பது அந்த வாழ்த்துப்பா.

முடிவுரை

இக்கட்டுரையின் வாயிலாக வைணவ சமய இலக்கியங்கள் உணர்த்தும் சமுதாய உணர்வை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

7. பௌத்த சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள்

தா. ஈசுவரபிள்ளை
விரிவுரையாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பொதுவான உடற் கூற்றியல்புகளையும், பொதுவான விருப்பங்களையும், பொதுவான வாழ்க்கை நோக்கங்களையும், பொதுவான விதிகளையும் கொண்டுள்ள உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் பெரியதும் சிறியதும் நிரந்தரமானதும் ஆகிய அமைப்பைச் சமுதாயம் என்று கூறலாம். இச்சமுதாயமானது தனி நபர்களையும், பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும், குழுக்களையும், துணைக் குழுக்களையும் தன்னகத்தேகொண்டு திகழ்கின்றது. தனி மனிதர்களின் கட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏகதேசம் நிரந்தரமான இயல்பு முதலிய சிறப்புத் தன்மைகளையும் கொண்டு விளங்குகின்றது.

சமுதாயத்தில் காணப்பெறும் நிறுவனங்களுள் ஒன்றாகச் சமயமும் திகழ்கின்றது. நிலைத்து நிற்பதும், அமைக்கப்பெற்றதும் நிறுவப்பெற்றதும், சமுதாயத்தின் ஒன்று அல்லது பல சிக்கலைத் தீர்க்கும் ஒழுங்குமுறைகளைக் கொண்டதுமாகிய ஓர் அமைப்பை நிறுவனம் என்பர்.

சமயம் என்ற நிறுவனமானது சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையில் மிக உன்னதமான சக்தியாகவும், மிக இன்றியமையாத சக்தியாகவும் காணப்பெறுகின்றது. சமயம் குறித்துச் சமூகவியலாளர்களால் அளிக்கப்பெறும் விளக்கங்களைப் பார்க்கும்போது சமயம் என்பது நம்பிக்கைகள், சடங்குகள் இயற்கையிறந்த சக்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட, சமுதாயச் செயல்பாடுகள் பலவற்றைக் கொண்ட ஒரு சமுதாய நிறுவனம் என்ற பொதுவானதோர் எண்ணம் எழுகின்றது.

சமயத்தின் சமூகச் செயல்பாடுகள்

சமுதாய உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்பெற்று, சமுதாயத்திலேயே வளர்ச்சியுறுகின்ற காரணம் பற்றிச் சமுதாயத்திற்கும்

சமயத்திற்கும் இடையே பல்வேறு உறவுகள் காணப்பெறுகின்றன. சமூகவியலாளர்கள் சமுதாயமும் சமயமும் நெருங்கிய உட்தொடர்பு உடையன என்றும், ஒன்றின் இயக்கமின்றி மற்றொன்று செயல் படமுடியாது என்றும் கருதுகின்றனர். சமயம் ஒரு வகையான சமூகவியல் என்றும், மனித வாழ்க்கையையும், மனித இனங்களுக் கிடையே உள்ள உறவுகளையும் சுற்றுப்புற உலகை அடிப்படை யாகக் கொண்டு அது விளக்குகின்றது என்றும் டர்க்கியாம் குறிப் பிடுவார். சமயமே சமூகம் என்பதும் சமூகமே சமயம் என்பதும் அவர் கொண்டுள்ள துணிபாகும்.

சமயம் சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் இணைப்புக் கருவி யாக நின்று செயல்படுமாற்றை விளக்கும் சமூகவியலாளர்கள், சமயம் இல்லையென்றால் சமுதாயம் குழப்பம் அடையும் என்ப தையும் நிறுவுகின்றனர். சமய அர்ப்பணம் இல்லையென்றால், சமூக ஒழுங்கு இல்லாமல் போய்விடும் என்ற கருத்தை அனை வரும் ஏற்றுக் கொள்ளவில்லையெனினும், சமயம் சமுதாய ஒற் றுமைக்குப் பெரிதும் துணை நிற்கின்றது என்பதைப் பெரும் பான்மையோர் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஒரே கருத்தையும், ஒரே வாழ்க்கைமுறையினையும், ஒரே நம்பிக்கையையும், ஒரே சடங்கு முறையினையும் கொண்டவர்களை ஒருங்கிணைக்கும் சம யம் தனி மனிதர்களுக்கிடையே ஒற்றுமையுணர்வை ஊட்டுகின் றது. தனி மனிதர்களுக்கு உணர்ச்சிபூர்வமான விடுதலையை அளிப்பதன் மூலம் சமுதாய உறுப்பினர்கள் சமுதாயத்துடன் இணைந்து வாழும் தன்மையை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. மக் களின் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் களைப்பின் போதும் துன் பத்தின் போதும் நம்பிக்கையூட்டும் மேலான சக்தியைப் பற்றிக் கூறிக் களைப்பையும், துன்பத்தையும் போக்கும் அரிய பணியை மேற்கொள்கின்றது. இக்காரணம் பற்றியே சமயத்தைத் தொந் தரவு நிறைந்த சமுதாயத்திற்குத் தேவையானது என்பர். ஊழ் வினை, வினைப்பயன் போன்ற சமயக் காரணங்களைக் காட்டி, மக்கள் ஏற்றத் தாழ்வு நிலைகளைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு அமைதியாக வாழ்க்கை நடத்தத் துணை நிற்கின்றது. இவ்வாறு, பல்வேறு சமூகச் செயல்பாடுகளைக் கொண்டுள்ள நிறு வனமாகச் சமயம் செயல்படுகிறது.

சமயமும் சமுதாய மதிப்புகளும்

சமயத்தின் சமூகச் செயல்பாடுகளில் ஒன்று சமுதாயத்தில் நிலவ வேண்டிய சமூக மதிப்புக்களைப் பாதுகாத்தல் எனலாம். பண்பாடு என்பது சமுதாயத்தில் காணப்பெறும் நியமங்களையும் மதிப்புகளையும் உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த முறையாகும். இதனால் பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாக மதிப் புகள் விளங்குமாற்றை உணரலாம். உயர் நோக்கங்களுக்கும்

கொள்கைகளுக்கும் எவை உயர்வானவை எவை இழிந்தவை, எவை புனிதமானவைஎவை நகைப்பிற்குரியவை என்பதை மக்கள் கற்பித்துக் கொள்கின்றனரோ அத்தகைய அடிப்படையான உணர்வுகளை மதிப்புகள் எனலாம் என்றும், தனி மனிதனின் குறிப்பிட்ட செயல்கள் விரும்பத்தக்கவையா, அல்லவையா எனச் சமூகமயமாக ஏற்றுக் கொள்ளப் பெறும் நியதிகள் சமூக மதிப்புகள் எனப்படும் என்றும், சமுதாயத்தினுள்ளேயே பகிர்ந்துக் கொள்ளப் பெறும் நோக்கங்கள் மதிப்புகள் ஆகின்றன என்றும், அது நல்லது எனக் குறிக்கும் சுருக்கமான கருத்தே மதிப்பு என்றும் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பெறுகின்றன.

உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் காணப்பெறும் அடிப்படையான சிக்கல்களுள் ஒன்று சமூகக் கட்டுப்பாட்டைக் காப்பதும், பராமரிப்பதும் ஆகும். ஒரு சமுதாயம் கட்டுப்பாட்டினின்று வழுவும் போது ஏற்படுகின்ற கட்டாய நிலையில் சமயம் பல சடங்குகளையும் நம்பிக்கைகளையும், வழக்கங்களையும் தனி உறுப்பினர்களிடையே புகுத்திச் சமூக நியதிகளையும், சமூக மதிப்புகளையும் காத்துச் சமூகக் கட்டுப்பாட்டுக் கருவியாகச் செயலாற்றுகின்றது. சமயத்தின் இச்சமூகச் செயற்பாட்டைச் 'சில் வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்களுடைய குறை அறிவினை மட்டும் துணையாகக் கொண்டு உலகத்தார் தாமே அமைத்துக்கொள்ளும் உலகியல் வாழ்க்கை முறைகளைவிட நாடு, மொழி இனம் என்று வேற்றுமைகட்கு இடம் தராது எல்லா உயிர்களுக்கும் உயிராயும் நின்று உலகை இயக்கி அருளும் தெய்வம் ஒன்று உண்டு என்ற தெளிவுடையவராய்த் தெய்வத்தின் திருவருள் வழி அடங்கி நின்று எல்லா உயிர்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வண்ணம் அமைத்துக் கொள்ளும் வாய்மையான ஒழுக்க நெறியே சமயம் என்று மேற்கொள்ளத்தகும் சிறப்புடையதாகும் என்றும், உயிர்திணை எனச் சிறப்பிக்கப்பெறும் மக்கட் குலத்தார் அறத்தின் வழி நிலை பெற்றுப் பொருளீட்டித் தாமும் பிறரும் இன்பமுடன் இனிது வாழ்தல் வேண்டித் தமது வாழ்க்கையில் தவறாது கடைப்பிடித்தற்குரிய ஒழுக்க நெறியே சமயம் என்ற பெயரால் அழைக்கப் பெறுகிறது என்றும் கூறப்பெறும் கருத்துக்களும் (க. வெள்ளைவாரணார், 'சங்க இலக்கியத்தில் சமய நோக்கு, சங்க இலக்கியக் கருத்தரங்குகள் ப. 2), 'புற உலகு பற்றியும் புலன் அறிவிற்கு அப்பால் மனதின் உணர்வினால் உய்த்துணரப் படும் உலகு பற்றியும், இவற்றில் பயணம் மேற்கொள்ளும் மக்களின் வாழ்வியல், குறிக்கோள் முதலியன குறித்தும் ஊடுருவி நோக்கித் தீவிரமாகச் சிந்தித்துணர்ந்த ஞானிகள் வெளியிட்ட கருத்துக்களே தத்துவத் தரிசனங்களாக உருப்பெற்றுள்ளன என்றும் ''சமுதாயம் செம்மையாக இயங்குவதற்கு ஒழுங்கு தேவை

யென மனத்தெளிவும் புலத்தூய்மையும் பெற்ற சான்றோர் தனி மனிதநிலை, சமுதாய நிலை, அரசு நிலை என்ற மூவகை நிலைகளையும் உள்ளங்கொண்டு மக்கள் பின்பற்றுதற்குரிய நெறிமுறைகளை வகுத்தும் தொகுத்தும் வழங்கியுள்ளனர் என்றும் கூறப் பெறும் கருத்துக்களும் (சோ. ந. கந்தசாமி, பௌத்தம், பக். 118) புலப்படுத்துகின்றன.

பௌத்த சமய இலக்கியங்களில் சமுதாய மதிப்புகள்

முற்கூறிய உயரிய நோக்கங்களைக் கொள்கையாகக் கொண்ட சமயத்தின் அடிப்படையாக எழுந்தசமய இலக்கியங்களை இயற்றிய அருளாளர்கள் உலகைத் துன்பங்களாகிக் கட்டுக்களில் சிக்கி அல்லலுறும் சமுதாய உறுப்பினர்களாகிய மக்கள் அக்கட்டுக்களிலிருந்து விடுபட்டு உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து, தம்மையும் தாம் வாழும் சமுதாயத்தையும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்து, இறுதியில் பேரின்ப நிலையை அடைய வேண்டும் என்ற சமுதாய உணர்வினால் பல அரிய கருத்துக்களை ஏற்ற இடங்களில் எல்லாம் கூறியுள்ள பொதுமை நிலையை உணரலாம். செல்லும் நெறிதான் வேறுபட்டுள்ளதே தவிர உலக மக்களை ஈடேற்றல் என்ற நோக்கத்தில் எல்லாச் சமயங்களும் ஒன்றுபட்டே உள்ளன. பௌத்த சமயமும் இதற்கு விதிவிலக்கன்று. இவ்வடிப்படையில் மணிமேகலையில் இடம் பெறும் சமுதாய மதிப்புகளைக் காணலாம். இவ்விடத்தில் பௌத்த சமயம் பற்றி ஆழமான, விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ள பேராசிரியர் முனைவர் சோ. ந. கந்தசாமி அவர்களின், 'மணிமேகலைப் பௌத்தம் வெறும் தத்துவப் போதனையுடன் சமயப் பணியை முடித்துக்கொள்ளவில்லை. அறக்கருத்துக்களும் தத்துவ விளக்கங்களும் பெரும்பான்மையோராகிய சாமானிய மக்களின் தேவையை நிறைவு செய்யா. இவ்வுண்மையைச் சாத்தனார் உணர்ந்துள்ளார். ஆதலின் மக்களை விட்டு ஒதுங்கிச் செல்லாமல் சமுதாய உணர்வுடன் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதைக் காப்பியக் குறிக்கோளாகக் கருதிப் பாடியுள்ளார்' என்ற சிந்தனை குறிப்பிடுவதற்குரியதாகும்.

உணவு அளித்தல்

மணிமேகலைக் காப்பியம் முழுதும் ஊடுருவிக் காணப்பெறும் ஓர் ஒப்புயர்வற்ற சிந்தனையாக உணவு கொடுக்கும் செயல் இடம் பெறுகின்றது. சமுதாயம் சீராகச் செயல்பட, சமுதாய மக்கள் சிறப்புறப் பணியாற்ற இன்றியமையாது வேண்டப்பெறுவது உணவே ஆகும். மக்களின் அடிப்படைத் தேவைகளுள் முதலில் வைத்து எண்ணப்பெறுவதும் உணவே ஆகும். சமுதாயத்தில்

வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்ண உணவு போதுமான அளவில் கிடைத்துவிட்டால் அப்போதே ஏற்றத்தாழ்வு அற்ற சமநிலையான சமுதாயம் அமைந்துவிடும். சமுதாயத்தில் வகுப்புப் பிரிவினைகள் தோன்றுவதற்கும், தாழ்ந்த வகுப்பினர் இழிநிலைகள் அடைவதற்கும் உணவுப் பிரச்சனையே அடித்தளமாக அமைகின்றது. இதை உணர்ந்த சாத்தனார் பிறர்க்கு உணவு அளித்தலை அதிகமாக வலியுறுத்துகின்றார் எனலாம். உணவிற்கு மக்கள் அடையும் இழிநிலைகளை எடுத்து மொழிகின்றார். மக்களின் உடல் உணவாகிய தொகுதி (10: 90—92). பசியானது தன் உயர்குடிப் பிறப்பைக் கெடுக்கும்; சிறப்பை அழிக்கும்; அழகைக் குலைக்கும்; கல்வியைப் போக்கும்; மகளிருடன் பிறர்கடைவாயிலில் நிறுத்தும்; (11: 84—87) செல்வத்தை அனுபவிக்கும் செல்வரின் இல்லத்தில் கிழிந்த சீரைகளை உடுத்துக்கொண்டு பசியால் வருந்தி, வெயில், மழை எனப் பாராமல் அலைந்து திரியச் செய்யும்; (11:109—113) உடலைத் தின்னும் (17:93); சமுதாயத்தைப் புல்லென்றிருக்கச் செய்யும் (22:167—169): பாணிணைந்தூட்டும் தாயைக்கூடக் குழந்தையை விட்டுவிட்டுத் தானே உண்ணும்படி செய்யும் (25:101—104); இரந்து உண்ணச் செய்யும் (25: 142) எனக் காட்டுகின்றார். பசியின் கொடுமைக்குட்பட்டோரை ஆற்றாமாக்கள் (17:64, 19. 35) இரவலர் (28:128), பச்சை மாக்கள் (18:30) எனக்குறிப்பிடுகின்றார். மக்களை இழிநிலைக்குள்ளாக்கும் பசியை, அரும்பசி (11:86, 14:44, 17:13) உறுபசி (17:79) வெம்பசி (17:3) என அடைகொடுத்துக் கூறுவதுடன் அப்பசியைப் பிணியாகவே உருவகிக்கின்றார் (12:118‘ 16:134, 17:16, 20:32, 28:217, 23:224, 38:234) இத்தகைய கொடுமையுடைய பசியைப் பாவி என மனம் நொந்து கடிவதுடன் (11:80) பசியை நீக்கும் உணவை உயிர்களின் பசியாகிய நோயை நீக்கும் மருந்தாகவும் கூறுகின்றார் (11:48, 11:103; 11:114, 11:117, 16:135, 17:15, 19:144, 28:166, 28:175, 28:228). எனவே மக்களை இழிவுறுத்தச் செய்யும் பசியை நீக்க உணவு அளிக்க வேண்டும் என அறிவுரை கூறுமுகத்தால் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் (10:95—96); உணவு கொடுத்தல் உயிரை அளிக்கும் அறம் (11;97); இது மக்கள், தேவர் இருசாரார்க்கும் ஒத்த அறம் (12:116—118); பசிபோக்கியவர் செல்லுலகம் அறிந்தவர் (23:134—135) என்கிறார்.

பசியால் வருந்துவோரைக் கண்டு வலிந்து சென்று உணவு அளிக்க வேண்டுகிறார். (19:37) இதனால்தான் இத்திருவிழாவிற்கு முரசறைவோன் பசியும்பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க வாழ்த்துகிறான் (1:70—71). உலகின் உண்மை நெறியாகிய வாழ்க்கை அரும்பசி களைவோரின் கண்ணே உள்ளது (11:93—94). இவ்வாறு உணவு அளிக்கும்போது குருடர், செவிடர், முடவர், பாதுகாப்பற்றோர், நோயால் துன்பமுற்றோர் (10:111—113) ஆகியோர்க்கு அளிக்க வேண்டும் என்றும், பொறுக்கும் வன்மையுடைய செல்வர்க்கு அளிக்கக்கூடாது என்றும் (11:92) வரையறை செய்கின்றார். உணவைப் பகுத்து உண்ண வேண்டும் என்ற உயரிய கொள்கையால் 'பாத்தூண்' என்றே குறிப்பிடுகின்றார் (பதிகம் 64, 17:1). கொடுக்கக் கொடுக்கக் குறையாத உணவை அளிக்கும் அமுத சுரபியைத் 'திருவின் செல்வம்' எனப் புகழ்கின்றார் (14:40). சிறைச்சாலையை அறக்கோட்டம் ஆக்கி மகிழ்கிறார் (19:44—46). (20:7). இவ்வாறு உணவு அளித்தல் என்ற உணர்வைச் சமுதாய மக்களிடம் சாத்தனார் ஊற்றெடுக்கச் செய்கின்றார்.

சமத்துவச் சிந்தனை

'பிறப்பினாலும் தொழில்களாலும் ஏற்படும் வேறுபாடுகளைப் புறக்கணித்து நன்னடத்தையினால் உண்டாகும் உயர்வினைப் பெரிதாக மதிக்கத் தூண்டியது பௌத்தமாகும்' (சோ. ந. கந்தசாமி, பௌத்தம் 122) 'பௌத்தத் துறவியின் தனிப் பெருஞ்சிறப்பு சமயத்துக் கொள்கையில் காணப்படுகின்றது (சோ.ந. கந்தசாமி, பௌத்தம் 155). பௌத்த சமயத்தின் தலைசிறந்த இக்கொள்கையைச் சாத்தனார் ஆபுத்திரன் மூலம் வெளிப்படுத்துகின்றார். வேள்வியில் கொலை செய்வதற்காக நிறுத்தப் பெற்றிருந்த பசுவைக் காப்பாற்றிய ஆபுத்திரனை அந்தணர்கள் புனலஞ்சிறுமகன் என இழிவாகக் கூற அவன் பசுவின் மகனும், மானின் மகனும், புலியின் மகனும், நரியின் மகனும் உங்களால் அந்தணர்குல முனிவர்கள் எனப் போற்றப்படும் நிலையில் ஆவால் இந்த அழிகுலம் உண்டோ என வினவிச் சாதியால் வேறுபாடு ஈனும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்துக், குணத்தைப் போற்ற வேண்டும் என்று உயரிய சமத்துவச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றான். (13:40—68).

ஒற்றுமை உணர்வு

இந்திரவிழாவிற்கு வந்து கூடியவர்களாகப் பல்வேறு சமயக் கணக்கர்களையும், மொழிவேறுபட்ட மக்களையும் காட்டுகின்றார் (1:11—13, 1:1). சிவபெருமான் முதலாகப் பல்வேறு கடவுளர்கட்குச் செய்யும் நெறியினை அறிந்த அறிவுடையோர்கள் சிறப்புச் செய்யுமாறு முரசறைவோன் வேண்டுகிறான் (1:

54—55). மணிமேகலை அமுதசுரபியைப் புத்த பீடிகையில் வைத்ததும் பதினெண் வகைமொழியுடைட மக்களில் பசியுற்றோர் அனைவரும் ஒருங்கே வருகின்றனர் (28:220—227). எவ்வுயிரும் தம்முள் ஒற்றுமையுடையனவாக வாழ்க என அருளிய புத்த பெருமானின் அருளுரையும் இடம் பெறுகின்றது (10:64). இவற்றால் சமுதாயத்தில், மக்கள் சமய வேறுபாட்டால், மொழி வேறுபாட்டால் பிரிந்து நிற்காது ஒற்றுமையுடன் வாழ வகுக்கின்றமை புலனாகும்.

பெண் கற்பை வலியுறுத்தல்

'இல்லறம் இனிதாகத் திகழ்வதற்குப் பெண்ணின் தூய்மை பேணப் பெறுதல் வேண்டும். அவள் நிலைகுறையின் குடும்பமே சிதைந்துவிடும். குடும்பத்தைப் போலவே சமுதாயமும் சீராக இயங்குவதற்குப் பெண்ணின் தூய்மையும் ஒத்துழைப்பும் தேவை' (சோ.ந. கந்தசாமி, பௌத்தம், 142:142)'. இவ்வுணர்வு சமுதாய மக்களின் உள்ளத்தில் ஏற்பட வேண்டி, மழையைத் தர வல்ல வல்லமையுடைய கற்புடையவர்கள் என்று (16:49—51) பெண் கற்பைப் போற்றுகின்றார். பெண்கள் கணவன் சொல்லை எதிர்மறுத்தல் நன்றியன்று என அறிவுரை கூறுகிறார் (18:133—134). கற்புடைய பெண்களுக்கு ஏற்றம் கொடுப்பதால் மணிமேகலை முதன் முதலில் ஆதிரை என்ற கற்பிற் சிறந்த நல்லாளிடம் அமுத சுரபியில் உணவு பெறுவதாகக் காட்டுகின்றார் (15—73—79). பெண் கற்பை வலியுறுத்திய ஆசிரியர் ஆண் கற்பையும் வலியுறுத்தும் வகையில் பிறன்மனை நயத்தலையும் காமம் கொள்ளுதலையும் கடிகின்றார். (22:21—22, 22—148). கர்மத்தின் தீய விளைவுகளைக் காட்டியும் பரத்தையரின் இழி நிலைகளையும், உளப்போக்கையும் காட்டியும் ஆண்களும், பெண்களும் நல்லொழுக்கத்தில் தலை நிற்க வழி செய்கின்றார் (2:57, 16:4—10, 18—109—110, 22:21, 22:173, 24:79—80).

கொல்லாமை

எவ்வுயிர்க்காயினும் இரங்கல் வேண்டும் (23;79) என்ற நோக்கத்தில் கொல்லாமை அறத்தை வலியுறுத்துகின்றார் சாத்தனார். நிலையற்ற உயிர்களைக் கொல்லுதலை அறிவுடையோர் விலக்கினர் (16:84—85, 23: 131—132) எனச் சுட்டிக் காட்டிக் காணா உயிர்க்கும் கையற்று ஏங்கல் வேண்டும் என அறிவுரையும் கூறுகின்றார் (3:89).

அருளறம்

அருள் என்பதற்கு ஒன்றின் துயர்கண்டவழி வேறு காரணம் இன்றித் தோன்றும் இரக்கம் என விளக்கம் தருகின்றார் (120—

121). மக்களிடையே சமத்துவ, சகோதர, ஒற்றுமை உணர்வுக்கு வழி வகுப்பது இதுவே ஆகும். கொல்லாமை நெறி இதனாலேயே தழைத்தோங்கும் (14:92). இதுவே அமைதியைக் கொடுக்கும் (21:20). இதுவே விழுத்துணையாகும் (22:138). அறம் என்பது உயிர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் அளித்தலே (25:229—231) என்கிறார்.

நிலையாமை

சமுதாய மக்களிடையே காணப்பெறும் வேறுபாட்டு உணர்வுகள் நீங்குவதற்காக உடம்பு, இளமை, அழகு நிலையாமைகளைப் பற்றி எடுத்துக் கூறும் மரபைச் சாத்தனாரும் கையாண்டிருக்கிறார் எனலாம். யாக்கை நிலையற்றது (4:113—121); இஃது இடும்பைக் கொள்கலம் (18:136—138); பிறந்தவர் இறத்தல் உறுதி (24:103); உடம்பானது ஊனைக் கொண்டது (16:59); துன்பக் கதிக்கு இருப்பிடமானது (26:56); அழகும் நிலையற்றது (6:107—126, 20: 40—70); பொருளும் நிலையற்றது (28:98—99); எனவே கூற்றுவன் வரும் முன்பு அறம் செய்க (25:49—50) என்கிறார்.

வினைத்தூய்மை

'சமுதாயத்தில் தீய செயல்கள் செய்தவர்கள் சில வேளைகளில் செல்வாக்கு, பதவி காரணமாகத் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதும் உண்டு. அவர்களுக்கு மறு பிறவியிலாவது தண்டனை கிடைக்கும் எனக் கூறி மக்கள் மத்தியில் நீதியை நிலைக்கச் செய்தது பௌத்தம்' (சோ.ந. கந்தசாமி, பௌத்தம் ப. 168). நல்லறத்தை விதைப்பவன் பயன் செல்வம் பெறுதல்; (11:108—109) முற்பிறப்பில் செய்த தீவினையில் பயனே வறுமை (11:113); பழவினை வந்து பற்றும் (26:32, 24:135—140); எனவே நல்வினையை மறவாது பாதுகாத்துக் கொள்ளுங்கள் (25:44). செய்யும் வினை மனத்துடன் கூடியதாக இருக்க வேண்டும் (3:76—77). தீ நெறியானது கடும் பகை ஆகும் (5:103). தீநெறி சென்றவர் துன்பம் அடைவர் (23:124—125). எனவே தீவினைகளை நீக்குங்கள் (24:42) என்றெல்லாம் அறிவுரைகள் கூறி வினைத்தூய்மையை வலியுறுத்துகின்றார்.

பிற சிந்தனைகள்

மழை பெருகுவதற்கும், மகளிர் கற்பு நிலையில் மேம்படுவதற்கும் மன்னவன் செங்கோல் நடத்தல் வேண்டும் (7:8-10 22:208—209, 28:88—91). கள் உண்ணுதல் கூடாது 6:97—101, 22:20); கோபம் கொள்ளுதல் கூடாது (23:136—137); செருக்கை விட வேண்டும் (17:33); பற்றைத் துறக்க

வேண்டும் 2:66); சூதாடுதல் களையப்பட வேண்டும் (16:6—8); கல்வி கற்க வேண்டும் (11—77); பொய்யுரைத்தல் கூடாது (30:98); பகையைப் பகைக்க வேண்டும் (10:63); பயனில சொல்லக் கூடாது; (30:98) கடுஞ்சொற்கள் கூறக்கூடாது (30:98); புறங் கூறுதல் கூடாது (30;98) முதலான சமுதாய நலச் சிந்தனை களைச் சாத்தனார் வெளிப்படுத்துகின்றார்.

இவ்வாறு பௌத்த சமயக் காப்பியமாகிய மணிமேகலை வெறும் பௌத்த சமயக் கருத்துக்களையும் புத்த பெருமானின் பெருமைகளையும் மட்டும் கூறாது, மக்கள் மக்களாகச் சமுதாயத்தில் வாழ்வதற்குரிய அரிய கருத்துக்களைப் பொழியும் சமுதாய நலச் சிந்தனைக் களஞ்சியமாகவும் திகழ்தல் எண்ணிப் போற்றற்குரியதாகும்.

8. அரிச்சந்திர புராணமும் யோபுடைய சரித்திரமும்

டாக்டர் தியாகமணி
ஆசியவியல் நிறுவனம், சென்னை

பொதுவாக இலக்கியங்கள் மலர்வதே சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான். இலக்கிய ஆசிரியன் சமுதாயத்தினின்றும் வேறானவன் அல்லன். அவன் தன் கலைத்திறனால் அப்போதைய சமுதாயத் தேவையை உணர்ந்து மொழியைக் கருவியாகக் கொண்டு படைத்துக் காட்டுகின்றான்.

சில இலக்கியங்கள் அவ்வக் காலத் தேவையைக் கருத்தில் கொண்டு எழுதப்படுகின்றன. வேறுசில எக்காலத்திற்குமுரியனவற்றைக் காட்டுவதற்கெனப் படைக்கப்படுகின்றன. இவற்றுள் முன்னது சமயஞ் சாராதது. பின்னது சமயஞ் சார்ந்தது. சமய இலக்கியங்களோ எக்காலத்துக்கும், எவ்வினத்தார்க்கும், எவ்விடத்தார்க்கும், எம்மொழியினர்க்கும் உரிய உண்மைகளைப் புலப்படுத்துவதில் முதன்மை வாய்நதவை. எல்லாக் கால மக்களையும் நன்மைக்குத் தூண்டுவதில், தீமைக்கு எச்சரிப்பதில், நல்வழிக்கு ஆற்றுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை. மனித வாழ்க்கைக்குச் சமயம் இன்றியமையாதது என்பது. ''மனிதனுக்குப் பொதுவாக சமயம் மிகவும் அவசியம். நிலையான துன்ப ஒழிப்பையும் கடவுளின் பேரானந்த உணர்வையும் பெறச் சமயம் இன்றியமையாதது'' என்னும் பரமாம்ச யோகானந்தாவின் கூற்றினால் விளங்கும். சமய இலக்கியங்கள் மக்கள் நிலையைக் காட்டுவன. இறைவனை நினைக்கத் தூண்டுவன. நிலையான வாழ்விற்கு ஆற்றுப்படுத்துவன. எவ்வுயிர் மீதும் அன்பைப் பொழியச் செய்வன. பரிவையும் இரக்கத்தையும் காட்டச் செய்வன. வாழ்விற்கான உறுதிப்பாட்டை வகுப்பன. ஒழுகலாறுகளின் தரத்தை உயர்த்துவன. நலவாழ்விற்கு, மக்களைத் தகுதிப்படுத்துவன.

ஈண்டு, அரிச்சந்திர புராணமும் யோபுடைய சரித்திரமும் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள் தொகுக்கப்பட்டு ஒப்பிட்டாராயப் பெறுகின்றன. அரிச்சந்திர புராணம் ஒரு முழுமையான சமய நூல் ஆகாது. எனினும் அதனுள் சமயக் கருத்துக்கள் காணக்கிடக்கின்றன. யோபுடைய சரித்திரம் ஒரு முழுமையான

சமய நூல். கிறித்தவர்களின் வேதம், பழைய, புதிய ஏற்பாடென்னும் இரு பெரும் பகுதிகளைக் கொண்டது. பழைய ஏற்பாட்டின் ஞான இலக்கியங்களிலும், கவிதை இலக்கியங்களிலும் இடம் பெறக் கூடிய இந்நூல் இலக்கியக் கூறுகள் பலவுடைய ஒரு சுய சரிதமாகும். விவிலியத்தின் தலைசிறந்த ஓர் இலக்கியமாக இது நிறுவப் பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட இவ்விரு நூல்களும் சமயம், மூலமொழி, இலக்கியவகை, காலம், இடம், இனம் முதலான வேறுபாடுகளைக் கடந்து சமய-சமுதாய உண்மைகளை/உணர்வுகளை உணர்த்துவதில் ஒன்றுபடுகின்றன. எக்காலச் சமுதாய மக்களையும் ஆட்டிப் படைக்கின்ற சோதனை, துன்பம், நிலையாமை முதலான அச்சவுணர்வுகளுக்குப் புதுவிளக்கம் தருவன. அத்தகைய அச்சவுணர்வுகளைப் போக்கும் வழிகளை உய்த்துணரச் செய்வன. பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மறைமுகமாகச் சுட்டுவன. எச்சூழலிலும் வாய்மை வழுவாமை, இறை நம்பிக்கை இழக்காமை ஆகிய இவ்விரு அறங்களையும் முறையே அரிச்சந்திர புராணமும் யோபுடைய சரித்திரமும் இன்றியமையா நோக்கமாகக் கொண்டன.

சோதனை

சோதனை அனுபவப் பாடசாலையின் நுழைவுக் கட்டமாக அமைய, துன்பமோ சோதனையின் முழுமைக் கட்டமாக நிறைவுறுகின்றது. சோதனை புல்லித் தோன்றும் கைக்கிளை எனில், மிக்க காமத்தையுடைய பெருந்திணை போன்ற வேதனைதான் துன்பம். எத்தீமையும் செய்யாது நன்மையையே செய்கின்ற ஒருவர்க்கு ஏற்படுகின்ற ஒரு மருட்சி நிலையை இக்கட்டு, கதிகலங்கிய நிலை, கலக்கம், சூழ்ச்சி, தருமசங்கடமான நிலை, தவிப்பு, திகைப்பு, நிர்ப்பந்தம், பிரமிப்பு, பிரமை, போராட்டம், மர்மம், மலைப்பு என்னும் சொற்களால் விளக்கிக் காட்டலாம்.

சோதனை என்னும் சொல்லின் பொருள் நுட்பமானது. பொதுவாக மக்கள் தாங்கள் எதிர்பார்த்தது நிறைவேறாத போதும் எதிர்மாறாய் நிகழும்போதும் தங்கள் கையற்ற நிலையைச் 'சோதனை' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். சோதனை யாரால் ஏற்படுகின்றது என்னும் வினா எழுவது இயற்கை. சோதனை இறைவன் தலையீட்டால் நிகழ்கின்றது என்பதற்கு 63 அடியார்களின் வரலாறுகளைக் கொண்ட பெரிய புராணமும், ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதித்த நிகழ்ச்சியைக் கொண்ட விவிலியமும் சிறந்த காட்டுக்கள். சோதனை பிறரின் குறுக்கீட்டாலும் வருகின்றது என்பதற்கு முறையே இந்து சமயத்திற்கு அரிச்சந்திர புராணத்தையும் கிறித்தவ சமயத்திற்கு யோபுடைய சரித்திரத்தையும் காட்டலாம். அரிச்

சந்திரனுக்கும் யோபுவுக்கும் மறைமுகமாக இறைவனின் தலையீட்டாலும் வெளிப்படையாகப் பிறரின் குறுக்கீட்டாலும் நேரிடுகின்றது என்பதை அவ்விரு நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்விருவர்க்கும் முறையே விசுவாமித்திரர் சாத்தான் ஆகிய இவ்விருவராலும் சோதனை வருகின்றது.

சோதனைக்கான அறிஞர்களின் கருத்துக்கள்

''நெருப்பு இரும்பைச் சோதிக்கின்றது. சோதனையோ ஒரு நீதிமானையே ஆராய்ந்தறிகிறது,,[2] என்றும், ''பாலம் பாரத்தினாலும், பொன் நெருப்பினாலும் ஆராய்ந்தறிவது போல் மனிதன் சோதனையினால் சோதிக்கப் பெறுகின்றான்''[3] என்றும் கூறுவதிலிருந்து சோதனை ஒரு மனிதனுக்கு அதிலும் ஒரு நீதிமானுக்குத் தேவை எனத் தெரிகிறது.

''சோதனை நாம் விழுவதற்கன்று; நம்மை வலுப்படுத்த வருகிறது. ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் நல்லவர்களாக விளங்கச் செய்கிறது. பாவிகளாக்க வரவில்லை; நல்லவர்களாக்க வருகிறது. தண்டனைக்காக வரவில்லை; மகிமைக்காக வருகிறது. உலோகங்கள் பயன்படுத்துவதற்கு முன் வேகமான அழுத்தத்திற்கும் விசைக்கும் இடனாவது போல் கடவுளின் நற்பணிக்கு அவனைப் பயன்படுத்துவதற்கு முன் அவன் சோதிக்கப்பட வேண்டியது அவசியம்''[4] எனும் கூற்று சோதனைக்கு அஞ்சுகிறவர்களுக்கும், சோர்ந்து போகிறவர்களுக்கும், பின் வாங்குவோர்க்கும், பயந்து விலகுவோர்க்கும் ஒரு சிறந்த பாடமாகும்.

''ஒவ்வொரு போராட்டமும் ஒரு வெற்றியைத் தருகிறது. ஒவ்வொரு போரும் ஆசிர்வாதத்தைப் பொழிகிறது. ஒவ்வொரு சோதனையும் வெற்றியாக மாறுகிறது.... தாக்கம் உறுதியைப் பின்பற்றுகிறது; போராட்டம் நற்பணிக்கு வழி நடத்துகிறது''[5] என்று கிரஹாம் ஸ்குரோஜி குறிப்பிடுவதும் இவண் நினைவு கூரத்தக்கது. இவர்களின் கருத்துக்களை, இந்து, கிறித்தவம் ஆகிய இவ்விரு சமயங்களுக்குமுரிய சமாதானமாகக் கொள்ளலாம். சோதனையைத் தாங்குவதற்கான பக்க பலமாக இவை அமைகின்றன.

சமயங்களில் சோதனை

மனிதனுக்குச் சோதனை உண்டென்பதை இந்து, கிறித்தவம் ஆகிய இவ்விரு சமயங்களிலிருந்தும் எடுத்துக்காட்டலாம்.

'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்

நினைந்தணைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூ ரெம் பெருமானார் நல்லவாறே' 6

எனும் திருநாவுக்கரசரின் திருததாண்டகத்தாலும்,

'.....தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்' 7

எனும் விவிலியச் சான்றாலும் இவ்வடியார்களை ஆண்டவன் சோதித்தார் என அறியலாம். ஆண்டவர் இவ்வடியார்களைத் தமக்காகச் சோதிக்காமல் அடியார்களின் உள்ள உறுதியை உலகோர்க்குக் காட்டவும், அவர்களின் உத்தமத்தை உணர்த்திடவும், உண்மை பக்தியை உறுதிசெய்திடவும், உலகம் அவர்களின் உயர் குணத்தை அறிந்து போற்றவும் சோதித்தார். கடவுள் தரும் சோதனை அழிவிற்குரியதன்று; ஆக்கத்திற்குரியது எனத் துணியலாம்.

அரிச்சந்திரனின் சோதனை

அரிச்சந்திரனுக்கு முதலாவதாகப் புலைத்திய பெண்களை மணக்கும்படியாகவும், அல்லாவிடில் அரசை அளிக்கும்படியாகவும் சோதனை உருவாகின்றது. அரசை அளித்த பிறகும் அரச அணிகலன்களை ஆடைகளை அகற்றும்படியான சோதனை நேரிடுகின்றது. அரசுச் செல்வாக்கு யாவுமிழந்து வெறுங்காலால் காடு மேடு பலவற்றிலும் வெயிலிலும் குளிரிலும் நடக்கும்படியான பரிதாப நிலை ஏற்படுகிறது. கொடிய விலங்கினங்களின் பயமுறுத்தலுக்கும், பேய் பூதம் பூச்சிகள் ஆகியவற்றின் அச்சுறுத்தலுக்கும், இடி, மின்னல், புயல், வெள்ளம் ஆகிய இயற்கை இன்னல்களுக்கும் ஆளாக வேண்டிய சூழ்நிலை உண்டாகிறது. பச்சைக்காய் கனிகள் உண்ணவேண்டிய நிலை, மனைவி மகனை விற்று விசுவாமித்திர முனிவரின் கடனைத் தீர்க்கவேண்டிய நிலை வருகிறது. சுக்கிரவனுக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காகச் சுடுகாடு காக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மனைவி மகனைப் பிரியவும், பின் மகனை இழக்கவும், இறுதியாகக் குற்றவாளியாக்கப்பட்ட மனைவியையும் தம் கையாலேயே கொல்லவும் வேண்டிய கொடிய நிலை உண்டாகிறது. இவ்வேதனைகள் யாவும் அரிச்சந்திரனுக்கு அடுக்கடுக்காகத் தொடர்ந்த சோதனைகளாகும்.

யோபுவின் சோதனை

இறைவனின் பக்தனாகிய யோபுவுக்கு முதல் காட்சியிலேயே ஆடு, மாடு, ஒட்டகங்கள் முதலான உலகச் செல்வங்கள் யாவும் அழியும்படியான சோதனை வருகின்றது. ஏராளமான பணிவிடைக்காரர்களையும் தன் சொந்த மகன்களையும் மகள்களையும் இழக்கும்படியான சோதனை நேரிடுகின்றது. வீடு, புயல்

காற்றினால் அழிக்கப்படுகின்றது. ஆயினும் கடவுளைப் பழிக்க வில்லை. இரண்டாவது காட்சியில் உச்சி முதல் உள்ளங்கால் வரையான அருவருக்கத்தக்கக் கடுமையான வியாதியினால் பாதிக்கப்படுகின்ற சோதனை உண்டாகிறது. உருக்குலைந்த வனாக ஊருக்குப் புறம்பே சாம்பல் குவியலின் மீது அமர்ந்து கொண்டு, உடைந்த பானை ஓட்டினால் தன் உடலைச் சுரண்டிக் கொள்கின்ற வியாதியின் கொடுமுடியில் காட்சியளிக்கின்றான். பாவத்தின் விளைவுதான் துன்பம் என்ற பழம் மரபுக் கொள்கையில் வாதாடுகின்ற யோபுவின் நண்பர்கள் அவனைச் சொல்லம்பால் தைத்து மனத்தைப் புண்படுத்துகின்ற பரிதாப நிலை உண்டாகிறது. அவனது உள்ளத்தை அணு அணுவாகத் துளைத்து மன அமைதியைக் குலைக்கின்ற கொடுமை ஏற்படுகிறது. இப்படி யோபுவினுடைய பேரழிவில் பேரிழப்பில் கொடூரத் துன்பத்தில் நண்பர்களும் கைவிடுகின்ற பேரவலம் உண்டாகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் துணையாயும் தூணாயும் இருக்க வேண்டிய வாழ்க்கைத் துணைவியும் கணவனைச் சபித்துக் கைவிடுகின்ற கடுமையான நிலை வந்துவிடுகிறது. இவ்வாறு யோபுவுக்குச் சோதனைகள் ஒரே நேரத்தில் சூழ்ந்து நிற்கின்றன.

அரிச்சந்திரனையும் யோபுவையும் பொறுத்தவரையில் அவ்விருவரின் சோதனைக்கும் இறைவனின் தலையீடு மறைமுகமாகச் சோதனையை அனுமதிப்பதில் உண்டு. பிறரின் குறுக்கீடு அவர்களை நேரடியாகச் சோதிப்பதில் உண்டு. விசுவாமித்திரரும் சாத்தானும் முறையே அரிச்சந்திரனையும் யோபுவையும் சோதிக்கின்றனர். இவ்விரு கதைத் தலைவர்களின் நற்பண்புகள் மெருகிடப் படுவதற்காகச் சோதிக்கப் பெறுகிறார்கள். இவற்றால் பெறப்படுவது கிறித்தவ சமயத்தின்படி இறைவன் தருவதை டெஸ்ட் (Test) என்றும், சாத்தான் தருவதை 'டெம்ப்ட் (Tempt) என்றும் கொள்ளலாம். கடவுள் சோதிப்பது நன்மைக்காகவும் சாத்தான் சோதிப்பது தீமைக்காகவும் எனத் தெளியலாம். இவ்விருவரின் சோதனைக்கான நோக்கங்களும் வேறுபடுகின்றன. மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் சோதனைக்குக் கொடுக்கும் விளக்கங்களை இந்து கிறித்தவம் ஆகிய இரு சமயங்களுக்குமுரிய சமரதானமாகக் கொள்ளலாம்.

எனவே நல்லவனுக்கு வருவது சோதனை; தீயவனுக்கு வருவதோ தண்டனை. சோதனைக்குத் தகுதியுடையோரே சோதிக்கப் பெறுகிறார்கள். அவரவரின் சக்திக்கேற்றவாறு சோதனையின் அளவு கூடுகிறது; குறைகிறது. சிறந்த பொருள்களே அக்கினியால் சோதிக்கப்பெறும் என்பதற்குப் பொன்னைப் புடமிடுதல் ஒரு நல்ல சான்று. சோதனையை வெற்றிக்கொள்ள உள்ள உறுதி, திடநம்பிக்கை, மனப்பக்குவம், மனோபலம், இறை நம்பிக்கை, பொறுமை முதலிய பேராயுதங்கள் தேவை.

அரிச்சந்திர புராணமும் யோபுவின் சரித்திரமும் இத்தகையவ றைக் கற்றோர் உய்த்துணருமாறு கூறுகின்றன.

துன்பம்

இன்பமும் துன்பமும் கலந்ததே மனித வாழ்க்கை. மக்களே அன்றி அஃறிணை முதலான எல்லா உயிர்களும் பிறப்பு முதல் இறப்புவரை போராட வேண்டி உள்ளது. மனித வாழ்க்கையே போராட்டம் நிறைந்தது. மனிதனுடைய உலகம் இன்பம் துன்பம், செல்வம் வறுமை, நன்மை தீமை, வெற்றி தோல்வி முதலிய இவ்விரு முரண்பட்ட பண்புகள் கலந்தே இயங்குகின்றது. உலகம் தேவை நிறைந்த உலகம். மனிதனும் தேவையை நிறை வேற்றுபவனாக இருக்கின்றான். எனவே துன்பப்பட வேண்டி யது அவனுக்கு இயல்பாகின்றது. இவை யாவும் துன்பத்திற் கான பொதுவான காரணங்களாகும். இனி, துன்பத்திற்கு அறி ஞர்கள் தருகின்ற விளக்கத்தைக் காண்போம்.

துன்பமும் அறிஞர்களின் விளக்கமும்

'............ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்ற விலங்கை அவ்விடத்திலிருந்து விடுவித்துக் காப்பதற்கும் உயிர்ப்பிப்பதற்கும் துன்பம் ஓர் எச்சரிக்கைக் கருவியாகப் பணியாற்றுகின்றது. எரி கின்ற தீயின் அனுபவத்தைப் பெற்ற குழந்தை நெருப்பிற்கு விலகி நிற்கின்றது. ஆகவே, பெரிய தீமைகளுக்கு ஆளாகாமல் தன்னைத் தற்காத்துக்கொள்ள முடிகிறது. துன்பம் இல்லை எனில் நாம் தொடர்ந்து ஆபத்திலும் தீவிரமான தீமையிலும் அழிவிலும் சிக்கிக்கொள்ள நேரிடும். இத்தகைய தீமைகளுக்கு முன்னெச்சரிக்கையாக இருக்க அறியாதவர்களாவோம்.' என்று உயிரியல் அறிஞர் துன்பத்திற்கான விளக்கத்தைத் தருகின்றார்.

சச்சிதானந்த மூர்த்தி 'துன்பம், தொழில் ஆகிய இவைகள் இல்லாமல் வாழ்க்கையே இல்லை. அவைகளே மனிதனின் நிலையை உருவாக்கி அமைக்கின்றன'[9] என்று குறிப்பிடுகின்றார். 'மனிதன் கண்டிப்பாக நன்மை தீமை எனும் அனுபவ அறிவின் மூலம் எல்லாவகையிலும் சோதனையினூடே செல்லுதல் வேண்டும். நன்மையின் வாதஞ்சார்ந்த தர்க்கமாகத் தீமை மாற லாம். ஆனால் தீமை இயல்பாய் வெற்றிகொள்ளப்பட வேண் டும்'[10] எனக் கூறும் கருத்து நினைவுகூரத்தக்கது.

மற்றைய செயலாண்மைக் காரணிகளைவிட ஒருவரின் முன் வினையே துன்பத்திற்குக் காரணம்'[11] என்வும் 'உண்மையில் சம்சாரம் என்பதே துன்பம்தான்'[12] எனவும் கூறுவது இவண் எண்ணத்தக்கது. அறியாமையே எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம்'[13] எனவும், வேதங்களிலும் கூடப் 'பெரும்பான்மை

யும் துன்பம் ஒருவரின் சுயவினையைப் பொறுத்தமைகின்றது'[14] எனவும், 'உபநிடதங்களைப் பொறுத்தவரையில் அறியாமையே உண்மையியல்பின் மெய்ம்மைக்கு மூலகாரணமாயிருக்கின்றது'[15] எனவும் துன்பத்திற்கான காரணத்தைக் கற்பிக்கக் காணலாம். இ. லஷ்மணன் என்பவர் தம் நூலில் 'துக்கமனைத்திற்கும் காரணம் பற்று'[16] என்று வரையறுக்கின்றார்.

'ஆசைகளும் தேவைகளும் அதிகரிக்கத் துன்பமும் அதிகரிக்கின்றது'[17] எனவும், ''இன்பத்திற்கும் துன்பத்திற்கும் மூலமாக ஆசையும் தேவையும் விளங்கக் காணலாம்''[18] எனவும், '....... துன்பத்தைப் போக்க வேண்டுமென்றால் பந்தத்தை நீக்க வேண்டும்'[19] எனவும் விளக்கித் துன்பத்தைப் போக்குவதற்கான வழியைச் சுட்டுகின்றார் பரமஹம்ச யோகாவந்தா.

இதுகாறும் கண்டவற்றால் இந்து சமயத்தின்படி துன்பத்திற்குக் காரணம் முன்வினை, அறியாமை, ஆசை, தேவை முதலானவையாகும். துன்பததைத் துண்டிக்க வேண்டும்; பற்றை அறவே நீக்க வேண்டும்; தேவைகளைக் குறைக்க வேண்டும் என்பவையே துன்பம் போக்கும் வழிகளாகும்.

கிறித்தவ சமயத்தில் துன்பத்திற்கான காரணமும் அதற்கான தீர்வினையும் பின்வருமாறு குறிப்பிடக் காணலாம். 'கர்த்தரின் தூய்மையான கறைபடாத மனிதாபிமானம், மனிதநேயம் துன்பத்தில் நல்லொழுக்கத்தையும், முரண்பாட்டில் பக்குவத்தையும், சகிப்பில் மனத்திட்பத்தையும், பொறுமையில் உத்தமத்தையும் உண்டாக்கியது'[20] என்னும் கருத்து நல்லொழுக்கத்திற்கும் மனப்பக்குவத்திற்கும் மனத்திட்பமுறுதற்கும் உத்தமனாய் விளங்குதற்கும் துன்பம் தேவை என்பதை உணர்த்துகின்றது. இயேசுவின் வாழ்க்கையிலே துன்பம் தொடர்ந்தது போல் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் உண்டென்பதை இம்மேற்கோள் உணர்த்துகின்றது. அன்பும் இரக்கமும் உடைய கிறிஸ்து எல்லோருடைய பாவங்களுக்காய்த் தாம் ஒருவரே சிலுவை சுமந்து பாடனுபவித்தார். மரணத்தை வென்றார். யாவருக்கும் பாவத்திலிருந்து மீட்பு நல்கினார். அவரது இத்தகைய போலச் செய்தல் கிறித்தவர்களுக்குமுரியது. கிறிஸ்து துன்பத்திற்கு முன்னோடியாய் இருந்தது போலக் கிறித்தவர்களும் பின்பற்றுதல் தேவை. அதனால் கிறித்தவர்களுக்குத் துன்பம் வருதல் இயல்பு.

'நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்'[21] என்று விவிலியம் கூறுகிறது. 'துன்பத்தின் மூலம் இறைவன் மனிதனைப் பூரணப்படுத்துகின்றார்'[22] என்றும், 'கிறிஸ்துவுடன் பாடுகளைச் சகித்தால் அவரோடேகூட ஆளுகையும்செய்யலாம்'[23]

என்றும், 'துன்பத்தில் பொறுமை இன்றியமையாதது'[24] என்றும் 'துன்பம் அவசியம்; கொஞ்சகாலம் துக்கம் உண்டு'[25] என்றும் 'கர்த்தர் தன்னால் அன்பு கூறப்படுகிறவர்களை இரட்சிக்கின்றார்'[26] என்றும், 'நன்மைக்காகத் தீங்கனுபவிக்கும்போது இறுதியாக நீதியின் கிரீடம் கிடைக்கும்'[27] என்றும், 'நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருந்தாலும் கர்த்தர் அவற்றிலிருந்து அவனை விடுவிப்பார்'[28] என்றும் வருகின்ற விவிலிய வசனங்கள் துன்பத்திற்கான காரணத்தையும் அதன் தேவையையும் அதற்கான ஆறுதலையும், அதன் நோக்கத்தையும், அதனால் ஏற்படுகின்ற நன்மையையும், அதற்கான தீர்வினையும் விரிவாகக் கூறக் காணலாம்.

இந்து, கிறித்தவம் ஆகிய இவ்விரு சமயங்களும் துன்பம் ஏற்படுவதற்குச் சமாதானமாகப் பின்வருவனவற்றை கூறுவதாகக் கொள்ளலாம்.

அரிச்சந்திரன், யோபு ஆகியோரைப் பொறுத்தவரையிலும் துன்பம் அவ்விருவரின் வாழ்க்கையிலும் ஒரு மறைபொருளாகப் (மர்மமாக) பணியாற்றுகின்றது. அவ்விருவரின் அறிவிற்கும் அப்பாற்பட்டதாக அஃது இயங்குகின்றது. அவ்விருவரையும் உலகோர்க்கு அறிவித்திடவே கடவுள் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றார்.

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு'[29]

என்னும் குறளுக்கேற்பஅரிச்சந்திரனும் யோபுவும் துன்பமெனும் நெருப்பினில் புடமிட்ட பொன்போல் ஒளிவிடுகின்றார்கள். இவர்கள் இங்ஙனம் துன்புறுவதற்குக் காரணம், கடவுளின் மறைமுகமான மேலான நோக்கமே எனக்கொண்டு, வெளிப்படையாக மனிதனின் குறுக்கீடு எனக் கண்டு இவண் அமைதிவுறலாம்.

பாரத நாட்டின் தந்தை என அழைக்கப்படுகின்ற காந்தி, 'துன்பத்தின்போது முணுமுணுத்தல் கூடாது'[30] என்றும் 'துன்பத்தில் இன்புற வேண்டும்'[31] என்றும் அறிவுரை நல்குகின்றார். தேவைக்காகப் போராட வேண்டும்.

அரிச்சந்திரன், யோபு ஆகியோரின் புகழ் பரவச் செய்யவே துன்ப நெருப்பினில் புடமிடப்பெறுகிறார்கள் என்பதற்கு,

'சடைபட்டோங்கிய முடிமுனி தாதுசூழ் வினையால்
அடைபட் டுறுபாடு அனைத்தையும் கடந்தசாணை யினால்
கடைபட் டானபின் செழுமணி யென வொளி காட்டிக்
கொடை பட்டார் புகழ் கோமகன் விளங்கினன்'[32]

எனும் அரிச்சந்திரபுராண பாடலும்,

'ஆனாலும் நான் போகும் வழியை
அவர் அறிவார்;
அவர் என்னைச் சோதித்த பின்
நான் பொன்னாக விளங்குவேன்'[33]

என்னும் யோபுடைய சரித்திர வசனமும் தக்க சான்றுகள்.

மேற்காட்டிய சான்றுகளின்படி அரிச்சந்திரனும் யோபுவும் எத்தகைய துன்பம் சுடச்சுட வருத்துகின்ற காலையும் சங்குச் சுட்டாலும் வெண்மை தரும் என்பது போல் விளங்குகின்றார்கள். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பது போல் இவ்விரு கதைத் தலைவர்களும் வறுமையும் சிறுமையும் அடைகின்ற போதும் அறம் குன்றாத குண கோபுரங்களாய் விளங்கு கின்றார்கள்.

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே'[34]
எனும் மூதுரை மொழிக்கும்,

'உபத்திரவத்திலேயும் மேன்மை பாராட்டுகிறோம்'[35] எனும் விவிலிய வாக்கிற்கும் பொருத்தமானவர்கள். மேலும், இவர்கள்

'இன்பம் விழையான் இடும்பை இயக்கென்பான்
துன்பம் உறுதல் இவன்'[36]

எனும் திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றார்கள்.

அறநெறிக்கு மாறாத ஒரு குற்றமும் செய்யாத நீதிமான் கள் அல்லது நல்லவர்கள் ஏன் துன்புறவேண்டும்? தீயவர்கள் (துன்மார்க்கன்) ஏன் செழித்திருக்க வேண்டும் என்று யோபு டைய சரித்திரத்தில் எழுப்பப்படுகின்ற இவ்வினாவை அரிச்சந்தி ரனுக்கும் இணைத்துப் பார்க்கலாம். இவ்வினா அன்றும் இன் றும் என்றும் கேட்கப்படுகின்ற ஒரு வினாவாக நிலைத்திருக்கின் றது. இவ்வினாவிற்கு விடைகளாகப் பின்வருவன அமைகின்றன.

1. கல்லுக்குள் ஈரம் என்பது போல் இறை இரகசியமாகிய இன்பம் துன்பத்திற்குள் மறைந்துள்ளது.

2. புயலுக்குப் பின் அமைதி என்றாற் போல் துன்பத்திற் குப்பின் இன்பம் கலந்திருக்கின்றது.

3. இவ்வுலகமாகிய துன்பம் கலந்த நிலைமை அனுபவித்த பிறகு அவ்வுலகமாகிய துன்பம் கலவா இன்பநிலை கிடைக்கின்றது.

4. எனவே துன்பத்தைப் பொறுமையுடன் சகிக்க வேண் டும்.

5. வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப துன்பத்தில் இன்புற வேண்டும்.

6. மனிதன் குறையுடையவனாதலால் இறைவனை எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கு உரிமையில்லை. அதனால் அவனுக்குப் பலனும் இல்லை. தன் அறியாமையை உணர்ந்து தன்னை இறைவனிடத்து ஒப்புக் கொடுத்தலே நன்று.

7. எல்லாம் நன்மைக்கே என்று கடவுள் வழியில் தன்னை விட்டுவிட்டு நல்லவழியில் ஒழுகுதலே சிறந்த வழி.

8. பொறுமையுடன் இறைச்சித்தத்திற்கும் காத்திருத்தல் நலம்.

இதுகாறும் அரிச்சந்திரனுக்கும் யோபுவுக்கும் நேரிட்டத் துன்பத்தின் மர்மத்திற்குக் கண்ட அதே தீர்வுகள் நடைமுறை வாழ்க்கையில் உள்ளவர்க்குப் பொருந்தும்.

குறிப்புகள்

1. "...And what is universal and most necessary for man is of course, religion to him. Hence, religion necessarily consists in the parmanent removal of pain and the realization of Bliss of God".

—*Paramahamsa Yogananda*, The Science of Religion (P.14)

2. 'Fire tries iron, and temptation tries a justman''.

—*Thomas A. Kempis*, Encyclopaedia of Religion Quotations, (PP. 437-438)

3. "As a bridge is proved by the weight and the gold by the fire) so man is proved by temptation.''

—*W. Graham Scroggie*, Tested by Temptation (P.12)

4. " .. Temptation is not designed to make us fall. Temptation is designed to make us stronger and better men and women. Temptation is not desined to make us sinners. It is designed to make us good... So a man has to be tested before God can use him greatly in his service'.,

—*William Barclay*, The Gospel of Mathew (Vol. I Chapters I to X) (PP. 55-56)

5. "...Every conflict issued in conquest; every battle brought blessing, and every temptation was turned to triumph...Attack follows attestation, and conflict proceeds service".

—*W. Graham Scroggie*, Tested by Temptation, (p. 13)

6. திருமுருக கிருபானந்த வாரியார், **பன்னிரு திருமுறைத் திரட்டு** (தொ. ஆ) (v. 290)

7. விவிலியம்: பழைய ஏற்பாடு-ஆதியாகமம் 22:1

8. "Biologically for instance, pain serves the function of warning an animal of danger and stimulating it to avoidance. The burnt child shuns the fire and so is protected from greate harm. Without pain we should be continually in danger of serious injury and even of destruction against which we had no learned to take precautions."

—*Errol. E. Harris*, Revelation Through Reason, (p. 106

9. "There is no life without pain and labour, for they constitute the human condition."

—*K. Satchidananda Murthy*, The Realm of Between (Lectures on the Philosophy of Religion), (p.4)

10. "...Man must go through the testing of all possibilities, he must pass through the experience of the knowledge of good and evil, and evil itself may become dialectic moment of good. And evil must be overcome immanently that is to say".

—*Nicolas Berdyaw*, The Divine and the Human, (p. 91)

11. "Suffering is attributed to one's own past karma rather than to any other agency".

— *Kedar Nath Tiwari*, Comparative Religion (p. 23).

12. "As a matter of fact, Samsara itself is suffering"

—*Ibid*, (p. 23).

13. "Thus ignorance is the root cause of all suffering".

—*Ibid*, (p. 24)

14. "Hence, suffering, for the most part is attributed one's own karma in the Vedas too".

—*Ibid*, (p. 24)

15. "According to the Upanisads, the root cause of suffering is ignorance regarding the true nature of reality".

—*Ibid*, (p. 24)

16. கி. லக்ஷ்மணன், இந்தியத் தத்துவ ஞானம் (v. 68).

17. "increase desires and wants, and pain is also increase'.

— *Paramahamsa Yogananda*, The Science of Religion, (p.28).

18. "Pleasure and pain having their origin in desires and want...".

—*Ibid*, (p. 38).

19. "...So what we should do is to kill attachment by doing away with the sense of identification only".

Ibid, (p. 36).

20. "...that out Lord's pure and stainless humanity 'be disciplined by sorrow' matured by conflict, strengthened by endurance and perfected by patience. This discipline extended by ever the whole period of His life".

—*W. Graham Scroggie*, Tested by Temptation, (p. 19).

21, விவிலியம் புதிய ஏற்பாடு-மத்தேயு 5:10

22. மேற்படி, எபிரேயர் 2:10

23. மேற்படி, 2 தீமோத்தேயு 2:12

24. மேற்படி, ரோமர் 12:12

25. மேற்படி, 1 பேதுரு 1:6

26. மேற்படி, எபிரேயர் 12:6-7

27. மேற்படி, 2 தீமோத்தேயு 4:5,8.

28. மேற்படி பழைய ஏற்பாடு—சங்கீதம் 34:19

29. குறள் 267.

30. "We may not Grumble...".

—*M.K. Gandhi*, GOD IS TRUTH, (p. 88)

31. "...rejoice in suffering"

—*Ibid*, (87).

32. அரிச்சந்திர புராணம் மீட்சிகாண்டம் : 2

33. யோபுடைய சரித்திரம் 23:10

34. மூதுரை, 4.

35. விவிலியம் புதிய ஏற்பாடு—ரோமர் 5:4

36. குறள் 628.

9. கிறித்தவ நாடகங்கள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகள்

இலக்கியங்கள் மனிதனைப் பிரதிபலிப்பனவாகவும், மனித உணர்வுகளைப் புலப்படுத்துவனவாகவும், அவன் வாழும் சமுதாயத்தை அடியொற்றியனவாகவுமே ஆக்கப்பட்டு வருகின்றன. அது போலவே கலையும் சமுதாயத்தைச் சார்ந்தே வளர்ந்தும் மாறியும் பரிணாமம் அடைவதாக உள்ளது. நாடகம் மிகச் சக்தி வாய்ந்ததோர் சமுதாயத் தொடர்புக் கருவி (Social Communicative instrument) யாகும். இது சமுதாயத்தைப் பிரதிபலிப்பதோடு சமுதாயத்தை வளப்படுத்தும் பல செய்திகளைக் கூறுவதாகவும் பங்குப்பணியாற்றுகிறது. சமயம் தழுவிய நாடகங்கள் பொதுவாக, சமுதாய உணர்வுகளையும் ஒழுக்க நெறிகளையும், கடவுளர் புகழையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. கிறித்தவ நாடகங்கள் வெளிப்படுத்தும் சமுதாய உணர்வுகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கிறித்தவச் சமயம்

இசுரவேலரின் பன்னிரு கிளைகளை உருவாக்கியவர் இசுரவேல் எனப்படும் யாக்கோபு. இவர்தம் நான்காம் குமாரர் யூதா. யூதாவின் பரம்பரையினர் யூதர் எனப்படுவர். யூதக் குலத்தில் தோன்றியவர் இயேசு கிறித்து. இயேசு கிறித்துவினால் யூத சமயத்தின் நன்னெறிக் கருத்துக்களைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட சமயமே கிறித்தவச் சமயம்.

இயேசு கிறித்து 'எல்லோரும் எல்லாம் பெற வேண்டும்; பணக்கார வர்க்கம் தம் உடமைகள் அனைத்தையும் ஏழை வர்க்கத்தோடு பகிர்ந்து கொள்ளவேண்டும்,[1] என்ற கொள்கையுடையவர். அவர் ஏழைப் பிரிவினரின் கபடமற்ற அன்பிற்கு ஆளானதன் பொருட்டுப்பணக்கார யூதர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டார். தாம் படும் துன்பங்களின் இறுதிநிலையாகச் சிலுவையில் அறைந்து கொல்லப்படுவேன் என்றும், அவ்வாறு சிலுவையில் அறைந்து இறக்க நேரிடினும், இறந்த மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்ப்பேன் என்றும் (மத். 16:21) தம் சீடர்களுக்குக் கூறினார். தாம் கூறியவாறே சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு, இறந்த மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து தம் சீடர்களுக்குக் காட்சி கொடுத்தார். அவர்களை நோக்கி, ''நீங்கள்

புறப்பட்டுப் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள், இதோ! நான் உலகு முடிவு வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (மத். 28:19-20) என்று கூறியதோடு, ''உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்'' (மத்.16:15) என்றும் கட்டளையிட்டார்.

இயேசு கிறித்துவின் கட்டளையை ஏற்று அவரின் சீடர்கள் உலகின் பல நாடுகளுக்கும் சென்று அவரின் நற்செய்தியை அறிவித்து அவருக்குச் சாட்சியம் கூறினர்.

அந்த வகையில், இயேசு கிறித்துவின் நற்செய்தியை அறிவிக்க, கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியா வந்தவர் புனித தோமையர் ஆவார். இவரே தமிழகத்தில் முதல் திருச்சபையை நிறுவியவர் ஆவார்.

புனித தோமையாரைத் தொடர்ந்து மேனாட்டுக் கிறித்தவப் பாதிரியார் பலர் தமிழகம் வந்து கிறித்தவத்தைப் பரப்பிடும் பணியில் ஈடுபட்டனர். அவ்வாறு சமயப்பணியாற்றிட வந்த மேனாட்டார் அனைவரும் சமூக இடவினை[2] யின் விளைவாக தமிழக மக்களோடு கலந்து பழகியதுடன், மக்களின் அன்பைப் பெறுவதற்கு வழி அவர்கள் மொழியைக் கற்று அவர்களோடு கலந்து வாழ்தலே என்பதை நன்கறிநது, தமிழ் மொழியைக் கற்று, அம்மொழி வாயிலாகத் தங்கள் சமய கருத்துக்களைப் பரப்பினர்.

இவ்வாறு தமது சமயப் பணிக்காக அவர்கள் தமிழ் கற்றமை, தமிழ்மொழி-இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தது.

தமிழ்மொழி-இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ள கிறித்தவர்களின் இலக்கியப் பணியினை மேலோட்டமாக வகைப்படுத்தும் சூ. இன்னாசி, அதனை 16ஆக வகைப்படுத்துவார்[3] அவை, 1. அறிமுகப்பணி, 2. அச்சுப்பணி, 3. தொகுப்புப்பணி 4. படைப்புப்பணி 5. மொழிபெயர்ப்புப்பணி 6. சொல்லாய்வுப்பணி, 7. நூல்வெளியீட்டுப்பணி, 8. இதழ் வெளியீட்டுப் பணி, 9. மாநாட்டுப்பணி, 10. கருத்தரங்கப்பணி, 11. பயிற்சிப்பணி, 12. பொறுப்புப்பணி, 13. ஆய்வு நெறிப்பணி, 14. பல்கலைக்கழகப் பணி, 15. ஆய்வுப்பணி, 16. அறக்கட்டளைப்பணி முதலியனவாகும்.

கிறித்தவமும் நாடகமும்

கிறித்தவர்களின் இத்தைய பெரும்பணிகளில் ஒன்றாக நாடகப் படைப்புப் பணியும் விளக்கங் காண முடிகிறது.

வீரமாமுனிவர் காலத்திலேயே தோற்றம் கொண்டதாகச் சொல்லப்பட்டாலும்[4], ஆண்டிறீக் அடிகளார் காலத்திலே தோற்றம் கொண்டு, தமிழ் நாடக இனங்களாகக் குறிக்கப்படும் பள்ளு, நொண்டி, குறவஞ்சி, கீர்த்தனை, சவிட்டு நாடகம், வாசகப்பா, மேடை, உரைநடை, நாடகம் முதலானவற்றிலெல்லாம் நாடகங்களைப் பெற்றுத் தமிழ்நாடக வளர்ச்சி வரலாற்றில் தனியிடம் பெறத்தக்க பெருமை கிறித்தவத் தமிழ் நாடகங்களுக்கு உண்டு.

கிறித்தவ நாடகமும் சமுதாயமும்

சமுதாயம் என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி மக்கள் திரள் என்று பொருள் தருகிறது. 'ஒரு பொதுவான வாழ்க்கையின் அடிப்படை நிலைகளைப் பங்கிட்டு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்ந்து வாழ்கின்ற மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படுகிறது.[5] எனலாம். எனினும் சமுதாயம் எனும் பொழுது அந்த அமைப்பு வெளிப்படுத்துகின்ற வாழ்க்கையைப் பற்றியும் நினைக்க வேண்டும்'[6] என்பர்.

இந்நிலையில் இச்சமுதாயம் வெளிப்படுத்துகின்ற சமுதாய உணர்வு என்பது மூன்று உணர்வுகளை உள்ளடக்கியிருக்கிறது. என மெக் ஈவர் குறிப்பிடுகிறார்.[7] அவை,

1. நாம் என்னும் உணர்வு
2. சார்பு உணர்வு
3. பங்கு உணர்வு

என்பனவாகும்.

நாம் என்னும் உணர்வு

இந்தச் சமுதாயத்தில் வாழ்கின்ற நாம் அனைவரும் ஒன்று என்னும் உணர்வு நாம் என்னும் உணர்வாகும். இந்த உணர்வு ஒற்றுமையை வளர்ப்பதுடன் ஒன்றாகக் கூடி வாழவும் வழி செய்கிறது.

சார்பு உணர்வு

நம்முடைய தேவைகளை நிறைவேற்றும் சமுதாயத்தோடு சார்ந்து,இணைந்து வாழவேண்டும் என்னும் உணர்வு சார்பு உணர்வாகும்.

பங்கு உணர்வு

இந்தச் சமுதாயம் நமக்குரியது என்ற உணர்வே பங்கு உணர்வாகும்.

இந்த மூன்று உணர்வுகளில் முதல் இரண்டு உணர்வுகளைப் பொறுத்தவரையில் சமய நாடகங்களாக அமைந்துள்ள கிறித்தவ நாடகங்கள் பொதுவான நிலையில் வெளிப்படுத்தினும் மூன்றாவதான பங்கு உணர்வு என்பதனை மிகுதியாக வெளிப்படுத்தக் காண முடிகிறது. இது சமுதாயத்தோடு கிறித்தவ நாடகங்கள் ஏற்படுத்திக்கொண்ட நெருக்கத்தைக் காட்டுகிறது. சமுதாயம் நமக்குரியது என்கிற உணர்வு ஏற்படும்போதே அந்தச் சமுதாயம் வளர்ச்சிப் பாதையில் முன்னேற வேண்டும்; நாம் வாழும் சமுதாயத்தில் உள்ள ஒழுக்கக் கேடுகள் களையப்பட வேண்டும்; சமுதாயத்தில் உள்ள பிற்போக்குத் தன்மைகள் மாறவேண்டும் என்ற உணர்வும் ஏற்பட்டாக வேண்டும். அந்த வகையில் இந்த உணர்வுகளைக் கிறித்தவ நாடகங்கள் வெளிப்படுத்தக் காணமுடிகிறது. இதனாலேயே 'நாடகம்' என்பதற்குப் பொருள் கூறும்பொழுது நாடு+அகம்=நாடகம்; அவ்தாவது, ஒரு நாட்டின் நிலையைத் தன்னுள் பிரதிபலித்துக் காட்டுவது நாடகம்[8] என்பர். இங்கு இவ்விளக்கத்தையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தமிழில் கிறித்தவ நாடகங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் சமுதாய உணர்வுக் கூறுகள் நாடகங்களில் பயின்று வந்துள்ள நிலை பொதுவானதாகவே உள்ளது எனலாம். எனவே முக்கியமான சமுதாய உணர்வு நிலைகளை எடுத்துக் காட்டும் சில நாடகங்களைக் கொண்டே அறிய இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமுதாயத்தின் இரண்டு வகையினர்

பொதுவான நிலையில் இன்றையச் சமுதாயத்தில் இரண்டு வகையினரைக் காண முடிகிறது. ஒருவகையினர் உழைக்காமல் உண்டு வசதியாக வாழ்கின்றனர். மற்றொரு வகையினர் கடுமையாக உழைத்தும் அன்றாடம்காய்ச்சியாகத் தமது வாழ்வைக்

நடத்திக் கொண்டுள்ளனர். சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் தோன்றிய இந்த இரண்டு வகையினருக்கு இடையேயுள்ள முரண்பாட்டினைச் ''சுமை தாங்கி'' என்னும் நாடகம் படம் பிடித்துக் காட்டுகிறது.

தர்மராஜ் ஊரில் மிகப்பெரிய பணக்காரன்; வட்டிக்கு வட்டி வாங்கி ஏழைகளின் வயிற்றில் அடிப்பவன். தன் பேச்சுக்கு எதிராக எவரும் பேசக்கூடாது என்ற நிலையில் எல்லோரையும் அடக்கி ஆள்பவன். பிறர் வாழப் பொறுக்காதவன். இவனிடம் வாங்கிய கடனுக்காகத் தம் நிலங்களை இழந்து வறியவரான ஏழைகள் பலர். இந்த நிலையில் அவ்வூரின் புதிய பங்குத் தந்தையாக சுவாமி அன்புநாதன் பொறுப்பேற்று, தர்மராஜன் பிடியில் சிக்கித் தவிக்கும் ஏழைகளின் நலம் கருதி உழைக்கிறார். அவர்களுக்குப் பொருள் உதவி செய்து நல்வாழ்வு வாழ வழி செய்கிறார். இவ்வாறு சுவாமி அன்புநாதன் ஏழைகளின் வாழ்வு வளம்பெற உதவுவதனைக் கண்டு பொறுக்காத தர்மராஜ், ஏழைகள் தம் பிடியிலிருந்து விடுபடுவதைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் சுவாமி அன்புநாதன் மீது வீண்பழி சுமத்துவதோடு நில்லாது அவ்வூரிலிருந்து மாற்றிடவும் சதி செய்கிறான்; வெற்றியும் பெறுகிறான்.

இங்கு உழைக்கும் வகையினர் உயரக் கூடாது என்பதில் உழைக்காத வகையினர் காட்டும் ஆர்வம் வெளிப்படுவதுடன், அதற்காக யாரையும் பழிவாங்கத் தயாராக இருக்கும் அவ்வகையினரின் குணமும் வெளிப்படக் காணமுடிகிறது.

சமுதாயப் போலிகள்

தம் வாழ்வை வளம் மிகுந்ததாக ஆக்கிக் கொள்வதற்குக் கள்ளங்கபடமற்ற அப்பாவி மக்களை ஏமாற்றித் தம் வலைக்குள் சிக்கவைத்துக் கொள்ளும் போலி மனிதர்களை இச்சமுதாயத்தில் காணமுடிகிறது. இத்தகைய சமுதாயப் போலிகளைக் கிறித்தவ நாடகங்கள் அடையாளம் காட்டுகின்றன.

கதிர்வேல், ஊரில் பெரிய மனிதர்-தலைவர். இவர் அவ்வூரின் சேரிப் பகுதியில் நடைபெறும் 'மகாத்மா காந்தியடிகள்' பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு தலைமை ஏற்று உரை ஆற்றுகிறார். அப்போது,

'சேரி என்று குறிப்பிடாதீர்கள். இறைவனின் மக்கள் வாழும் இடமாகக் குறிப்பிட்டவர் காந்தியடிகள். உங்கள் உயிரில்,

உடலில் ஒன்றானவன் நான். சாதிப்பாகுபாட்டிற்குச் சாவு மணி அடிக்க வேண்டும் என்பவன் நான்'[9]

என்று குறிப்பிடுகிறார். ஆனால், சேரியில் வாழும் செல்வ முத்து, ஒரு பையில் பழம், பூ போன்றவற்றைப் போட்டு, அதனைத் தலைவர் கதிர்வேலுக்கு அன்பளிப்பாகக் கதிர்வேலின் கணக்குப்பிள்ளையிடம் கொடுத்தனுப்ப, கணக்குப்பிள்ளை அதனைக் கதிர்வேலுவிடம் கொடுக்க, அப்போது கதிர்வேல்,

> 'அந்தப் பையை வெளியே கொண்டு போய் வையுய்யா சேரிப்பயல் கொடுத்தானாம்..... அதை இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டுறானாம்'[10]

என்று கூறுகிறார், இதேபோல்,

> 'நாடு முன்னேற நல்லவழிகளில் உழைக்க வேண்டும். கள்ளச் சாராயம், கறுப்புப்பணம், கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்கள் இந்த நாட்டைவிட்டு ஒழிய வேண்டும்'[11]

என்று சமூக விரோதச் செயல்கள் ஒழிய வேண்டும் என்று கூறியவர், கையாட்களை வைத்துக் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளக் கடத்தலில் ஈடுபடுதல், கறுப்புப்பணம் சேர்த்தல் முதலான சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்.

இங்கு நம்மோடு வாழும் அப்பாவிகளை ஏமாற்றுவதுடன், நாம் வாழும் சமுதாயத்தின் நியதிகளை மீறிடும் போலித் தன்மைகளையும் காணமுடிகிறது.

சாதி ஒழிப்பு

சமுதாயத்தில் சாதி எனப்படுவது வரையறைகளை உருவாக்கும் முக்கியக் கூறாகக் காணப்படுகிறது. இச் சாதிப்பாகுபாடு, எல்லா நிலையிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பது கசப்பான உண்மையாகும். இவ்வகையில் ஒருசாராரைத் தீண்டத்தகாதவர்கள் என்று கூறி ஒதுக்கிடும் சமுதாயக் கொடுமை இன்னும் மாறியபாடில்லை. இந்நிலை மாற வேண்டும் என்ற நோக்கு, கிறித்தவத் தமிழ் நாடகங்களில் காணப்படுகிறது.

சாதிய அடிமை முறைகளைக் கடந்து, எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை என்ற உயரிய நோக்கில், சகோதர சமத்துவ அடிப்படையில் மானிட சமூகத்தை உய்விக்கத்

தோன்றிய சமயம் கிறித்தவச் சமயம். ஆனால் கிறித்தவர்களே சாதியம் என்ற குறுகிய வட்டத்திற்குள் நின்றுகொண்டு சேரி என்றாலே ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற இடம் என்றும், அவர்கள் தீண்டத் தகாதவர்கள் என்றும் கருதுகின்ற கொடுமையினைக் காண்கிறார் தி. தயானந்தன் பிரான்சிஸ். அவர் 'ஏற்றுக்கொள்கிறேன்' என்னும் நாடகத்தில் நாடக மாந்தரான போதகர் எழிலனைச் சேரியின் சிறு குடிசையில் தங்கி வாழும் சாதிக்கு அப்பாற்பட்ட மனிதராகப் படைத்திருப்பது சாதியத்தை வெல்ல வேண்டும் என்னும் அவர்தம் விருப்பத்தின் வெளிப்பாடாக அமைகிறது எனலாம்.

ஏழைகளுக்கு உதவுதல்

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் அச்சமுதாயத்தில் வாழும் ஏழைகளின் வாழ்வு உயரவேண்டும். இந்நோக்கில் கிறித்தவச் சமயத்தினர் தம்மால் இயன்ற அளவு ஏழைகளின் வாழ்வு உய்ய உதவும் தன்மையினைக் கிறித்தவத் தமிழ் நாடகங்களில் காணமுடிகிறது.

நோயால் வருந்தும் ஏழைகளுக்கு இலவச மருத்துவ உதவியும் படிப்பறிவற்ற ஏழை முதியோருக்கு இரவு நேரப் பள்ளி அமைத்து முதியோர் கல்வியும் கிடைத்திட ஏற்பாடு செய்யும் 'மாண்ட்போர்ட்' என்னும் திருமறைத் தொண்டரை, சகோ. கேமிலஸின் 'இளைஞரின் துணைவன் மாண்ட்போர்ட்' எனும் நாடகத்தில் காணலாம்.

பெற்றோரை இழந்து, சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட ஜார்ஜ் என்னும் ஏழைச் சிறுவனை மாவட்ட ஆட்சித் தலைவராகும் அளவுக்குப் படிக்கவைத்து உதவி செய்யும் ஆரோக்கியசாமி என்பவரை அருள். பால்ராஜின் 'சமுதாய மலர்கள்' என்னும் தொகுதியில் அடங்கும் 'மனிதனும் தெய்வமாகிறான்' என்னும் நாடகத்தில் காணலாம்.

வீடு இல்லாத ஏழைகள் வீடு கட்டவும், நிலம் உள்ள ஏழைகள் கிணறு வெட்டவும், வாழ வழியின்றித் தவிக்கும் ஏழைகள் சுயமாகத் தொழில் செய்து வாழ்ந்திடவும் உதவி செய்யும் சுவாமி அன்புநாதன் என்னும் திருமறைத் தொண்டரை சகோ. ஜோசப் செல்வராஜின் 'சுமைதாங்கி' என்னும் நாடகத்தில் காணலாம்.

இங்கு ஏழைகளுக்கு உதவ வேண்டும்; அதன்மூலம் அவர்களின் சமூக நிலை உயர வேண்டும் என்ற உயரிய நோக்கு வெளிப்படக் காணமுடிகிறது.

திருமறைப் பணி செய்வோர் சமயத்திற்குத் தொண்டு செய்வதோடு நில்லாது சமுதாயப் பணியும் புரிந்திட வேண்டும். அப்போதுதான் சமுதாய மறுமலர்ச்சியினை ஏற்படுத்த முடியும் என்பதனை, தி. தயானந்தன் பிரான்ஸிசின் 'ஏற்றுக்கொள்கிறேன்' என்னும் நாடகத்தின் வழி அறியலாம்.

போதகராக இருப்போர் இயேசுவின் நற்செய்தியை அறிவித்தலே தமது பணி என்று கருதி இருந்திடாமல் சமுதாயப் போராட்டங்களிலும் ஈடுபட்டு நீதிக்காகப் பேராட வேண்டும் என்பதனைப் போதகர் எழிலன் வழியே, ''இனியும் சமுதாய உணர்வின்றிப் பொறுப்பற்றவர்களாய் நாம் வாழ முடியாது. வாழக் கூடாது. ஒதுங்கி வாழ்ந்ததும், பதுங்கி ஒளிந்ததும் , பார்வையாளர்களாய் இருந்து வந்ததும் போதும். இனி நாம் நேரடியாகச் சமுதாயப் போராட்டங்களில் ஈடுபட்டு மக்கள் நலனுக்காகப் போராட வேண்டும்''[12]

என்றும்,

'எளியவர் நலனை எண்ணி உழைத்திட வேண்டும்'[13]

என்றும் கூறுவது ஆசிரியரின் சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைகிறது.

வரதட்சணைக்கொடுமையை எதிர்த்தல்

ஒரு நாடு தன்னகத்துப் பெண்களை நடத்தும் முறையை அந்நாட்டின் முன்னேற்றத்தைக்கண்டறியக் கூடிய தெர்மாமீட்டர்[14] என்பார் சுவாமி விவேகானந்தர். இஃதை அறியாது பெண்களை அடிமைப்படுத்துவதை இன்றும் சமுதாயத்தில் காண முடிகிறது. இதற்குக் காரணம் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருடன்' என்று கற்பிக்கப்பட்டுள்ள மரபு வேலிக்குள் பெண்கள் அடைபட்டுக் கிடப்பதே ஆகும். அம்மரபினை மீறிய சுமங்கலி என்னும் பெண்ணை வ. ஆசீர்வாதத்தின் 'சீதனப் போர்' என்னும் நாடகத்தில் காணமுடிகிறது. 'ஒரு பொண்ணு அதிகமாகப் பணமும் பொருளும் கொண்டுவந்தால்தான் நமக்குப் பெருமை, நம்ம மானமும் மரியாதையும் மதிக்கப்படும்'

என்று நினைக்கின்ற மாமியார், ஒரு குடும்பப் பெண் மானத்தோடும் மதிப்போடும் வந்து இல்லாளுக்குரிய நற்பண்புகளோடு வாழ்ந்தால்தான் பிறந்தகத்துக்கும், புகுந்தகத்துக்கும் பெருமை என நினைக்கின்ற மாமனார், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருடன் எனப் பணிந்திருக்கும் மருமகள், தொடக்கத்தில் மனைவிமீது அன்பு செலுத்தி அரவணைத்துப், பின்பு தாய்ச்சொல் கேட்டு மனைவியை வெறுத்து வாழும் கணவன், தன் மகள் வாழ்வு சிறக்க வேண்டும் என்பதற்காக மகள் வீட்டார் கேட்கும் சீதனப் பொருட்கள் அனைத்தையும் கொடுக்கும் மருமகளின் அப்பா, இவர்களுக்கு இடையே நிகழும் வரதட்சணைப் போராட்டமே இந்நாடகம்.

தன் மாமியார் பங்கஜம் கேட்கும் சீதனப் பொருட்கள் அனைத்தையும் தன் அப்பா சீராளனிடமிருந்து பெற்றுக் கொடுக்கிறாள் சுமங்கலி. அவ்வாறு கொடுத்தும் திருப்தி அடையாத பங்கஜமும், கணவன் சந்திரனும் சுமங்கலியைக் கொடுமைப் படுத்த, கொடுமையினைப் பொறுத்துப் பார்த்துப் பொறுமை யிழந்த சுமங்கலி,

''அன்புக்கும், பிரமாணிக்கத்துக்கு அடையாளமாகத் திகழ வேண்டிய இந்த மாங்கல்யத்தைப் புனிதமென்று சொல்லி இனி மேலும் என்னை முட்டாளாக்க நான் விரும்பவில்லை....எனக்கு நல்வாழ்வு கொடுக்காத எதுவும் எனக்குத் தேவையில்லை''[15] என்று கூறித் தனது கழுத்தில் தொங்கிய தாலியை அறுத்து வீசுகிறாள். இங்குச் சுமங்கலி' சமுதாயப் புரட்சியின் சின்னமாகப் படைக்கப்பட்டுள்ளாள் எனலாம்.

இங்கு வியர்க்கவைக்கும் மற்றொரு செய்தி, தனது மருமகள் சீதனப் பொருள்கள் கொண்டுவரவேண்டும் என்று கொடுமைப் படுத்தும் பங்கஜம் தன் மகளுக்குச் சீதனப் பொருட்கள் கொடுக்க மறுப்பதாகும்.

முடிவுரை

சமுதாய உணர்வுகள் பலநிலைகளில் அமைந்து நிலைபெற்றிருப்பினும் கிறித்தவ நாடகங்கள் சமுதாயத்தில், இழையோடிக்

கொண்டிருக்கும் குறைபாடுகளைக் களைய முற்படுபவைகளாகவே உள்ளன. சமய வளர்ச்சிக்கும் இத்தகைய அணுகுமுறை சாதகமாக அமையலாமென்ற காரணமும் இவ்வகை முயற்சிக்குத் தூண்டுகோலாக இருந்திருக்கலாம். சமத்துவம், சகோதரத்துவம் போன்ற உறவு நிலைகளும் இவ்வகை நாடகங்களில் இடம் பெற்று வருகின்றன. நாடகம் மக்களைத் திருத்தி நல்வழிப் படுத்தும் மிகச்சிறந்த சாதனம் என்பதை உணர்ந்து மக்களிடையே உள்ள குறைகளை நயமாகச் சுட்டிக்காட்டித் திருத்த முற்படும் கிறித்தவ நாடகங்கள் சமுதாய நிலையில் குறிப்பிடத்தக்க பங்குப்பணியாற்றி வருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. வில்டியூரெண்ட்; உலக மதங்கள்—ஒரு தத்துவப் பார்வை வாசுகி பெரியார் தாசன் (பொ.பெ), (சென்னை, 1986), ப.87.

2. ஒருவன் மற்றவர்களுடன் தொடர்புகொண்டு உறவாடுவதும், அதனால் மற்றவர்கள் அவனுடன் உறவாடுதலும் சமூக இடவினை எனப்படும்.

3. சூ. இன்னாசி, கிறித்தவ இலக்கியச் சிந்தனைகள், (சென்னை,-1984), ப. 5—6,
4. மேற்படி, ப. 43

5. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு, (தஞ்சாவூர் 1788), ப. 471.

6. மேற்படி, ப. 471

7. மேற்படி ப. 470

8. ப. நீலகண்டன், நாடகமேடை (மறை, 1981) 94

9. அருள். பால்ராஜ் சமுதாய மலர்கள் (புனல்பாசல், 1986) ப. 4

10. மேற்படி, ப. 7

11. மேற்படி, ப. 7

12. இ. தயானந்தன் பிரான்சிஸ், 'ஏற்றுக் கொள்கிறேன்' கண்கள் திறக்கின்றன, (சென்னை, 1979) ப. 76

13. மேற்படி, ப. 77

14. மு. சரோஜா, கலைஞர் மு. கருணாநிதியின் இலக்கியங்கள்—ஓர் ஆய்வு, பி.எச்.டி. ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், (சென்னை, 1980), ப. 241,

15. வ. ஆசீர்வாதம், சீதனப்போர் (புதுக்கடை, 1984), ப 112.

10. மலையாளச் சமய இலக்கியங்கள் காட்டும் சமுதாய உணர்வுகள்

ஞா. கன்னிமரியம்மாள்

'கவின் மலையாளம்' என மனோன்மணிய ஆசிரியரால் பாராட்டப்பெறும் திராவிடக்குல மொழிகளுள் ஒன்றான மலையாள மொழியில் கவிதை, உரைநடை, சிறுகதை, புதினம் எனப் பல்வகைச் சமய இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துகொண்டே இருக்கின்றன. அவ்வகைகளுள் ஒன்றான புதின இலக்கியங்களில் **'கிறிஸ்துவின் தறச்ச குரிசு'** என்னும் நூலே இவண் ஆய்வுக் கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நூற்று நாற்பத்தாறு பக்கங்களைக் கொண்டு பி.கெ.எம். நூலகத்தாரால் 1957இல் வெளியிடப்பட்டுள்ள இப்புதினத்தை ஆக்கியோன் **வல்லச்சிற மாதவன்** என்னும் செய்தியேயன்றி நூலாசிரியரைப் பற்றிய பிற செய்திகள் எதுவும் நூலினுள் காணப்படவில்லை.

சமயம்

சமையம் என்பது பக்குவமான கொள்கைகளின் திரட்சிக்கு ஆகுபெயராக அமைந்த பெயராகும். பழைய மக்கள் தத்தம் அறிவு நிலைக்கு ஏற்றவாறு மதக் கொள்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். நாகரிகமும் ஒரு தலைவனுக்கு அடங்கிய வாழ்க்கை முறையும் உண்டான பிற்காலத்தில் சான்றோர் அச்சமுதாய மக்களின் மதத் தொடர்பான கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒரு நெறிப்படுத்தியிருக்கலாம். இங்ஙனம் சான்றோரால் ஒரு நெறிப்படுத்தப்பட்டதே பக்குவப்பட்டதே சமைக்கப்பட்டதே சமையம் எனப்பட்டது என்று கருதுதல் பொருத்தமாகும் என்கிறார். மா. இராசமாணிக்கனார் (தமிழ் அமுதம்- டாக்டர் மா. இராசமாணிக்கனார் பக். 122, 123).

புதினத்தின் இலக்கணம்

நம் வாழ்க்கையை அவ்வாறே எடுத்துக் காட்டுவதாகக் கதை அமைய வேண்டுவதில்லை. வாழ்க்கையோடு இயைந்ததாக அமைய வேண்டும்.

மக்களின் வாழ்க்கையை விட உயர்ந்த வாழ்க்கையாகப் பெருமை மிக்க வாழ்க்கையாக ஆற்றல்மிக்க வாழ்க்கையாகக் கதையின் கற்பனை அமையலாம். ஆயினும் மக்களின் உணர்ச்சிகளையும் குறிக்கோள்களையும் ஒட்டியதாகவே அந்தக் கற்பனை, வாழ்க்கை அமைதல் வேண்டும். கூடிய வரையில் ஆசிரியர் தமக்கு நன்கு தெரிந்த வாழ்க்கைப் பகுதிகளையும் இடங்களையும் அமைத்தே நாவல் எழுதுதல் நல்லது. (டாக்டர் மு.வ. இலக்கிய மரபு. பக்கம் 113—114).

சமுதாய உணர்வு

சமுதாயத்தின் ஓர் உறுப்பினனாய் இடம் பெறும் தனி மனிதனிடம் காணக்கிடக்கும் தன்னிலை உணர்வுகள் (Individual feelings) காலப்போக்கில் சமுதாய உணர்வுகளாய் (Social feelings) வளர்ந்து சமுதாயக்கூட்டு வாழ்க்கைக்கு வழி வகுக்கிறது.

சமயக் கோட்பாடுகளையும் புதினத்திற்குரிய இலக்கணக் கட்டுக்கோப்பையும் தன்னகத்தே கொண்ட 'கிறிஸ்துவின் தறச்ச குரிக' என்னும் நூலினுள் பல்வகைச் சமுதாய உணர்வுகள் காணக்கிடக்கின்றன.

உழைத்துப் பொருளீட்டல், வறியார்க்கு ஈதல், வறுமையின் கொடுமை, பிழை பொறுத்தல், பெண்ணின் பெருமை, சமயப் பொது நோக்கு, மனிதநேய மாண்பு, பழக்க வழக்கங்கள் முதலிய சமுதாய உணர்வுகளை இப்புதினக் கதைமாந்தர் வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

கதைமாந்தரும் தொழிலும்

கிட்டத்தட்ட இருபதிற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அறிமுகப்படுத்தப்படும் இப்புதினத்தில் சிறப்பிடம் பெறுபவர் இக்கோரன். இண்ணுவித்தாயும் அவருடைய மூன்று பிள்ளைகளாகிய எச்சமு, தங்க, கறுப்பன் என்பவரும் மத்தாயும் ஆவர்.

ஊரும் உறவும் இல்லா இக்கோரன், கறுப்பன் வீட்டில் ஒட்டி வாழும் விறகு வெட்டி. கண்ணூரித்தாய் கயறு பிரித்தல், தங்க கயறு பிரித்தல் பாய்நெய்தல், கறுப்பன் மாடுமேய்த்தல், போன்ற தொழில்களைச் செய்து வாழ்ந்தனர்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' (?)

என்னும் தன்னிலை உணர்ச்சி சமுதாய வளர்ச்சிக்குக் கருவாகிறது.

வறியார்க்கு ஈதல்

இக்கோரன் விறகுவெட்டி, ஒன்றரை ரூபாயினை நாள் கூலியாய்ப் பெறுபவன். இப்பணத்தால் இன்னாலித்தாயின் குடும்பத்தை வாழவைத்தான். சிறுபொழுதையும் வீணாக்காமல்குடிசையைக் கஞ்சி நேந்திர வாஜாக்கன்று, சேவ்ன மரவல்லி, பூசனிக்காய் முதலியவைகளைப் பயிரிட்டான். இப்பொருளால் கறுப்பனுக்கும் தங்கைக்கும் தாய்க்கும் வினவியுயற்று ஆடை அணிகலன்களை வாங்கித் தந்து அக்குடும்பத்தின் வறுமைக்கு வறுமை தந்தான்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு' (திருக்குறள் 212) என்னும் வள்ளுவ நெறியில் வழுவாமல் வாழ்ந்தனர்.

உழைப்பில் உறுதி

'வேலை வேண்டும்; வாழ்வதற்கு வேலை கட்டாயம் வேண்டும்; (கி.த.கு. பக்.14) எனக்குச் சும்மா இருப்பதில் சுகம் இல்லை'. (கி.த.கு. பக். 48) என்று இக்கோரன் குறிப்பிடுவதால் உழைப்பில் அவனுக்கிருந்த உறுதியை உணரவியல்கிறது.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்னும் ஔவையின் வாழ்த்தினை இக்கோரனில் காணலாம்.

வறுமையின் கொடுமை

'இக்கோரன் பிறக்கும்போதே பசியோடு பிறந்த தாயும்; இவனை இவ்வுலகிற்கொரு மாபெரும் பாரமாய் விட்டுச்சென்ற நன்றியில்லாத் தாயும் ஒரு வேறை பசியின் கட்டுக்காரியாய் இருந்திருக்கலாம்' (கி.த.ப.கு.ப. 13) என்றும், 'பிஞ்சுக் குழந்தைகளைக் கிட்டுங் காசிற்கு அவர்களை ஆசையோடு வருந்திப் பெற்ற தாய்மார் விற்றுப் பசி போக்குகின்றனர். ஒரு வாய்க் கஞ்சிக்குச் சகோதர சகோதரிகள் மானத்தை விற்கின்றனர்.

பசியின் முன் எல்லாம் நொறுங்கிக் கொண்டிருக்கின்றன' (கி.த.கு.ப. 23) என்றும் ஆசிரியர் கூறு முகத்தான் 'பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்' என்னும் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பிழைபொறுத்தல்

இக்கோரனை மறைமுகமாய் விரும்பிய தங்க அவனுக்குத் திருமணப் பேச்செடுத்த இரவில் அவள் அன்பை வெளிப்படுத்த விழைகிறாள். இக்கோரன் பண்பின் உறைவிடமாதலால் தங்கை நிலையில் வைத்திருந்த அவள் பிழைபொறுக்குமிடத்து' 'தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் ஒரு முறை மன்னிப்புத் தரவியலாவிட்டால் மனிதன் மிருகத்திற்கு ஒப்பாவான்' (கி.த.கு.ப. 69) என்கிறான். தங்க மத்தாயி மூலம் தவறியபோது 'இதற்கு முன்னரும் பெண்கள் தவறியுள்ளனர். அவர்களைக் கடினமாய்த் தண்டித்துச் சமுதாயத்தினின்று புறம்பே தள்ளியதோடு கொல்லவும் செய்துள்ளனர். ஆயினும் அவர்கள் தவறியுள்ளனர். இப்பொழுதும் தவறுகின்றனர்' (கி.த.கு.ப. 106) என்று இக்கோரன் குறிப்பிடு முகத்தான் பிழை பொறுத்தல் உணர்வு புலனாகிறது.

பெண்ணின் கடமை

தங்க தன் மீது ஆசை கொள்ளக் காரணம் தக்க பருவத்தில் திருமணம் நடக்காததே எனவுணர்ந்த இக்கோரன் அதற்கு வருந்தினாலும் எந்நிலையிலும் பெண்கள் கற்புக்கடம் பூண்டொழுக வேண்டும் என்பதைக் குயிலினை எதிர்பார்த்து எத்தனை நாள்கள் மாங்கொம்பு பூத்துக் குலுங்கி நிற்கும்? ஆனால் அவளுக்கொரு கடமையுண்டு. மூத்து மூத்து நரச்சாலும் கல்லறையில் வைத்தும் கூடு உயர்த்திக்காட்டக் களங்கமில்லா வகையில் வாழ்வினைப் பாதுகாக்க வேண்டியது அவளுடைய கடமையாகும். துன்னிச்சைச் செயல்களுக்குரியதன்று வாழ்வு, கல்வி, படித்த பூங்கொத்துப்போல் உதிர்க்கக் கூடியதன்று வாழ்வின் நினைவுகள்' (கி.த.கு.ப. 76) என வலியுறுத்துகின்றான்.

சமயக்கோட்பாடு

மத்தாயி என்னும் கிறித்தவ இளைஞனால் தவறிய தங்க தன்னிலைக்கு அழுது துன்புற்றதைக் கண்ட இக்கோரன் 'அழுதழுது ஒரு மக்தலேன் மரியாள் ஆனாள். அவளுடைய மனத்தாபத்திற்கிரங்கித்தவறிப்போன அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க இவ்

வுலகில் யாருண்டு' (கி.த.கு.ப. 102) எனக் கேட்கும் இந் நிகழ்ச்சியை விவிலியத்தில் (புதிய ஏற்பாடு, அருளப்பர் 12:3) காணலாம்.

மத்தாயி தான் செய்த தவற்றிற்கு மன்னிப்புப் பெறும் பொருட்டுக் கிறித்துவினை அறைந்து கொன்ற சிலுவையினை நீண்ட நேரம் பார்த்து நின்று -கோவிலின் உச்சி முகட்டில் நிற்கும் சிலுவை, பாவிகளுக்கு மோட்சராச்சியத்தைக் காட்டிக் கொடுக் கிறது என்றும், கடவுளின் இரசமும் அப்பமுமான குருதியையும் மாமிசத்தையும் விற்றுப் பணம் சம்பாதிக்கும் விலைமாதர் கடவு ளின் முன்னிலையில் குற்றவாளிகள் என்றும், அவர்க்கெதிராய் மோட்சக் கதவு அடைக்கப்படும் (கி.த.கு. பக். 130-131) என்றும் சுட்டுவதால் மனித உடல் இறைவனின் திருவுடல் என்பதை உணர்த்துகிறார். கறுப்பன் இளமைத் துடுக்கால் பீடிகுடித்தல், மது அருந்துதல், மாதர் தொடர்பு கொள்ளுதல் போன்ற தீப் பழக்கங்களுக்கு அடிமையானபோது இக்கோரன் அறிவுரைகள் கூறித் திருத்த முயல்கிறான். அவற்றை அற்பமென உதறிய கறுப்பன் தன் தமக்கெ தகறிய குற்றத்தை இக்கோரன் மேல் சுமத்தி, அவனை வெறுத்துக் கடுஞ்சொற்கள் பேசிப் பொருள் களை வெளியில் வீசுகிறான். எனினும் நோயால் வாடிய இச் கோரன் கறுப்பனைக் காணவும் கட்டிப் பிடிக்கவும் ஆசைப் படுகிறான். கறுப்பனோ குருதி கொதித்தொழுகும் பெரிய கையால் இக்கோரனின் உலர்ந்த கன்னத்தில் அறைந்தான். ஆயி னும் இக்கோரன் அவனை மன்னித்து அன்பு காட்டுகிறான். இந் நிகழ்ச்சி விவிலியத்தில் (புதிய ஏற்பாடு, லூக்காஸ் 23:24) இயேசு கிறித்து யூத மக்களுக்கு மன்னிப்புத் தந்ததைச் சுட்டு கிறது.

மனிதநேய மாண்பு

பிற மனிதரை மதித்து நடத்தும் மாண்பையும் புறக்கணித் துத் துன்புறுத்தாத் தன்மையையும் காணவியல்கிறது. இக்கோரன் மத்தாயின் பண்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவன் யாராக இருந்தாலும் இருக்கட்டும். இந்துவோ முஸ்லீமோ, கிறித்தவனோ யாராயினும் தவறில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவன் மனிதனும் அன்பு நிறைந்தவனுமாக இருந்தால் மட்டும்போதும் (கி.த.கு.ப. 111) என்கிறான். மத்தாய் கழுத்தில் சரடில் கட்டிய உத்தரியத்தைப் பிடித்துக் காட்டி 'அவள் என்னுடைய

உயிர். ரிக்ஷா இழுக்க இந்தக் கைகளும், ஒடி நடக்க இரண்டு கரங்களுமுள்ள காலம்வரை இக்கோரன் அண்ணனுடைய தங்கையை நான் பட்டினி இடமாட்டேன் (கி.த.கு. 110) என்கிறான்.

பழக்க வழக்கங்கள்

தனி மனித உணர்வுகள் சமுதாய உணர்வாய் வளர்ந்து பழக்க வழக்கங்களாய் உருவெடுக்கின்றன. இந்நூலினுள் பல்வகைப் பழக்க வழக்கங்களைக் காணலாம். பச்சைப் பலாவிலையினைக் கோட்டிக் குத்திக் கஞ்சிமொண்டு குடித்தல், தலையில் பாளைத் தொப்பி அணிதல், மாங்காய் நாரத்தை ஊறுகாய்கள் தொட்டுக்கொள்ளுதல், சிறுவர் சிற்றில் கட்டி விளையாடுதல், வளர்ந்த பின்னும் வெள்ளியில் அரைஞாண் அணிதல், பிறந்த நாளில் தெய்வ வழிபாடு செய்தல், நாடோடிப் பாடல்கள் விடுகதைப் பாடல்கள் பாடுதல், உவமை பழமொழிகள் பயன்படுத்துதல், தத்துவங்கள் மூலம் வாழ்வியலை உணரவைத்தல் போன்ற பழக்க வழக்கங்களைக் காணலாம்.

இறுவாய்

கறுப்பனின் வறுமைப்பிணி போக்க வழிதொடர்ந்து வந்த இக்கோரன், கறுப்பனால் கடிந்து கொள்ளப்பட்டு வீட்டை விட்டு வெளியேறி ஆற்றில் பிணமாய் மிதந்து வருங்காலம்வரை தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகைமையாளனாய்,

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே'

என்னும் புறநானூற்றிற்குப் பொருத்தமாகிறான்.

11. வடமொழி இலக்கியங்கள் புலப்படுத்தும் சமுதாயம்.

டாக்டர் இ. ஆர். ரமாபாய்

விலங்கினங்கள், பறவை இனங்கள் ஆகியவற்றுக்கு இல்லாத ஒரு சிறப்பு மனிதனுக்கு உண்டு. அவன் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்பதுதான். 'Man is a social being.' என்று ஆங்கிலத்தில் இதைக் கூறுவார்கள். பலர் ஒன்றுகூடி ஒருவர் மற்றவர்களைப் புரிந்துகொண்டு வாழ்வதுதான் சமுதாயம்.

சமுதாய உணர்வு என்றால் என்ன? ஒருவன் தன்னைச் சுற்றி இருப்பவர்களைப்பற்றி நினைத்து, அவர்களுடன் தன்னையும் தன் உணர்ச்சிகளையும் பிணைத்துக் கொள்வதே சமுதாய உணர்வு என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இப்படி ஒருவன் தன்னை மற்றவர்களுடன் இணைத்துக்கொண்டு வாழும்பொழுது, அவன் மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. அது மட்டுமன்று; அப்படிச் செய்யும்பொழுது, மற்றவர்களுக்காக தனது சுதந்திரம், உரிமை முதலியவற்றை ஒரு சிறிதளவாவது தியாகம் செய்யவும் நேரிடுகிறது. மற்றவர்களது சுதந்திரத்தைப் பாதிக்காமல் இருக்கும் வரையில்தான் தனது சுதந்திரம் இருக்கிறது என்பதையும் அவன் உணர நேரிடுகிறது. மற்றவர்களையும் தன்னைப் போல நினைக்கும் அவசியமும் ஏற்படுகிறது.

சமஸ்கிருத இலக்கியத்தில் மிகவும் பழமை வாய்ந்தது வேதங்களாகும். வேதங்கள் நான்கு. அவை ரிக், யஜுர், சாம, அதர்வ என்பதாகும். ஒவ்வொரு வேதத்திலும் நான்கு உட்பிரிவுகள் உள்ளன. அவை ஸம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யம், உபநிஷத்து என்பன.

வேதங்கள் குறிப்பாக எந்த சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டதன்று. ஆனால் பிற்காலத்தில் தோன்றிய சமயங்கள் வேதங்களிலிருந்தும், உபநிஷத்துக்களிலிருந்தும் ஆதாரங்களை எடுத்துக் கொண்டன என்று கூறலாம். வேதங்களுக்கு அடுத்து, காலத்தால் முற்பட்டது இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமுமாகும். சமஸ்கிருத இலக்கியங்கள், வர்ண, ஆச்ரம தர்மத்தின் அடிப்படையிலும், அறம், பொருள், இன்பம், வீடு (dharma, artha, kāma and mokṣa) என்பனவற்றின்

அடிப்படையிலும் எழுதப்பட்டவையே. இதில் முதலில் கூறிய வர்ணம் என்பது நான்குவகைப்படும். அவை பிராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர், சூத்திரர் என்பன. ஆச்ரமம் என்பதும் பிரம்மசரியம், கிருஹஸ்தம், வானபிரஸ்தம், சன்யாசம் என்று நான்கு வகைப்படும்.

வேதகாலத்தில் முதலிலே கூறப்பட்ட வர்ணங்கள் அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையிலே அமைந்திருந்தன. வேத காலத்து மக்கள், விவசாயத்தையும், ஆடுமாடுகள் மேய்ப்பதை யும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். இந்த எளிய சமுதாயத்தில் முதல் வர்ணத்தவர் அதாவது பிராம்மணர், கல்வி கற்பது, வேதங்கள் ஓதுவது, அதைமற்றவர்களுக்கும் கற்றுக் கொடுப்பது என்பனவற்றை முக்கிய தொழிலாகக் கொண்டி ருந்தனர். இரண்டாவது வர்ணத்தவர், அதாவது க்ஷத்திரியர், கையிலே ஆயுதம் ஏந்தி மக்களுக்கும், அவர்களுடைய செல்வங் களான ஆடுமாடுகளுக்கும் எந்தத் தீங்கும் வராமல் காப்பாற்றி னார்கள். வைச்யர் என்று அழைக்கப்பட்டவர்கள், வியாபாரம் செய்து, பொருளீட்டினார்கள். நான்காவது வர்ணத்தவர் மற்ற மூவருக்கும் சேவை செய்தனர். ஆனால் இந்த நான்கு வர்ணத் தவர்களும் ஒற்றுமையாக இருந்தனர். அப்படி இருக்க வேண்டும் என்பதை வேதமே பின்வருமாறு கூறுகிறது.

"Yatra brahma ca kṣatrañca ubhau
sañcarataḥ saha/Tam deśam puṇyam
prajñeyam yatra devāḥ sahāgninā yajuḥ"

இந்த எளிமையான சமுதாயத்தில் மக்களின் உணர்வுகள் எவ்வாறு இருந்தன? பொதுவாக, நாம் சமுதாயத்தில் எங்குச் சென்றாலும், எங்கு இருந்தாலும் மற்றவர்களுடன் ஒற்றுமை யுடனும், நல்லனவற்றைக் கேட்டும், நல்லனவற்றைப் பார்த்தும், நல்ல விஷயங்களையே பேசியும், சொல்லாலோ, செயலாலோ மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும். ஒரு வருக்கு ஒரு தீங்கு நேரிட்டு அதன் விளைவுகளால் துன்பம் ஏற்பட்டால், இவன் மற்றவர்களுக்கு அப்படி நேராமல் தடுக்க வேண்டும். இக்கருத்துக்களை நாம் கீழ்க்கண்ட செய்யுள்களில் காணலாம்.

'Sahanāvavatu, Sahanau bhunaktu,
saha vīryam karavāvahai, tejasvī
nāvadhītamastu, mā, vidviṣāvahai
oṃ śāntiḥ śāntiḥ śāntiḥ" ||

'Bhadram karṇebhiḥ śṛṇuyāma devāḥ |
bhadram paśyemākṣabhi yajatrāḥ |
sthirai raṅgaistuṣṭuvām sastanūbhiḥ |
vyaśema devahitam yadāyuḥ ||

ரிக்கு வேதத்தின் 10-வது மண்டலத்தில், 34-வது சூக்தத்தில், பல கெடுதல்களை ஏற்படுத்தக்கூடிய சூதாட்டம் நிந்திக்கப்படுகிறது. சூதாட்டத்தில் ஒருவன் தோற்றுவிட்டால், அவன் மனைவி மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறாள். மாமியார் அவனை இகழ்கிறாள். பொருள் வேண்டி, அவன், மற்றவரது பொருளை அபகரிக்கும் பொருட்டு இரவில் மற்றவர் இல்லத்தில் திருடனைப்போல் நுழைகிறான் என்றெல்லாம் வர்ணிக்கப் படுகிறது.

"Jāyā tapyate kitavasya hīnā mātā
putrasya carataḥ kvasvit/ṛṇāvā
bibhyaddhanamicchamānonyeṣāmasta
mupa naktameti |" etc.

இன்றைய சமுதாயத்தில் இதை நாம், குதிரைப் பந்தயம் மது அருந்துதல், சீட்டு விளையாடல் முதலியவற்றின் தீமைகளை எடுத்துரைப்பதாகவும் அவற்றைத் தடுப்பதாகவும் அறியலாம்.

விடுதலை (Independence) யின் மகிமையைப் பற்றியும், பெருமையைப் பற்றியும் நாம் வேதமந்திரங்களிலிருந்து அறிகிறோம்.

Yadvāmīyacakṣasā mitra vayam ca sūrayaḥ
vyaciṣṭe bahupayye yatemahi svarājye |

(RV. 5/66/6)

Yadajaḥ prathamam sambabhūva tat svarājyamiyāya
tasmān nānyatparamasti bhūtam...

உடலாலும், உள்ளத்தாலும், ஆவியாலும் (Physically, mentally and spiritually) எந்த ஒரு சமூதாயம் விடுதலை அடைந்திருக்கிறதோ, அப்படிப்பட்ட சமுதாயத்தை உடைய நாடே சுதந்திரமடைந்திருப்பதாக (Svārājyam) வேதத்தில் கூறப்படுகிறது.

பிற்காலத்தில் புத்தராலும், இயேசுநாதராலும் தங்களது சமயத்திலே முக்கிய அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அகிம்சை என்ற தர்மத்தைப் பற்றியும் நாம் வேதத்திலேயே பார்க்கலாம். பசுக்களையோ, ஆடுகளையோ, வேறு எந்த விலங்குகளையோ இம்சை செய்யக்கூடாது என்று கீழ்க்கண்ட மந்திரங்களிலிருந்து நாம் அறிய முடிகிறது.

'Yajamānasya paśūn pāhi', paśūn me
pāhi', 'gām mā himsīḥ'. ajām mā
himsīḥ', avim mā hirsīrimam ma himsī-
rdvipādam paśı m/mā himsīrekaśapham
paśum, mā himsyāt sarvā bhutāni" ।

சமூகத்தில் பெண்களும் தத்துவஞானத்தை அறிந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். அப்படிக் கற்றறிந்த பெண்களை அறிஞர்கள் விவாதங்கள் செய்யுமிடத்தில் அனுமதித்தார்கள் என்பதை பிருகதாரண்யக உபநிஷத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இதில் கார்கி (Gargī) என்பவள் திருமணம் ஆனவளா, ஆகாதவளா என்பது தெரியாது. யாஞவல்க்கியரிடம் பல தத்துவங்களைப்பற்றிக்கேள்விகள் கேட்கிறாள். அவரும் அதற்கெல்லாம் விளக்கங்கள் கூறுகிறார்.

சமுதாயத்தில் ஒரு தனிமனிதன் எந்த முடிவையும் எடுக்க முடியாது. அவன் பலருடன் கலந்தாலோசித்து, பிறகே முடிவெடுக்க முடியும். உபநிஷத்துகளில் வரும் தத்துவங்கள் எல்லாமே இவ்வாறு சர்ச்சை செய்து தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் என்று கூறலாம். இதற்குச் சிறந்த மேற்கோளை நாம் இராமயணத்திலிருந்து எடுத்துக் கூறலாம். விபீடணன் இராமனிடம் அடைக்கலமாக வந்தபொழுது இராமன், அங்கதன், அனுமன், சுக்ரீவன் முதலியவர்களுடன் கலந்தாலோசித்த பிறகே விபீடணனை ஏற்றுக்கொள்கிறான்.

"Sugrīvasya tu tadvākyam śrutvā rāmoeahāyaśāh ।
samīpasthānuvācedam hanumatpramukhān harīn ॥...
ityevam paripṛṣṭāste svam svam matamatandritāḥ ।
sopacāram tadā rāmamūus cuhita cikīrṣavaḥ ॥

(Rām. Yuddha. XVII. 31-34)

ஒருவனைத் தூதனாக அனுப்பும்பொழுது அவன் எவ்வாறு தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும், எப்படிப் பேச

வேண்டும் என்பதை இராமாயணத்தில் நாம் பார்க்கலாம். இராம இலக்ஷ்மணர்கள் சீதையைத் தேடிவரும் காலத்தில் சுக்ரீவன் அநுமனை அவர்களிடம் அனுப்புகிறான். அவர்களிடம் சென்ற அனுமான், தான் யார் என்பதையும், தன் தலைவன் எவ்வாறு இருக்கிறான் என்பதையும் மிக அழகாகச் சொற்குற்றம் பொருள் குற்றம் எதுவும் இல்லாமல் கூறுகிறான். அநுமனது கூற்றைக்கேட்டு இராமன் வியந்து, வேதங்களையும், இலக்கணத்தையும் நன்கு கல்லாதவன் இவ்வாறு பேசுதல் அரிது என்று புகழ்ந்து கூறுகிறான்.

தவறு செய்வது மனித இயல்பு, ஆனால் மன்னித்தருள்வது இறைஉணர்வு. (To err is human; to forgive is divine) இந்த மன்னிக்கும் தன்மையை ஒவ்வொருவரும் மனதிலே கொண்டால், சமுதாயத்தில் பல காழ்ப்புணர்வுகளையும், இன்னல்களையும் தவிர்க்கலாம். இதையும் நாம் இராமாயணத்தில் காணலாம்.

சீதையை இம்சித்த இராக்ஷஸிகளைத் தண்டிப்பதற்கு அநுமன் சீதையிடம் அனுமதி கேட்டபொழுது அவள், 'எய்தவன் இருக்க அம்பை நோவதேன்' என்ற கூற்றிற்கிணங்க அவர்களை மன்னித்து விடும்படி கூறுகிறாள்.

சமுதாயத்தில் ஒரு மனிதன் எல்லோருடனும் இணைந்து வாழ வேண்டுமானால் அவன் பொறுமை, அழுக்காறு முதலியவற்றை மனதிலிருந்து அகற்றிவிட வேண்டும். தன்னைப்போல மற்றவர்களையும் நினைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மனதில் கருணையை வளர்த்துக்கொள்ள வேண்டும். பயனைக் கருதாமலும் இறைவனிடத்திலே அன்பு செலுத்துபவனாகவும் இருக்க வேண்டும். இதை பாரதி, 'பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னான்; பக்தி செய்து பிழைக்கச் சொன்னான்' என்று கூறுவான். மேற்கூறியவையெல்லாம் இன்று இருபதாவது நூற்றாண்டிலே நாம் புதிதாகப் பேசுவதன்று. அன்றே பகவத்கீதையில் கண்ணன் இவற்றையெல்லாம் கூறியிருக்கிறான்.

புலன்களை அடக்கிச் சமநோக்குடன், எல்லோரையும் தன்னைப்போல் நினைக்கிறவனும், அகிம்சா தர்மத்தைக் கடைபிடிப்பவனும், அவசியத்திற்கு மேல் பொருள் சேர்க்காதவனும் தனக்கு மிகவும் அருகில் இருப்பவன் என்று கீதையில் கூறுகிறான் கண்ணன்.

— Karmaṇyeva adhikāraste mā phaleṣu kadtācana

— nirvairaḥ sarvabhuteṣu yaḥ sa mārneti pāṇḍava

—G. XI 55

— samniyamyen driyagrāmam sarvatra samabuddhayaḥ ।
te prāpnuvanti māmeva sarvabhūtahite ratāḥ ॥

(XII-4)

— adveṣṭā sarvabhutānām maitraḥ karuṇa eva ca ।

(XIII)

ahimsā satyam akrodhaḥ tyāgaḥ sāntirapaiśunam
dayā bhūteṣu aloluptvam mārdavam hrīracāpalam
tejaḥ kṣamā dhṛtiḥ śaucam adroho nātimānitā ।
bhavanti sampadam devīm abhijātāsya bhārata ॥

(XVI 2-3)

samoham sarvabhūteṣu na me dveṣyosti na priyaḥ ॥

(IX-29)

இவற்றிலிருந்து நம் இலக்கியங்கள், சமய இலக்கியங்களானாலும், மற்ற இலக்கியங்களானாலும், அவை சமய தத்துவங்களை மட்டும் போதிக்கவில்லை. ஒரு சமுதாயத்தில் மனிதன் எவ்வாறு மற்றவர்களுடன், மற்றவர்களுக்காக வாழவேண்டும் என்பதையும் போதிக்கின்றன என்று தெரிகிறது. அவை கூறும் வழியிலே நாம் (ஒழுகினாலே) சென்றாலே, மகிழ்ச்சியுடனும், அமைதியுடனும், சண்டை சச்சரவுகள் இல்லாமலும் இருக்க முடியும் என்பது நன்கு விளங்குகிறது.

Sahanāvavatu, sahanau bhunaktu
sahavīryam karavāvahai
tejasvi nāvadhītamastu mā
vidviṣāvahai om śāntiḥ śāntiḥ śāntiḥ ॥

12. இந்தி சமய இலக்கியங்களில் சமுதாய மேம்பாடு

டாக்டர் த. சு. சுப்புசாமி

பாலினின்று வெளிப்படும் வெண்ணெயைப்போல், சமுதாய வாழ்க்கையில் புறவெளிப்பாடாகத் தோன்றுவதுதான் இலக்கியம். எத்தகைய எழுத்தாளனாக இருந்தாலும் அவன் தான் அனுபவித்த தனிமனித மற்றும் சமுதாய வாழ்க்கையின் நுகர்ச்சிகளைத்தான் தன் எழுத்துக்களில் வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ வடித்துத் தருகின்றான். சமயம் சார்ந்த இலக்கியத்தைப் படைப்பவர்களும் இந்தப் பொதுவிதிக்கு விலக்காக மாட்டார்கள்.

சமய இலக்கியப் படைப்பாளிகளை நாம் பொதுவாக இரு வகையினராகப் பிரிக்கலாம். முதல் வகையினர், ஆன்மீகம் சார்ந்த சமய வாழ்க்கையை மேற்கொண்டு உலகப்பற்று அறுத்து, எந்நேரமும் இறைவனைப் பற்றிய சிந்தனையிலும், அவன்மீது கொண்டுள்ள ஆராக் காதலிலும் மூழ்கித் திளைப்பவர்கள். இவர்களுக்குத் தம்மைப் பற்றிய உணர்வு எப்படியிருக்கும்? இரண்டாமவர், இறைப்பற்றோடு உலகப் பற்றும், மனித நேயமும் கொண்டு 'மக்கள் சேவையே மகாதேவன் சேவை' என்று வாழ்பவர்கள். 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமேயல்லாமல் வேறொன்று மறியேன் பராபரமே' என்னும் தாயுமானவர் வாக்குப்படி அவர்கள் தாம் மட்டும் இன்புறுவதை நாடாது உலக உயிர்கள் அனைத்தும் இன்புற்று வாழவேண்டுமென விழைபவர்கள். 'வாடிய பயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடுபவர்கள்'. இவ்விருவகையினரிலும் கவியுள்ளம் படைத்த பலர் வாழ்ந்து தத்தம் அகப்புற அனுபவங்களை எழுத்துக்களிலே வடித்துச் சென்றுள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்றிலே மாளாப் புகழ் ஈட்டிய வைணவப் பெரியார்களான ஆழ்வார்களும், சிவநெறிக் குரவர்களும், திருமூலர், தாயுமானவர் போன்ற சித்தர்களும், இளங்கோவடிகள், சாத்தனார், கம்பர், சேக்கிழார், பரஞ்சோதி முனிவர், உமறுப்புலவர், வீரமாமுனிவர் போன்ற சமயவழி இலக்கியக்கர்த்தாக்களும் இந்த வகையில் குறிப்பிட தக்கவர்கள். இவர்களைப் போன்றே இந்தி இலக்கியத்திலும் கோரக்நாதர் போன்ற சித்தர்களும், சுவயம்பூ, புட்பதந்தர் போன்ற சமணமதக் கவிஞர்களும், கபீர்தாசர், நாமதேவர், குரு

நானக் போன்ற அருள்வழிபாட்டு நெறிப் பாவலர்களும், சூர் தாசர், துளசிதாசர், மீராபாய் போன்ற வைணவ நெறிப் புல வர்களும் அமீர்குஸ்ரு, மலித்முகம்மது ஜாயஸீ, குத்பன், உஸ் மான் போன்ற இஸ்லாமிய சமயப் புலவாகள் பலரும் தத்தம் சமயநெறிக் கருத்துக்கள் புலப்படும் வண்ணம் விழுமிய இலக்கி யப் படைப்புக்களை இயற்றித் தந்துள்ளனர். இப்பாவலர் களுள் கபீர்தாசர், துளசிதாசர் ஜாயசி போன்ற பலர் சமய உணர்வோடு சமுதாய உணர்வும் மிக்கவர்களாக இருந்துள்ளனர்.

இவர்களுள், கபீர்தாசர் மிகச்சிறந்த பக்திமானாகவும் தத் துவ ஞானியாகவும் விளங்கியதோடல்லாது, மனித நேயம் படைத்த மகானாகவும் சமுதாயச் சிந்தனைச் சிற்பியாகவும், பகுத்தறிவுப் படைகொண்டு சமூக முரண்பாடுகளை வெட்டிக் களைய முயன்ற சமூக சீர்திருத்தவாதியாகவும், குறுகிய இந்து முஸ்லீம் வகுப்புவாத மனப்பான்மைக்கு அப்பாற்பட்டு மனித குலம் அனைத்தும் ஒன்றேயெனும் உயர் கொள்கையைப் பரப்பிய பொன்மனச் செம்மலாகவும் திகழ்ந்தவர், உயர்வு-தாழ்வு, கீழோர்-மேலோர் எனும் பிரிவினை மனப்பான்மையையும், மனிதனை மனிதன் வெறுக்கும் வருணாசிரம நெறியையும் எதிர்த்து அறைகூவல் விடுத்தவர்; இராமன்இரகுமான் என்று மொழியடிப்படையில் அண்ட பகிரண்டங்கள் அனைத்துக்கும் தந்தையான இறைவனைக் கூறுபோட்டு மனித சமூகத்தைத் துண்டாடும் சுயநலவாதிகளை வன்மையாகச் சாடுபவர்; தத்து வம் சமயம் வழிபாட்டு முறை என்ற போர்வையில் பலப்பல மூடப்பழக்கவழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் மக்கள் மத்தியிலே பரப்பி அவர்களை ஏமாளிகளாக்கிவிட்டு அதனால் சொந்த நலனுக்கு ஆதாயம் தேடும் சுரண்டல் பேர்வழிகளைக் கடுமையாகக் கண்டிப்பவர். ‘எம்மதமும் சம்மதம்’ என்று விழுமிய நோக்கோடு சர்வ சமய சமரசத்துக்காகப் பாடுபட்டவர். உயர்வு என்பது உழைப்பாலும் ஒழுக்கத்தாலும் பெறப்பட வேண்டியதே அல்லது பிறப்பாலும் குடிப்பெருமையாலும் அன்று என்னும் கொள்கையை ஆணித்தரமாக எடுத்துரைத்தவர். இக்காரணங் களால், சொந்த வாழ்க்கையில் இந்துக்கள்-முஸ்லீம்கள் எனப் பல தரப்பிலும் எதிரிகளை உருவாக்கிக் கொண்டவர்; பலவிதமான எதிர்ப்புக்களுக்கும் கொடிய இன்னல்களுக்கும் ஆளாகியவர்; எனி னும் இறுதி மூச்சுவரை தமது கொள்கையில் உறுதியுடன் காலூன்றி நின்றவர்.

இத்தனை பெருமைகளுக்கும் உரிய கபீர்தாசர், கி.பி. 139ஆம் ஆண்டில் காசிமாநகரத்தில் தாய்-தந்தை பெயர் அறி யாப் பாலகனாகப் பிறந்து, நீரு-நீமா என்னும் ஏழைமுகம்மதிய தம்பதியினரின் வளர்ப்பு மகனாக வளர்ந்தவர். கல்வி கேள்வி

களில் ஆர்வம் மிக்கவராக இருந்தும் அக்கால வழக்குப்படி தாம் வளர்ந்த வீட்டுக் குலத்தொழிலாகிய நெசவுத் தொழி லைப் பிள்ளைப் பிராயத்திலேயே மேற்கொள்ள வேண்டிய கட் டாயத்துக்கு ஆளானவர். 'தாளும்மையும் தொட்டு அறிகிலேன்; எழுதுகோலை ஏந்திப் பழகிலேன்' எனக் கரவின்றிக் கூறும் இப்படிக்காத மேதை முறையான கல்வி பயில வாய்ப்புக் கிட்டா விடினும் தமக்குள் இயல்பாகவே அமைந்திருந்த தத்துவ அறிவுப் பசியின் காரணத்தால் நாடெங்கிலும் சென்று சாதி சமய விருப்பு வெறுப்பின்றி அனைத்துச் சமய மகான்களையும் அணுகி, அவர் களுடைய பிரசங்கங்களையும், அறிவுரைகளையும் கேட்டு வளர்ந்தவர். இவ்வாறு தாம் பெற்ற கேள்வியறிவையும் அப்ப டியே ஏற்றுக்கொள்ளாது அவற்றின் மெய்ப்பொருளை நுணுகி ஆராய்ந்து, தமது சொந்த வாழ்க்கை அனுபவங்களோடும், பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடும் ஒப்பு நோக்கி இச்சுய சிந்த னையின் பரிணாமமாகத் தமக்கென்று ஒரு தனிப் பாதையை வகுத்துக்கொண்டவர். எனவே தான் 'பீஜக் (BEEJAK) என்னும் அவரது நூலில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் தத்து வக் கொள்கையினாலும் சரி, பக்திநெறிப் பார்வையினாலும் சரி; சமுதாயக் கண்ணோட்டத்திலானாலும் சரி, கருத்துப் புலப்பாட்டுப்பாணியாலானாலும் சரி, தமக்கென்று ஒரு தனி முத்திரையுடன் காணப்படுகின்றன.

கபீர்தாசரின் பாடல்களில் ஆணி வேராகத் திகழ்பவை அவரது இறை நம்பிக்கையும், மனித நேயமும்தான். இவ்விரண் டையும் பிரிப்பதென்பது இயலாத காரியம், ஏனெனில் கபீர் தாசரின் கருத்துப்படி இவ்விரண்டும் பகுத்தறிவு என்னும் உறுதி யான சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளன. பகுத்தறிவின் காரண மாகத்தான் கபீர்தாசர் இறைவனை உலகம் முழுவதையும் ஆட் டிப் படைக்கும் ஓர் ஒப்பற்ற ஆற்றல் வடிவத்தில் காண்கின்றார். உருவ வழிபாட்டை வெளிப்படையாகக் கண்டிக்கிறார். 'சின்னஞ் சிறு கல்லைத் தொழுவதாலேயே கடவுளைக் காணலாமெனின், பெரிய மலையாகப் பார்த்துத் தொழலாமே அறிவிலிகாள்? அக் கல்லினும் மாவரைக்கும் கல்லே மேலானதாயிற்றே; ஒரு பய னாவது நல்குகிறதே' என உருவ வழிபாட்டை எள்ளி நகை யாடுகிறார். இவ்வாறு உருவ வழிபாட்டை அவர் எதிர்ப்பதற் குப் பிறிதொரு காரணம், அது இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக் கும் இடையே பிளவு மனப்பான்மையை உருவாக்கி அவர்களை ஒருவருக்கொருவர் விரோதிகளாக்கி விடுகிறது என்பது தான். எனவேதான் அவர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு உறுதியான பாலமாக அருவ வழிபாட்டை அமைக்கிறார். கபீர்தாசர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக வாழ்நாள் முழுதும் பாடு பட்டவர் என் பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்து முஸ்லீம்களாகப் பிரிந்துள்

ளதில், கோயில் மசூதி போன்றவற்றின் கட்டட அமைப்புகளுக்கும் அவற்றின் நடைபெறும் வழிபாட்டு முறைகளில் உள்ள வேறுபாடுகளுக்கும் சடங்குகளுக்கும் சற்றும் மதிப்புத் தராது அக ஒழுக்கத்துக்கே முதன்மையிடம் அளிக்கின்றார். புறச் சடங்குகள் எந்த அளவுக்குப் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை என்பதைப் பல பாடல்களின் வாயிலாக எடுத்துரைக்கின்றார். மசூதியின் மேல் நின்று கொண்டு உரத்த குரலில் அல்லாவை அழைக்கும் முல்லாவைப் பற்றிக் கூறுகையில்,

கல்லும் மண்ணும் கலந்திட்டுக்
  கட்டிய மந்தி மேல் நின்று
முல்லா வரக் கூவிடுவார்
  மந்தமோ அல்லாவின் செவிகள்தாம்!

எனக் கேலி செய்கிறார். பிறிதோர் இடத்தில்,

இறையுளில் அரற்றிடும் முல்லாவே!
  இறைவனைச் செவிடெனக் கண்டனையோ?
எறும்பின் பாதச் சிலம்பொலியும்
  எம்மான் அறிவின், தெரிந்திலையோ?

என அல்லாவில் அளப்பரும் ஆற்றலை வியந்து போற்றுகின்றார்.

இதே போன்று, இந்து சமயத்தினரிடையே வேரூன்றிப் போயிருந்த பல மூடப் பழக்கவழக்கங்களையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத சமயச் சடங்குகளையும் அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார். அவற்றுள், ஜெபமாலை சுழற்றுதல், விபூதி-நாமம் போன்ற சின்னங்களும் முத்திரைகளும் அணிதல், விரதமிருத்தல், தீர்த்த யாத்திரை செல்லுதல், மழித்தல்-நீட்டல் போன்ற பல புறச் சடங்குகள் அடங்கும். அதே போல நமாஜ்படித்தல் ரோஸா விரதம் இருத்தல்-ஹஜ்யாத்திரை செல்லுதல் முகம்மதியர்களின் புறச்சடங்குகளின் சாரமின்மை ஆகியவற்றையும் அவர் கோடிட்டுக் காண்பித்துள்ளார்.

மழித்தால் சுவர்க்கம் கிட்டுமெனில்
  மடையரும் அங்கே புகுந்திடுவர்,
மறிகள் நாளும் மழிந்திடினும்
  மாகம் சென்றதைக் கண்டிலமே'

என்னும் மழித்தலின் பயனின்மையைச் சுட்டும் கபீர்தாஸர் முஸ்லீம்களைப் பார்த்து, 'பகல் முழுவதும் இறைவனுக்காக ரோஸா விரதம் இருந்துவிட்டு இருட்டியதும் அவனுடைய குழந்தையான பசுமாட்டை அடித்துக் கொன்று தின்கின்றீர்களே! உங்களுக்கெல்லாம் இறைவன் எப்படி ஐயா அருள்பாலிப்பார், என வினவுகின்றார்.

இவ்வாறெல்லாம் கபீர்தாசர் கண்டிப்பதற்குக் காரணம், ஒன்று இந்து முஸ்லீம் பகைமைக்கு முக்கியமான காரணமாக இவை இருந்தன என்பது. இரண்டாவது, அப்பாவி மக்கள் தத்துவத்தின் சாரத்தை உணராது இந்தப் புறச் சடங்குகளையே உண்மையான சமயம் என்று நம்பிப் போலிச்சாமியார்களிடம் ஏமாந்து தம் வாழ்க்கையை பாழாக்கிக் கொண்டிருந்தனர் என்பது. கபீர்தாசர் கொல்லாமையை உறுதியாகக் கடைப்பிடித்தவர் என்பதும் மற்றொரு காரணம்.

எல்லாத் திருநாமங்களும் அவனுடைய திருநாமங்களே எனும் கோட்பாடுடையவராக இருந்தாலும் கபீர்தாசர் இறைவனுக்காகத் தேர்ந்தெடுத்தது 'ராம்' எனும் திருநாமமே. சுவாமி இராமாநந்தரின் சீடரெனத் தம்மைக் கூறிக்கொள்ளும் கபீர்தாசர் அவரிடமிருந்து 'ராமதீட்சை' பெற்றதாக ஒப்புக்கொண்டாலும் தம் குருநாதர் வழிபடும் இராமபிரானைப் போலத் தம் 'இராமர்' தசரதனின் மைந்தரோ, சீதாமணாளரோ அல்லர் என்பதையும் அருவமயமான ஆண்டவனுக்குத் தான் 'இராமர்' எனத் தாம் பெயர் சூட்டியுள்ளதாகவும் தெளிவுபடுத்தி விடுகின்றார். பிறிதோரிடத்தில் 'ஹிந்து உஹே மோஹி ராம் பியாரா, துருக் கஹே ரஹமானா, ஆபஸ் மேங் தோகுலர் ஈரி மூயே, மர்ம் ந காஹூ ஜானா' என்கிறார். அதாவது இந்து என்னை ராமன் என்கிறான்; துருக்கன் என்னைத்தான் ரஹமான் என்கிறான். இந்த இரண்டு வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நான் ஒருவனே என்றும் அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாது இவர்கள் ஒருவரையொருவர் இப்படி அடித்துக்கொண்டு சாகிறார்களே என்று இறைவனே மனம் நொந்து கொள்வதாக ஓரிடத்தில் உரைத்துச் சென்றுள்ளார்.

இந்து-முஸ்லீம்களிடையே பரகரத உண்டபலி இருந்தது போலவே கபீர்தாசர் காலத்தில் இந்து சமுதாயம் சாதிவருணப் பாகுபாடு காரணமாகப் பல பிரிவுகளாகப் பிரிவுபட்டுக் கிடந்தது. உயர்சாதிக்காரர்களான பிராமணர்களால் கீழ்ச்சாதிக்காரர்கள் குறிப்பாக சூத்திரர்கள் பலவகையான கொடுமைகளுக்கும் அவமானத்துக்கும் ஆளாக்கப்பட்டார்கள். நெசவுத் தொழிலாளியான கபீர்தாசரும் சூத்திரராகவே கருதப்பட்டார். அவமானப்படுத்தப்பட்டார். ஆனால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயர் கொள்கையில் உறுதியாகக் காலூன்றி நின்ற கபீர்தாசர் இந்தச்சாதிக்கொடுமையை வெளிப்படையாகவே எதிர்க்கத்

துணிந்தார். சசிமாநகரிலே வாழ்ந்த பண்டிதர்களுக்கெல்லாம் அறைகூவல் விடுத்து அவர்களை சாஸ்திரப் போருக்கு அழைத்தார். பிராமணர்கள் தங்களைப் பிறப்பாலேயே உயர் வருணத்தினர் என்று கூறிக்கொள்வதற்கான பகுத்தறிவுப் பூர்வமான காரணத்தை வினவினார். பிறப்பால் நீங்கள் உயர்ந்தவர்கள் என்றால் பிறரைப் போலத் தாயின் வயிற்றிலே பிறக்காது நீங்கள் வேறு வழியாக ஏன் பிறப்பதில்லை என்று கேட்டார். மற்றும் பிறந்த பின்னர் செய்யப்படும் சம்ஸ்காரங்களால் நீங்கள் உயர்ந்தவர்கள் என்றால் அந்த சம்ஸ்காரங்களைச் செய்து கொள்ளுவதற்கான உரிமையை சூத்திரர்களுக்கும் ஏன் அளிக்க மாட்டேன் என்கின்றீர்கள்? ஏன் பாரபட்சம் செய்கின்றீர்கள் என்று கேட்டார். சூத்திரன் உங்கள் செம்பைத் தொட்டுவிட்டால் ஐயோ தீட்டு தீட்டு என்று கத்துகின்றீர்கள். ஆனால் இருட்டியதும் கணிகையின் காலடியில் போய் விழுந்து கிடக்கின்றீர்களே: அப்பொழுது எங்கே போகிறது உங்கள் தீட்டு? அங்கே போய், சாதி குலம் விசாரித்தா உள்ளே நுழைகின்றீர்கள்? என்று அவர்கள் முகத்திரையைக் கிழித்தெறிகின்றார்.

ஆன்மீக வழியில் நடப்பவர்கள் பெண்களைக் காமப் பேய்களாகக் கருதி அவர்களைப் பழித்துரைப்பது கபீர்தாசர் காலத்திலும் இருந்து வந்தது. அந்த வகையில் கபீர்தாசரும் ஓரிரண்டு இடங்களில் பெண்களைப் பழிக்கின்றார்: ஆனால் அவர் சமுதாயக் கண்கொண்டும் அவர்களை நோக்குகின்றார். கற்பொழுக்கம் மிக்க பெண்டிர்க்கு ஒப்பானவர் உலகில் வேறு எவரும் இல்லை என்றும், கற்புடைய பெண் அழகற்றவளாக இருந்தாலும் கற்பற்ற ஆயிரம் அழகிகளைவிடச் சிறந்தவள் என்றும் அவர் கற்புடை மாதரைப் போற்றும்பொழுது, அவரது சமுதாய உணர்வே மேலோங்கி நிற்கின்றது. பல இடங்களில் அவர் தம்மையே ஒரு கற்புடைய மனைவியாகவும் இறைவனைத் தமது நாயகனாகவும் பாவித்துத் தம் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்.

மேற்கூறியவற்றிலிருந்து, கபீர் தாசர் சமயம் சார்ந்த இலக்கிய கர்த்தாவாக இருந்திருப்பினும் அவரிடம் சமுதாய உணர்வும் மேலோங்கி இருந்தது என்பது தெற்றென விளங்கும். இந்து முஸ்லீம் பகைமையை நீக்கி இந்துக்களிடையே இருந்து வந்த உயர்வு தாழ்வுகளை அகற்றிக் கொல்லாமை, ஊன் உண்ணாமை ஆகிய கொள்ளைகளைப் பரப்பி, அவற்றின் மூலம் நாடு முழுவதையும் முடிந்தால் அவனி முழுவதையும் ஒரு குடும்பமாக ஆக்கவேண்டும் என்பதே அவரது வாழ்நாள் கனவாக இருந்து வந்தது என்பதையே அவரது பாடல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியிலே பாடல்கள் இயற்றிய ஜாயசி, குத்பன் போன்ற இஸ்லாமிய மதத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படும் சூஃபி வகுப்

மைச் சேர்ந்தவர்களின் இலக்கியப் படைப்புக்களிலும் சமுதாய உணர்வு பிரதிபலிப்பதைக் காணலாம். இவர்களும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடும் எண்ணத்தோடும் செயல்பட்டவர்கள். ஆனால் கபீர்தாசரைப் போல் அல்லாது இவர்கள் தமது நோக்கங்களை மறைமுகமாகவே இலக்கியங்களின் வாயிலாக வெளியிட்டுள்ளனர். தம் காலத்து இந்து சமூகத்தினரிடையே வழங்கி வந்த அரச வம்சத்தினரின் காதல் கதைகளைக் கருவாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் பத்மாவுத் சித்திராவலி போன்ற உருவகக் காப்பியங்களைப் படைத்து அவற்றின் மூலம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வழிகோல முயன்றனர் இவர்கள். இவர்தம் நூல்களில் இந்துக் குடும்பங்களின் பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் சமய நம்பிக்கைகளும் மட்டுமின்றி அவர்களும் வணங்கும் சிவன், பார்வதி, விநாயகர், ஆஞ்சநேயர் போன்ற கடவுளர்களும் உரிய பக்தி சிரத்தையோடு சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாய உணர்வு படைத்த இந்திக் கவிஞர்களிடையே துளசிதாசருக்கு மிகச் சிறப்பானதோர் இடம் உண்டு. கபீர்தாசரின் போக்குக்கும் கொள்கைக்கும் முற்றிலும் மாறுபட்ட இவரும் இராமபக்தரே எனினும் இவர் உருவ வழிபாட்டை ஆதரிப்பவர். வருணாசிரம தருமத்தைப் போற்றுபவர். இந்து முஸ்லீம் தகராறுகளைப் பற்றி யாதொன்றும் வெளிப்படையாகக் கூறாதவர். இருப்பினும் தாம் வாழ்ந்த காலத்துக்குத் தேவைகளை நன்கு உணர்ந்தவர். பிளவு மனப்பான்மையாலும் அந்நியர் ஆதிக்கத்தாலும் சிறிது சிறிதாகச் செத்து மடிந்து கொண்டிருந்த இந்து சமுதாயத்துக்குப் புத்துயிரும் புத்துணர்ச்சியும் ஊட்டியவர். இன்றைக்கு வடக்கே வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்கள் சமுதாயம் துளசிதாசரின் படைப்பாற்றலில் பிறந்த சமுதாயம்தான் என்று கூறினால் மிகையாகாது. அந்த அளவுக்கு அவர் இயற்றிய ராம சரிதமானஸம் என்னும் அவரது பெருங்காப்பியம் வடக்குவாழ் மக்களிடையே ஆழ்ந்த தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. இந்தியாவிலுள்ள ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் இராமாயணம் இயற்றப் பெற்றிருந்தாலும் இந்தியில் துளசிதாசர் எழுதிய இராம சரிதமாஸத்துக்குக் கிடைத்திருப்பது போன்ற வரவேற்பும், பக்தியும், மரியாதையும் வேறெந்த மொழி இராமாயணத்துக்குக் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை.

இந்த அளவுக்கு துளசிதாசருடைய இராமாயணம் மதிப்பும், மரியாதையும் பெற்றுப் போற்றப்படுவதற்குக் காரணம் அதனுடைய சமய உணர்வும் கலையழகும் காப்பியக் கூறுகளும் மட்டுமின்றிச் சமுதாய வாழ்க்கைக்கு அஃது ஓர் ஒப்பற்ற நெறி நூலாகவும் திகழ்வதுதான்.

கவிதாயலி என்னும் தனது நூலில் துளசிதாசர் குறிப்பிடு வது போன்று அவர் வாழ்ந்த காலத்தில் மக்களிடையே சிறப் பாக இந்துககளிடையே வறுமையும் அறியாமையும் மலிந்து கிடந்தன. உழவர்கள் உழுவதற்கு நிலமின்றியும் பணியாளர் கள் பணியின்றியும் வணிகர்கள் வியாபாரமின்றியும் அல்லலுற்ற னர். பொருளாதார நிலையைச் சீர்குலைத்ததால் ஒழுக்கக் கேடும் சமூகத்தைப் பிணித்துக் கொண்டிருந்தது. அந்நியர் ஆதிக்கத்தால் இந்துக்களின் சமய நெறிகள் சீரழிக்கப்பட்டன. வருணாசிரம முறை எள்ளி நகையாடப்பட்டது. அதற்கேற்ப உயர்வருணத்தினர் என்று தம்மை கூறிக்கொண்டவர்களும் ஒழுக்கமின்றிக் காணப்பட்டனர். பெண்களிடமும் நல்லொழுக்கம் நாளுக்கு நாள் குறையத் தொடங்கி இருந்தது. சமய வாதி களோ என்றால் மக்களுக்குத் தக்க வழிகாட்டாது சைவம், வைணவம், சமணம், சாக்தம் என்று தமக்குள்ளே பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டு ஒருவரோடொருவர் முட்டி மோதிக் கொண்டிருந்தனர்.

இவற்றையெல்லாம் தம் வாழ்நாளில் கண்கூடாகக் கண்டு மனம் நொந்த துளசிதாசர் ஒழுக்கங்கெட்ட மக்களுக்கு முன் னுதாரணமாக அமைய வேண்டுமென்பதற்காகவே தமது நூலில் இராமன் போன்ற உத்தமபுத்திரனையும், கோசலை சுமித்திரை போன்ற தாய்மாரையும், தசரதனை நிகர்த்த தந்தையையும், இலக்குவன் பரதனைப் போன்ற இலட்சிய சகோதரர்களையும், அநுசூயை சீதாப்பிராட்டி போன்ற கற்புக்கரசிகளையும், ஆஞ்ச நேயரைப் போன்ற தொண்டரையும், சுக்கிரீவன், விபீடணன் போன்ற நண்பர்களையும், வசிஷ்டர், விசுவாமித்திரர், பாரத்து வாஜர், அகத்தியர் போன்ற ஒழுக்க சீலர்களான அந்தண முனிவர் களையும் படைத்து மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டி அவர் களை ஆற்றுப்படுத்தியுள்ளார். அறநெறிகளை அழிக்கும் அரக் கர்களின் கொடுங்கோன்மையை விரிவாகப் படம் பிடித்துக் காண்பித்து அறங்காவலனாகிய ஆண்டவனின் அருட்கரங்களால் அவர்களது அழிவையும் சித்தரித்துக் கொடுங்கோல் மன்னர்களின் காரணமாக மனம்புழுங்கிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த இந்து சமூகத்துக்கு ஆறுதலும் மனோதிடமும் அளித்துச் சென்றுள்ளார்.

அதுமட்டுமின்றி, அருவ வழிபாடு உருவ வழிபாடு என்றும், சைவம் வைணவம் என்றும், தமக்குள் பலவாறாகப் பிளவுபட்டுக் கிடந்த இந்து சமுதாயத்தை ஒன்றாக இணைக்க வேண்டுமென்ப தற்காகவே தமது நூலில் பற்பல உத்திகளைக் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக அவரது இராம சரிதமானஸம் முழுவதும்

சிவபெருமான் உமாப்பிராட்டியாரிடம் மிகுந்த பக்தி சிரத்தை யுடன் முழுமுதற் கடவுளாகிய இராமபிரானின் கதையைக் கூறு வதாக உரையாடல் பாணியில் அமைந்துள்ளது. மறுபுறம் இராமசரிதமானஸத்தில் வரும் இராமபிரான் இராவணனுடன் போருக்குச் செல்லும் முன் இராமேஸ்வரத்தில் சிவலிங்கம் பிர திஷ்டை செய்து சிவபெருமானை வழிபடுவதாகவும் கூறப்பட் டுள்ளது. அவ்வமயம் இராமபிரான் அங்குக் குழுமியிருந்தவர் களைப் பார்த்துக் கூறும் சொற்கள் துளசிதாசரின் சமுதாய உணர்வுக்கும் மதி நுட்பத்துக்கும் சான்று பகர்வனவாக உள்ளன. என்னுடைய பக்தன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் எவ னொருவன் சிவபெருமானை வெறுக்கின்றானோ அவன் கன விலும் அமைதி காணமாட்டான் என்று இராமபிரான் தன் வாயாலேயே கூறுவதாக அமைந்த இந்த வரிகள் சராசரி இந்துக் களின் உள்ளத்தில் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்திச் சைவ வைணவ ஒற்றுமைக்கு வழி கோலியிருக்கும் என்பதை நாம் எளிதில் ஊகிக்கலாம். இதேபோன்று இந்துக்களின் பிற வகுப்பின ரிடையேயும் ஒற்றுமையைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதற் காகத் துளசிதாசர் தாம் தலை சிறந்த இராமபக்தராக இருந்தும் தம் நூல்களில் பல இடங்களில் வேறு பல தெய்வங்களையும் போற்றிப் பரவுகின்றார். அனைவரையும், சீதாராமர் மய மாகவே தாம் காண்பதாகக் கூறித் தமது பரந்த உளப்பாங்கி னையும் ஆழ்ந்த சமுதாய உணர்வையும் வெளிப்படுத்து கின்றார்.

கபீர்தாசர், ஜாயசி, துளசிதாசர் ஆகியோர்களைப் போன்று கோரக்கராதர், குருநானக், நாமதேவர் முதலானபல சமய வழிப் புலவர்களும் தமது சமுதாய உணர்வுகளை வெளிப்படுத்தி மக்க ளிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழி வகுத்திருக் கின்றனர். ஆனால் இவர்களுடைய எழுத்துக்கள் எந்த அளவுக்கு மக்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்திச்சமூகத்தில் மாறுதல்களை உண்டாக்கின என்று ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கும் விடை மனநிறைவு தருவதாக இல்லை. அந்த வகையில் மேலே குறிப்பிட்டது போன்று துளசிதாசருக்கும் ஓரளவு ஜாயஸி போன்ற சூஃபி சமயக் கவிஞர்களுக்கும் தான் வெற்றி கிடைத் தது என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கின்றது. மற்ற கபீர் தாசர், குருநானக், கோரக்கநாதர் போன்றோரின் கருத்துக்கள் அவரவர்களின் சீடர்களால் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தனித்தனிச் சமய வகுப்புகளாகச் செயல்பட்டு வருகின்றன. கபீர் தாசர் விஷயத்தில் இன்னொரு கொடுமை என்னவென்றால் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்த

அவர் இறந்தபொழுது அவரது பூத உடலை எரிப்பதா அல்லது புதைப்பதா என்பதிலேயே அவரது இந்து சீடர்களுக்கும் முகமதிய சீடர்களுக்கும் இடையில் பெருத்த தகராறு ஏற்பட்டு விட்டதாக வரலாறு கூறுகின்றது. இன்னும் அவரது இந்து முஸ்லீம் சீடர்கள் அவருக்காகத் தனித்தனி மடங்களை நிறுவி நடத்தி வருகின்றனர். இந்து முஸ்லீம் பகைமையும் நாட்டின் பல பகுதிகளில் நீடிப்பதைக் காண்கிறோம். சாதிக் கொடுமைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. நாடளாவிய இச் சமுதாயத்தீமைகள் இன்னமும் தொடர்வதற்கான காரணங்களை நன்கு ஆராய்ந்து அவற்றை அறவே ஒழிப்பதற்கான முயற்சிகளைத் தொடர வேண்டியது இன்றைய தலைமுறையின் கடமையாகும்.

13. உருது இலக்கியங்கள் காட்டும் சமுதாயச் சிந்தனைகள்

டாக்டர் சையத் சபிபுல்லாஹ்

பொதுவாகச் சமய இலக்கியங்கள் மக்களுக்கு வாழ்க்கையின் நெறிமுறைகளை வகுத்தளித்துச் சமூகத்தைச் சீர்படுத்துகின்றன. மக்கள் சமுதாயத்தை மேம்படுத்தி வழி நடத்திச் செல்வதே சமய இலக்கியங்களின் முக்கிய குறிக்கோளாகும்.

உலகிலுள்ள பெரும்பாலான வளமான மொழிகளில், சமய இலக்கியங்கள், புதினங்கள், அம்மொழி பேசும் சமுதாயத்தில் உணர்வுபூர்வமான முக்கிய இடத்தைப்பெற்று, மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளில் பெரும்பங்கை வகிக்கின்றன.

உருது மொழியிலுள்ள இஸ்லாமியச் சமய இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இவ்விலக்கியங்களில் காணப்படும் வாழ்க்கை நெறிகள் உலகச் சமுதாய மேம்பாட்டிற்கும், உலகச் சமாதானத்திற்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளன.

இஸ்லாமிய நெறிகளின் சிறப்பம்சங்களான சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், தியாகத்தன்மை, சகிப்புத்தன்மை, பரந்த மனப்பான்மை, தீயதை வெறுத்தல், நல்லதை நாடுதல், அநீதியை அஞ்சாமல் எதிர்த்தல், நீதியை நிலைநாட்டுதல், ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கடைப்பிடித்தல், அடிமைத்தனத்தை ஒழித்தல், பெண்ணுரிமையைப் பேணுதல் முதலியவை உருது சமய இலக்கியங்களின் முக்கிய குறிக்கோள்களாகும்!

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உலக உயர் மறையைப் போதிக்கும் உருது இஸ்லாமிய சமய இலக்கியங்கள், உலக மக்களின் நல்வாழ்வுக்காகவும், மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காகவும், எல்லாம் வல்ல இறைவனால் வகுக்கப்பட்ட நன்நெறிகளையும் சிறந்த வழிமுறைகளையும் மக்களுக்கு நயம்பட விளக்கி மனிதகுலத்தின் மேன்மைக்கும் உலக அமைதிக்கும் வழிவகுக்கின்றன.

உருது மொழியிலுள்ள இஸ்லாமியச் சமய இலக்கியங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தலாம்,

1. எல்லாம் வல்ல இறைவனான அல்லாவால் அருளப் பட்ட ''திருக்குர் ஆன்'' என்ற புனிதப் பொதுமறையின் மொழி யாக்கங்கள் மற்றும் விளக்கவுரைகள்,

2. இறுதி இறைத்தூதரான முகம்மது (ஸல்) நபி அவர்கள் அவ்வப்போது வழங்கிய ''ஹதீசுகள்'' எனப்படும் புனித அறி வுரைகள் மற்றும் அருள்மொழிகள்,

3. நபிகள் நாயகமான முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ''சீரத்துன்னபி'' என்ற பெயரில் தொகுக் கப்பட்டுள்ள மேன்மை வாய்ந்த நூல்கள்,

4. ''சஹாபாக்கள்'' என்றழைக்கப்படும் முகமது நபி அவர்களின் சகாக்களும் தோழர்களும் அளித்துள்ள பொன் மொழிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைச் சரிதங்கள்,

5. கற்றறிந்த இஸ்லாமிய வல்லுனர்களால் திருக்குர் ஆனின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப் பட்ட ''ஷரீயத் சட்டங்கள்'' எனப்படும் பொது நீதிகள், மற்றும் இஸ்லாமியர் வாழ்க்கையின் நெறிமுறைகள், சமூகச் சட்டத் திட் டங்கள்,

6. இஸ்லாமியச் சமய நெறிகள் மற்றும் உணர்வுகளை அடிப் படையாகக் கொண்டு இயற்றப்பட்ட சமயக் காவியங்கள் மற்றும் கவிதைப் படைப்புகள் முதலியவை.

இங்கு நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேற் குறிப்பிட்ட பல்வகைச் சமய இலக்கியங்களையும் அவை புலப்படு தும் சமுதாய உணர்வுகளையும் விளக்கமாக ஆய்வுக்கு உட்படுத்த இயலாத நிலையில், அவற்றுள் மிக முக்கிய அடிப்படை இலக்கி யங்களான திருக்குர் ஆனின் விளக்கவுரைகளையும் நபிகள் நாயகம் அவர்களின் சிறப்புமிக்க வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாக எடுத்துரைத்து, இவற்றால் சமுதாய மேம்பாட்டிற்கு ஏற்பட்ட பயன்களைக் கோடிட்டுக் காட்டி இவ்வுரையை முடிவுக்குக் கொண்டுவர விழைகிறேன்.

உருது மொழியில் உள்ள மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய சமய இலக்கியங்கள் அனைத்தும் இறை மறை எனப்படும் ''திருக்குர் ஆனின்'' போதனைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. திருக்குர் ஆனின் போதனைகளின் சிறப்பம்சம் யாதெனில், அவை இறைவனால் அருளப் பெற்றவை; மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவானவை. வாழ்க்கையின் இரகசியங்களையும் மனித வாழ்வின் பயன்களையும் விளக்குபவை. உலகியல் உண்மை

களைச் சுட்டிக்காட்டி மனிதனின் முக்கிய கடமைகளை வலியுறுத்தி மனிதகுல மேம்பாட்டிற்கு வழிவகுப்பவை.

திருக்குர் ஆனில் இறைவனால் வகுக்கப்பட்ட வாழ்க்கை நெறிமுறைகளையும், சட்ட திட்டங்களையும் செயல்முறைப் படுத்தி, அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்த அரேபியச் சமுதாயத்தை இருபதாண்டுகளில் அகிலமே போற்றும் மேன்மை படைத்த சமுதாயமாக மாற்றிக் காண்பித்த முகமது நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு, உலகச் சமுதாயத்திற்கு விடிவெள்ளியாக விளங்குகிறது. மற்றும் நபிகள் நாயகம் அவர்களின் சகாக்களான ''சஹாபாக்களின்'' வாழ்க்கை வரலாறுகளும் சமுதாய மேம்பாட்டிற்குக் கலங்கரை விளக்குகளாக விளங்குகின்றன.

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு அரபு நாட்டு மக்கள் முரட்டுத்தனத்திற்கும் முரண்பாடுகளுக்கும் மொத்த உருவமாக விளங்கினர். பொறாமை, பேராசை, வீண் வீம்புகள், ஒழுக்கமின்மை, பெண் கொடுமை, அடிமைகள் வியாபாரம், வட்டிக் கொடுமை, இனவெறி, மது மயக்கம், கொலை, கொள்ளை, சூதாட்டம் முதலிய அனைத்துத் தீமைகளுக்கும் அதிபதிகளாக விளங்கினர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தாம் பெற்ற பெண் குழந்தைகளைத் தாமே உயிருடன் குழிதோண்டிப் புதைக்கும் கல் நெஞ்சம் கொண்டவர்களாக விளங்கினர்.

இத்தகைய சீரழிந்து சிதறிக் கிடந்த சமுதாயத்தை ஒன்று சேர்த்துச் சீர்படுத்தும் மிக மிகக் கடினமான பணியினை முகமது நபி அவர்கள் இறைவனின் அருள் பெற்றுச் செவ்வனே செய்து முடித்தார். அச்சிறிய சமுதாயத்தை உலகச் சமுதாயமாக விரிவு படுத்தி அனைத்துலக அமைதிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் வழி வகுத்தார். ஆனால் இதற்காக நபிகள் நாயகம் அவர்கள் பட்ட துன்பங்களும் செய்த தியாகங்களும் அரிதினும் அரிதானவை, இன்றும் என்றும் ஒளி வீசும் வைரங்களாகச் சமய இலக்கியங் களில் அவை மிளிர்கின்றன.

வழிதவறிய மக்களை நேர்வழிக்குக் கொண்டு வருவதற்காக அவர் மேற்கொண்டது அகிம்சை வழிபாகும். தம்மினத்தவரின் வெறுப்பையும் கொடுமையையும் அவர் சகிக்க வேண்டியதாயிற்று. நெருங்கிய உறவினர்கள் உதறித்தள்ளினர்; சொந்த வீட்டையும் நாட்டையும் விட்டு வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டது. பலப் பலச் சோதனைகளுக்கு ஆளாகியும் சமூகச் சீர்திருத்தத்தில் உறுதியுடன் ஈடுபட்டார். அவருக்கு ஏற்பட்ட ஒவ்வொரு தடைக்கல்லையும் வெற்றிக்குப் படிக்கல்லாக மாற்றிக் காண்பித்தார். தம்முடைய குறிக்கோளில் படிப்படியாக வெற்றிகொண்டு, பல்லாயிரக் கணக்கான மக்களின் இதயங்களை

வெற்றிகொண்டு, ஆட்சியும் அதிகாரமும் தம் கைக்கு வந்ததும் அதனைப் பயன்படுத்தும் தேவையே இல்லாமல், அன்பும் அரவணைப்பும் கொண்ட இயல்பான முறையில், மக்கள் தாமே மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில், சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் காட்டினார்.

கடுமையான சட்டங்களாலும், தண்டனைகளாலும் இன்றுவரை உலகின் மிக மிக முன்னேறிய நாடுகளிலும் ஓரளவிற்கேனும் நிறைவேற்ற முடியாத மதுவிலக்கை, மிகவும் குறுகிய காலக்கட்டத்தில், இயல்பாக, படிப்படியாக, மனோதத்துவ ரீதியில், மதுவின் மீது மக்களுக்கு அருவருப்பை ஏற்படுத்தும் வகையில், அவ்வப்போது தாம் மதுவை மிகவும் வெறுப்பதாகவும், பிறகு தொழுகையின்போது மது அருந்த வேண்டாம் என்றும் இறைக் கட்டளைகளாக எடுத்துரைத்தார். இதனால் மதுவின் மீது மோகம் குறைந்து அது மக்கள் மனங்களிலிருந்து விலக ஆரம்பித்தது. கடைசிக் கட்டமாக இறை வாக்கான ''குர் ஆனின்', உத்தரவு இப்படியாக வந்தது:

> ''இறை நம்பிக்கை உள்ளவர்களே! மதுவும், சூதாட்டமும் சாத்தானின் சாகச வலைகளாகும். ஆகவே இவைகளை தவிர்த்திடுவீர். இதனால் நிச்சயமாக பெரும்பயன் அடைவீர். உங்களுக்குள் பகைமையையும் குழப்பத்தையும் உண்டாக்கவே சாத்தான் உங்களை மதுவின் மீதும் சூதாட்டங்களின் மீதும் நாட்டம் கொள்ளச் செய்கிறான். இதனால் உங்களை இறைவணக்கத்திலிருந்தும், இறைத்தூதரின் நன்நெறிப் பாதையிலிருந்தும் தடுத்து விடலாம் என்பதே சாத்தானின் நோக்கமாகும். இச்சூட்சியைப் புரிந்துகொண்டு திருந்திடுக...''

திருக்குர் ஆனின் இக்கட்டளையை நபிகள் நாயகம் வாயிலாக அறிந்த மறுநிமிடமே மதீனா நகரில் மதுக்கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த அத்தனை மதுக் குடங்களும் உடைக்கப்பட்டன; தெருக்களில் மது ஆறாக ஓடிய காட்சி உலக சரித்திரத்தில் ஒன்றாகும்.

இதனால் இரு பெரும் சமூகத் தீமைகளான மது பழக்கமும், சூதாட்டமும் நொடியில் மறைந்து போயின. ஒருபுறம் இதன் பலனாகப் பொருளாதார மேம்பாடும் மறுபுறம் ஒழுக்க மேம்பாடும் சமூகத்தில் ஏற்பட்டன. இன்றுவரை இஸ்லாமியர்களின்

அடிமனதில் ஆணிவேராக மதுவிலக்குப் பதிந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. இச்சமூகப் பொருளாதாரத் தீமைகளை, சட்டத்தாலும், தண்டனையாலும் இல்லாமல் மனோதத்துவ ரீதியில் வெறுக்கத்தக்க செயல்களாக மனங்களில் பதிய வைத்த பெருமை, பெருமானார் முகமது நபி அவர்களையே சாரும்.

இதைப் போலவே அக்காலத்தில் பொதுவாக உலகெங்கிலும் மனித அடிமைகள் வியாபாரம் வழக்கில் இருந்து வந்தது. அரேபியர்களும் மனித அடிமைகளை விலைக்கு வாங்கிக் கொடுமைப் படுத்தி வந்தனர். மனிதன் மனிதனுக்கு அடிமையாக வாழ்வது பெரும் அநீதியாகும் என்பதை உணர்ந்த நபிகள் நாயகம் அவர்கள், மனித அடிமைகளைப் படிப்படியாக விடுதலையடையச் செய்தார். ''இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களே! உம்மிடமுள்ள மனித அடிமைகளுக்குச் சம அந்தஸ்தைக் கொடுத்து தக்க முறையில் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று முதலில் அடிமைகளின் நலனைக் காக்கும்படி வழி செய்தார். அடிமைத்தனத்தை இறைவன் விரும்பவில்லை என்று எடுத்துரைத்து, அவர்களை விடுதலை செய்யும் மனப்பக்குவத்தை உண்டாக்கினார். பிறகு ''இஸ்லாமியர்களே! உம்மிடமுள்ள அடிமைகளை விடுதலை செய்துவிடுங்கள். செல்வம் படைத்தவர்களே! மற்றவர்களிடம் இருக்கும் அடிமைகளையும் விலைக்கு வாங்கி விடுதலைசெய்து விடுங்கள். இறைவன் இதற்குப் பெரும் பயன்களை உங்களுக்கு அளிப்பான்'' என்று ஊக்கப்படுத்தி அடிமைகளுக்கு விடுதலை கிடைக்கும்படி செய்தார். அப்படி ஒரு பணக்கார யூதரிடம் அடிமையாக இருந்தவர்கள் ஆப்பிரிக்க நீக்ரோவான ஹஜ்ரத் பிலால் அவர்கள். பிலால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன் யூத எசமானன் அவரைப் பெருங் கொடுமைகளுக்கு ஆளாக்கினார். இக்கொடுமையை அறிந்த முகமது நபி அவர்கள் உடனே இஸ்லாமியச் செல்வந்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். உடனடியாக பிலால் அவர்கள் கொடுமையாளனிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அந்த நீக்ரோ அடிமையான பிலால் அவர்கள் தான், மதீனா பள்ளிவாசலுக்குப் பாங்கு ஓதும் முதல் நபராக நியமிக்கப்பட்டார். மேல்குடி அரேபியர்களைவிட மேலான அந்தஸ்து நபிகள் நாயகம் அவருக்கு அளித்தார்.

அடிமைப்பெண்களின் அந்தஸ்தும் மேம்படுத்தப்பட்டது. அவர்களை விடுதலை செய்து எசமானர்களே திருமணம் செய்து கொள்ளும்படி வலியுறுத்தப்பட்டது. இதனால் அடிமைப் பெண்ணுக்குச் சம அந்தஸ்தும் சம உரிமையும் பெற்ற மனைவியின் உயர் ஸ்தானத்தை அடையும் வாய்ப்பு உண்டாயிற்று.

பெண்ணுரிமை அறவே மறுக்கப்பட்டு வந்த அரேபிய சமுதாயத்தில் முகமது நபி அவர்கள் இறைவனின் கட்டளைப்படி பெண்ணுக்குச் சமஉரிமை அளித்தார். திருமணத்திற்குப் பெண்ணின் சம்மதம் கட்டாயமாக்கப்பட்டது. பெண் குழந்தைகளை உயிருடன் புதைக்கும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

பூர்வீகச் சொத்தில் பெண்ணுக்கும் பங்களிக்கும் சட்டங்கள் இறை மறையான திருக்குர் ஆனில் வகுக்கப்பட்டன. அது வரை உலகில் எந்த மதத்திலும் எந்தச் சமுதாயத்திலும் பூர்வீகச் சொத்தில் பங்கு அளிக்கப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

அதுமட்டுமன்று. விதவா விவாகம் வெறுக்கத் தக்கதாகக் கருதப்பட்ட அரேபிய சமுதாயத்தில் முகமது நபி அவர்கள், தாமே தமது இருபத்தைந்தாவது வயதில், ஏறத்தாழ நாற்பது வயதுடைய விதவையான கதீஜா பிராட்டி அவர்களைத் திருமணம் செய்துகொண்டார்; இதன் மூலமாகச் சமூகத்தின் விதவைகளின் மறுவாழ்விற்குத் தாமே வழிகாட்டியாகத் திகழ்ந்தார்!

பொருளாதாரத் துறையிலும் இஸ்லாம் ஆன்மீகத்தை நுழைத்துச் செல்வத்தின் பயனைப் பரவலாக்குகிறது. ஜகாத் என்ற செல்வத் தியாகக் கோட்பாட்டினைப் பேணுதல் ஒவ்வொரு வசதிபடைத்த இஸ்லாமியரின் கடமையாகும். நபிகள் நாயகம் இதனை மிகவும் நயம்பட நடைமுறைப்படுத்தினார். இறைக் கட்டளைப்படி வருட வருமானத்தில் செலவு போக மீதியுள்ள செல்வம், தானியம் அல்லது சொத்தின் மதிப்பில் நூற்றுக்கு இரண்டரை ரூபாய் வீதம் ஏழை எளியோர், ஏழை உறவினர்கள், கடனாளிகள், முதியோர் ஆகியோர்க்கு அளித்திட வேண்டும்.

ஜகாத் அளிப்பது மனமுவந்த செயலாக இருக்க வேண்டும். தம் செல்வத்தை இறைவன் சுத்தப்படுத்திப் பாதுகாத்து மேலும் பெருககச் செய்கிறான் என்ற முழு நம்பிக்கையுடன் இறைவனை மட்டுமே சாட்சியாக வைத்து இத்தர்மத்தை செல்வந்தன் செய்கிறான். இதனால் மிக்க மன நிம்மதியும் ஆன்ம திருப்தியும் பெறுகிறான். ஒரு புறம் இந்த உதவித் தொகை ஏழை எளியோரின் உரிமையாக அறிவிக்கப்பட்டாலும் மறுபுறம் தம் உரிமையை இவர்கள் தட்டிக்கேட்கவோ, கணக்குப் பார்க்கவோ அனுமதி கிடையாது. இதன் நோக்கம் என்னவென்றால் பிறர்க்கு உதவுதல் மேன்மையான செயல் என்றும், உதவி பெறுதல் தாழ்மையான செயல் என்றும் மனிதன் உணர வேண்டும் என்பதேயாகும்.

மேலும் 'ஜகாத்' என்று வரையறுக்கப்பட்ட தொகையானது குறைந்த பட்சக் கட்டாய தர்மமாகும். அதிக பட்சமாகத்

தம் செல்வம் முழுவதும் தேவைப்படுவோர்க்கும் நற்காரியங்களுக்கும் அளித்திட நபிகள் நாயகம் அவர்கள் தம்மையே உதாரணமாகக் கொண்டு வலியுறுத்தியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் தேவைப்படுவோர்க்கு "காசேஹசனா" என்ற கடனுதவி அளித்திடவும் வழிவகுக்கப்பட்டது. இது வட்டியில்லாக் கடனாகும். கடனாளியால் ஒருவேளை அக்கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டால் அதனைத்தள்ளுபடி செய்திடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கான பன்மடங்கு பயனை இறைவன் செல்வந்தனுக்கு அளிப்பான் என்ற உறுதிமொழியும் அளிக்கப்பட்டது. வட்டி வியாபாரம் பெரும் பாவமாக அறிவிக்கப்பட்டு வட்டிக் கொடுமையிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றிய பெருமையும் நபிகள் நாயகத்தையே சாரும்.

ஆக இஸ்லாம் சமயமானது மனித வாழ்க்கைக்குத் தலைசிறந்த கட்டுக்கோப்பான அமைப்பை அளிக்கிறது. 'திருக்குர்ஆன்' மனித வாழ்க்கைக்குத்தொடக்கம் முதல் முடிவுவரை ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப்படும் இயல்பான நேர்மையான நெறிகளையும் சட்டதிட்டங்களையும் வழங்குகிறது. இறுதி இறைத்தூதரான முகமது நபி அவர்கள், தம் வாழ்நாள் முழுவதும் அந்த அறநெறிகளையும் சட்டதிட்டங்களையும் செயல் முறைப்படுத்தி உலகில் மனிதன் ஆற்றவேண்டிய அனைத்துக் கடமைகளையும், தம்மையே, தம் வாழ்க்கை முறையையேமுன்னுதாரணமாகக் கொண்டு விளக்கியுள்ளார்.

இவற்றையே இஸ்லாமிய உருது இலக்கியங்கள் சிறப்புற விளக்குகின்றன. இவற்றின் வழியாக நாம் பெறும் சமூக உணர்வுகள், நம்மை உயர் பண்புள்ளவர்களாகவும் உயர் மனிதர்களாகவும் உருவாக்க உதவும்.

கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை வெளியீடுகள்

வீரமாமுனிவ மாலைகள்	டாக்டர் சூ. இன்னாசி	(1985)	ரூ.18
திருக்குறள் வீரமாமுனிவர் உரை	டாக்டர் சூ. இன்னாசி எஸ். சௌந்தர பாண்டியன்	(1985)	ரூ.25
சௌமியத்துறை	டாக்டர் சூ. இன்னாசி	(1986)	ரூ.40
கிறித்தவ நாடக இலக்கியம்	டாக்டர் சூ. இன்னாசி பெ. கோவிந்தசாமி	(1988)	ரூ.30
கவிதைச் செல்வம்	டாக்டர் சூ. இன்னாசி	(1989)	ரூ.25
புதினப் படைப்புகள்	டாக்டர் சூ. இன்னாசி வி. ஆனந்தமூர்த்தி	(1990)	ரூ.40
தமிழியல்	டாக்டர் சூ. இன்னாசி ஜே. பி. விக்டோரியா	(1990)	ரூ.20